www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜூலை. 04-10,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 316

## நிலப்பிடிப்பும் நிலவரமும்

## உள்ளே புலிகள்



## போர்க்கொள்கையும் புதிய அடிமைகளும்





## அஜ்மீர் அரண்மனை இரகசியங்கள்

## ஆனையிறவுச் சமர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

# முரசம்

## அமைச்சரின் துணிச்சல்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

அடுத்து எந்தத் தேர்தலை
நடத்துவது என்று
அரசாங்கம்
ஆராய்ந்து கொண்டிருக்கிறது!

ஜனாதிபதித் தேர்தலா?
பாராளுமன்றத் தேர்தலா?
எதனை முதலில்
நடத்தி முடிக்கலாம்
என்பதே சிந்தனை!

அரசியல் தீர்வு பற்றிய
சிந்தனைகள்
அறவே கிடையாது!

அவ்வப்போது உதட்டளவில்
"அரசியல் தீர்வை
கண்டே தீருவோம்!"
என்று முழங்குவது
சாணக்கிய சம்பிரதாயம்!

அடுத்த தேர்தல்களுக்கும்
ஆளும் தரப்பு
நாடி நிற்கும் மூலதனம்
யுத்த வெற்றிகளே!

தமிழ் பேசும் தரப்பின்
வாக்குகளை
தம்மால் பெற முடியாது
என்பது ஆளும் தரப்புக்கு
நன்கு விளங்கிய விஷயம்!

ஆகவே, சிங்கள வாக்கு வங்கிகளை
விரோதித்துக் கொள்ளும்
எத்தகைய விஷப் பரீட்சையிலும்
அம்மையார் அரசு
ஈடுபடப் போவதில்லை!

செத்த பொதி
செத்ததுதான்!

மூடிய சமாதானக்கதவு
மூடியதுதான்!

வீரவிதானக்காரர்கள்
வளர்ந்து கொண்டுதான் இருப்பர்!

பேரினவாதம்
கோர முகத்தோடு
கொக்கரிக்கத்தான் போகிறது!

போர்க் கொள்கையையே
நம்பியிருப்பதால்
பேரினவாத முகாமுடன்
சமரசப் போக்கையே
அரசு கைக்கொள்ளும்!

போர்க்களத்தில்
முப் படையினரையும்,
தேர்தல் களத்தில்
பேரினவாத சக்திகளையும்
நம்பித்தான்
அடுத்த தேர்தல்களை
அரசாங்கம் சந்தித்தாகவேண்டும்!

ஏற்கனவே,
பேரினவாதிகளில் ஒருவரான
ஆரிய பொலகொடவுக்கு
தென் மாகாணசபைத் தேர்தலில்
வெற்றி வாங்கிக் கொடுத்துள்ளனர்!

'பேரினவாதம் ஒழிக' என்று
ஒரு புறம் கூறியபடி
பேரினவாதி ஒருவருக்கு
ஆசனம் வழங்கப்பட்டுள்ளது!

பொதுஜன முன்னணியில்
இணைந்திருக்காதுவிட்டால்
ஆரிய பொலகொட
வெற்றி பெற்றிருக்க முடியாது!

பேரினவாதத்தை
தோற்கடிக்கும் எண்ணம்
ஆளும் தரப்புக்கு இருக்குமானால்,
ஆரிய பொலகொட போன்றோரை
கைதூக்கி விடமாட்டார்கள்!

எந்தப் பேயுடன் சேர்ந்தாவது
அதிகாரத்தைத் தக்கவைக்கும்
அரசியல் சுயநலமே
ஆளும் தரப்பிடமும்
மேலோங்கி வருகிறது!

எதிரணிகளான,
ஐ.தே.கட்சியும்,
ஜே.வி.பியும்கூட
பேரினவாத முகாமோடு
சமரசப் போக்கையே
கைக்கொண்டுள்ளன!

இன உரிமைப் போரை
வகுப்புவாதம் என்று
வியாக்கியானம் செய்கிறது
ஜே.வி.பி!

வீர விதான போன்ற
பேரினவாத சக்திகளையிட்டு
மௌனம் சாதிக்கிறது!

மொத்தத்தில்,
தென்னிலங்கையில்
ஆளும் தரப்பாயினும்
எதிரணிகளாயினும்
பேரினவாதத்துக்கு எதிரான
உளப்பூர்வமான நிலைப்பாடுகளுக்கு
என்றும் துணியப்போவதில்லை!

'இந்த ஆண்டுக்குள் தீர்வு'
'அடுத்த தேர்தலுக்குமுன் தீர்வு'
என்றெல்லாம்
அரசாங்கம் கூறுவதும்,
இந்த அம்புலிமாமா கதைகளை
நம்புவது போல நடிக்கும்
மிதவாத தமிழ்க் கட்சிகள்
தமிழ் மக்களிடம் கூறுவதும்
போதும்! போதும்!

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்'
உடனே தேவை!
அரசியல் பேச்சை ஆரம்பி!
போரை நிறுத்து!"
என்று கோருவதுதான்
இன்றையத் தேவை!

அமைச்சர் பொன்னாண்டோ புள்ளே
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
அவசியம் என்றுள்ளார்.
'ஆயுதங்களை கீழேவைக்காது
புலிகள் பேச்சில்
பங்கு கொள்ளலாம்' என்கிறார்

யார் குற்றியும் அரிசியாகட்டும்.
யார் கூறினாலும்
நியாயம் வலுக்கட்டும்!

சாத்தியமான யோசனையை
அரசாங்கத்திற்குள் இருந்தே
வெளியிட்டிருக்கும் அமைச்சரை
மனதாரப் பாராட்டுகிறோம்!

அரசுக்குள் இருக்கும்
தமிழ் அமைச்சருக்குள்ள
இந்த யதார்த்தமான நோக்கும்
துணிச்சலான போக்கும்கூட
தமிழ்க் கட்சிகளுக்கு இல்லையே
என்று மனம் வருந்துகிறோம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பஞ்சாட்சர மகிமை

சைவ நெறியில் திருநீறும் பஞ்சாட்சரமும் சிறந்த சாதனங்களாகும். உடலைத் தூய்மைப் படுத்த அணிவது திருநீறாகும். அகத்தைத் தூய்மையாக்க நாவினால் ஜெபிப்பதற்கு திருவைந்தெழுத்தாகிய பஞ்சாட்சரம் சிறந்த மந்திரமாகும். பஞ்சாட்சரமாகிய ஐந்தெழுத்தும் வெறும் எழுத்துக்களல்ல. ஐந்தெழுத்தும் ஐந்து பொருளைத் தரும் ஐந்து பதங்கள் ஆகும்.

திருவைந்தெழுத்தை தூயநெஞ்சோடும், பயபக்தியோடும் ஓதினால் மிகப் பெரிய நன்மையுண்டாகும். வேத மந்திரங்கள் போன்று மிகவும் சக்திவாய்ந்தது. வேத ஹிருதயமான திருவைந்தெழுத்தாகும். பிராணாயாமத்தை முறைப்படி செய்யும் சிவயோகியருக்கு இம்மந்திரம் பாதுகாப்பாக உள்ளது. தீயவர்கள்கூட இம்மந்திரத்தை ஓதினால் இறைவனின் திருவருளுக்குப் பாத்திரமாவார்கள். முற்பிறப்பில் செய்த பாபவினை,களையும் மா மருந்து பஞ்சாட்சரமாகும். எல்லா மந்திரங்களும் பிரணவத்துடன் சேர்த்தே ஓதுதல் வேண்டும். பஞ்சாட்சர மந்திரம் ஒன்று மட்டுமே இவ்விதி இல்லாதது. பிரணவத்தைச் சேர்த்தும் ஓதலாம். சேராமலும் ஓதலாம். பலன் இரண்டிற்கும் ஒன்றே. பஞ்சாட்சர மந்திரத்தை உறங்கும் போதும், உறங்காத போதும் எந்நேரமும் மனமுருகிய வண்ணம் மனதைப் புலன் வழி செலுத்தாது ஒரு மனதோடு ஜெபித்து வந்தால் இம்மைத் துயர் நீங்கி மறுமையில் மோட்சவாழ்வு கிட்டும் என்பதில் ஐயமில்லை. பிறவிப்பிணி அகற்றும் மா மந்திரம் பஞ்சாட்சரமாகும்.

திருமதி.சி.பாலாம்பிகை, மெல்புர, சிலாபம்.



## மார்க்க ஞானமுடையவரே சிறந்தவர்

"யா அல்லாஹ் எல்லா மனிதர்களில் உன்னிடத்தில் அதிக சிறப்புடையவர் யார்?" என்று மூஸா (நபி அலை) அவர்கள் வினவ; "எனது மார்க்க அறிவு ஞானங்களை எவர் கற்றுக்கொள்கின்றனரோ அவரே என்னிடத்தில் அதிக சிறப்புக்குரியவர்!" என்று இறைவன் கூறினான்.

மனிதனிடத்தில் இருக்கும் அறிவு, கல்வி இவைகளுக்காகவே கருணையுள்ள ரஹ்மான் அவனுக்கு மேம்பாட்டைக் கொடுத்திருக்கிறான்.

மனிதனே! நீ மார்க்க அறிஞனைத் தேடினால்தான் அறிவைப் பெற முடியும். நீங்கள் எப்படி ஒரு நல்ல செயலைச் செய்ய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதை விடவும் நல்ல செயல் பெரியதல்ல? ஒரு காலம் வரும். அந்தக் காலத்தில் செயல் புரிவதைவிட மார்க்க அறிவைக் கற்றுக்கொள்வதே சிறந்ததொரு செயலாக இருக்கும்.

ஈமான் என்பது நிர்வாணம். அதனுடைய ஆடை பயபக்தி. அதன் வெளிப்படை அறிவு. வஞ்சகனிடம் உண்மை அறிவு இருக்க முடியாது.
(முஹம்மது நபி)

உலகில் எத்தனையோ அறிவு இருக்கிறது. இவை யாவற்றிலும் சிறப்பு வாய்ந்தது இறைவனைப் பற்றிய அறிவு. ஏனென்றால் அவன் எல்லாவற்றையும் விட மேலானவன்.
இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

பக்திக்கு பாதகம் ஏற்படாமல் அறிவைத் தேடுங்கள்! அறிவுக்குப் பாதகம் ஏற்படாமல் பக்தியில் ஈடுபடுங்கள்.
(ஹசன் பசரி (ரஹ்)

தொகுப்பு: வை.எம்.தாஹிர்கரீம்- கல்முனை-06.

# கவிதைப் போட்டி இல.313



## பரிசுக்குரிய கவிதை

### என்ன சிந்திக்கிறாய்?

கலை முகில் மறைத்த
வெண்மதிபோல்
வலையினுள் மறைந்த தண்மதியே!
மலைத்து நீ என்ன சிந்திக்கிறாய்?
அழிக்கும் போரையா
நிந்திக்கிறாய்?

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### வீறு கொண்டெழு!

சிலந்தி வலைக்குள்
சிக்குப்பட்ட தும்பியாய்
அழகி நீ இவ்வலைக்குள்
அகப்பட்டு விம்மினால்...
விடுதலை வராதம்மா!
வீறுகொண்டெழு!
கொடுமைகளை அழித்தொழிக்கும்
கோதையரின் காலம் தானே இது!

கு.திருமால்-அமிர்தகழி-மட்டக்களப்பு.

### நிலவே மறையாதே

சல்லடைத் திரைக்குள்ளே-இந்த
வெள்ளி நிலா மறைந்திடுமா?

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### (க)வலைகள்

பெண்ணே கவனம்!
பொதியைப் போல்
கண்ணுக்குத் தெரியாத
வலைகளும் உண்டு!

க.நாகராசா-நுணாவில்.

### கோரிக்கை

மலராகவும்
மதியாகவும்
கூறியது
போதும்!
இனியாவது
எங்களை
மானிட ஜென்மங்களாக
மதித்திடுங்கள்!

புவனேஸ்வரி பன்னீர்செல்வம்-பசறை.

### பின்ன(ா)ல்

கன்னச் சிவப்பழகும்,
கண்ணின் கயலழகும்,
விண்விற் புருவழகும்,
சின்னப் பிளவிதழும்,
என்னாச்சுக் கண்மணியே?
சின்னாபின்னமென-வலை
பின்னால் தெரிகிறதே!

த.சிவகுமார் (ஈச்சையூர்ச்சிவா)

### கிருஷாந்தியா?

சிறைபட்டுக் கிடக்கும்
சிங்காரியே
நீயும் ஒரு நாளைக்கு
கிருஷாந்தியா?

திருமதி.அ.நடராசா-
கொம்மாதுறை, செங்கலடி.

### சிறை

என் விழிகள் வெள்ளிகள்
என நீவிர் சொல்லிடலாம்!
ஆனாலும் என் வாழ்க்கை
இரும்புக்குள்தான் அறியீரோ?

எஸ்.திக்கபக்தன்-அல்வாய்.

### முகத்திரை

மகராசி உனக்கு
முகராசி இருக்கு-உன்
மகத்துவம் பரவ
முகத்திரை அகற்று!

கே.அரசேஸ்வரன்-யாழ்ப்பாணம்

### யார் வைத்தது?

சீதையை
சிறை வைத்தவன்
இராவணன்.
இளங்குயிலே
யார் உன்னை
சிறை வைத்தது?

அ.யாழினி-மட்டக்களப்பு

### யார்?

யார்? பயந்து
ஒளிந்திருந்து பார்ப்பது?
கிரிஷாந்தியா?
ரீட்டாவா?
அல்லது
சுசந்திகாவா?

சுஜோ-மல்லாவி.

# கவிதைப் போட்டி இல.316



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.07.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.316
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## ஜோசியரா?

சிந்தியா என்ன ஜோசியரா? உலகக் கிண்ணப் போட்டி பற்றிய அவரது கணிப்புக்கள் பலவும் துல்லியம். ஆட்ட நாயகன் குளூஸ்னர் என்று படத்தோடு முந்தித் தந்தார் சிந்தியா. அவரே ஆட்டநாயகனாகத் தெரிவானதும் எமக்கு சிந்தியா ஞாபகம்தான் வந்தது.

வே.அஞ்சலா, நீர்கொழும்பு



# வாசக(ர்)சாலை

முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* எம்.எம்.றிபாஜி, திருமலை.
* ஸபீர் ஹாபீஸ், ஏறாவூர்.
* கு.நந்தகுமார், நுவரெலியா.
* கே.எஸ்.சுப்பிரமணியம், நெல்லிமலை.
* எஸ்.ராஜேஸ்சங்கர், மூதூர்.
* இரா.தமிழ்ச்செல்வன், செங்கலடி
* எஸ்.சதீஸ்வரன், வத்தளை.
* ஏ.கே.பாலன், திருமலை.
* நல்லூர் சித்தன், யாழ்ப்பாணம்.
* நா.தயாபரன், கிளிநொச்சி.
* பீட்சீலைட் மார்ட்டின், கிருலப்பனை.
* செல்வி ஜனார்த்தனி பாஸ்கரலிங்கம், பெரியகல்லாறு-02.
* கணேசன் தனலெட்சுமி,பொகவந்தலாவ.
* ஆர்.பிரியா, வவுனியா.
* ஏ.தமிழ்மாறன், பொகவந்தலாவ.
* கறுப்பையா மஞ்சுளாதேவி, குவைத்.
* ஆ.கணபதி, ஜெர்மன்.
* எம்.முத்துக்குமார், மஸ்கெலியா.
* கே.குமார், கனடா.
* எம்.எம்.முத்துராஜா, சுவிற்ஸர்லாந்து.
* பா.ராகவன், ஃபிரான்ஸ்.
* ராசதுரை, திருமலை.
* அ. அன்ரன், ஜெர்மனி.
* பி. சூரி, கொழும்பு.
* எஃப். ஏ. ஹபீல், சவுதி அரேபியா.
* த. மகாதேவன், தம்பிலுவில்.
* ரா. மனோஹரன், ஹேவாஹெட்ட.
* ஆர். மகேஸ்வரி, கொழும்பு-02.
* ரினோசா,கொழும்பு-15.
* சௌராஜி,வவுனியா.
* ந. குருபரன்,மணலாறு.
* ம. ரதி,முள்ளியாவளை.
* சி. குமரன்,ஃபிரான்ஸ்.
* வை. சியாட்,நேகம.
* ஜெயந்தா,கொழும்பு.
* கே. தூயவன்,கனடா.
* ரி. றூபி,வவுனியா.
* எஸ். குகதாஸ்,கனடா.
* சி. கமல்நாத்,வத்தளை.
* கனகசாந்தி,தம்பிலுவில்.
* ஜெயா முருகுப்பிள்ளை, குருக்கள் மடம்.

## சொல்லி வாய்மூட முன்பாக

முரசே!

மனித உயிர்கள் தமிழ் உயிர்களாக இருந்தால் செல்லாக் காசுகள்தானோ? யாழ்ப்பாணத்தில் மேலும் பல மனிதப்படுகொலைப் புதைகுழிகள் உண்டு என்று கூறப்பட்ட பின்னரும், அரசோ, நீதித்துறையோ பதைப்புக் காட்டவில்லை. ஏதோ சிறு சம்பவம் போன்று சலனமே இல்லாமல் இருந்துவிட்டனர். இதுவே தென்பகுதியில் என்றால் சொல்லி வாய் மூட முன்னர் குழிகள் தோண்டப்பட்டிருக்கும்.

ஆ.உமேஷ்குமார், கொழும்பு-11.

'கோகிலா என்ன செய்து விட்டாள்', 'கையில் சிக்கிய மின்னல்' இரண்டும் அருமை. ஜெயகாந்தன் கதைகளில் கோகிலாவும் இன்னொரு முத்து. இந்த முத்தை தேர்ந்தெடுத்து தந்த முரசுக்கு நன்றி.

இ.தேவிகலா, மட்டக்களப்பு.

## இன்னொரு கொசோவா

மனிதப் பிணங்கள் எங்கும் விதைக்கப்பட்ட மற்றொரு 'கொசோவா' யாழ்ப்பாணம். கொசோவா பிரச்சனையில் தலையிட்ட உலக நாடுகள் இங்கு பாராமுகமாக இருக்கின்றன. தமிழ்க் கட்சிகளின் பேசாமடந்தைப் போக்கால் அரசாங்கமே பலனடைகிறது. அரசாங்கத்தை எதிர்த்து நிற்காது, அரசாங்கத்திடமே மனுப்போட்டு மன்றாடுவது பயனளிக்காது. உலகை ஏமாற்ற இக்கட்சிகளே துணைபோகலாமா?

பே.சிவரூபன், யாழ்ப்பாணம்.

கொசோவா புதைகுழிகளை தோண்ட நேட்டோ நாடுகள் போயின. வடக்கில் உள்ள புதைகுழிகளைத் தோண்ட யார் வருவார்கள்?

எம்.நவாஸ், கல்முனை.

## உஷார்

முரசு! அன்றே கூறியதுபோல செம்மணியில் சில எலும்புகள்தான் மீதமிருக்குமோ? எதற்கும் விழிப்பாக இருப்பதும், ஏமாறாது உண்மைகளை வெளிக்கொண்டு வருவதும் அவசியம். பத்திரிகை உலகமும், மனித உரிமை அமைப்புக்களும் உஷார்.

பி.ரகுராம், மட்டக்களப்பு.

## பல குழிகள்

செம்மணி புதைகுழி போல் யாழில் பல குழிகள். இது ராஜபக்ஷ சொன்ன இரகசியம். யார் இதனைக் கேட்டும் கேளாதது போல் இருந்தனரோ, அத்தனைபேரும் மனித உரிமைகளுக்கு விரோதிகளே! இதுதான் என் கருத்து.

எம்.சுப்பையா, யாழ்ப்பாணம்.

## உலகக் கிண்ணம்

இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து போன்ற அணிகளை கணக்கில் எடுக்காது பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகள்தான் கடும் போட்டியிடும் என்று சிந்தியா கூறியபோது, நம்ப முடியவில்லை. ஏன் இப்படி தப்பாக கூறுகிறார் என்றே நினைத்தேன். இந்தியா அரையிறுதியிலும் வரும் என்று நம்பினோம். அநேக பத்திரிகைகள் ஸிம்பாப்வே கிண்ணத்தை கைப்பற்றும் என்று ஆருடமும் ஊகமும் வெளியிட்டன. ஆனால் இறுதியில் நம் முரசின் சிந்தியா கூறியதுபோன்றே முடிவுகள் அமைந்தன. சிந்தியா! பாராட்டுக்கள்.

செல்வி இ.ஜெயக்குமாரி, ஹெந்தளை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

www.padippakam.com

# இந்தியா-பாக் எல்லை முறுகல்!
# புலிகள் இந்திய சார்பு நிலை!
## இந்தியத் தலைவரோடு பாலா தொடர்பு

இந்திய-பாகிஸ்தான் எல்லை முறுகல் நிலை குறித்து புலிகள் வெளியிட்டு வரும் செய்திகள் இந்தியா சார்பாகவே அமைந்துள்ளன.

புலிகளின் குரல் வானொலி உட்பட வன்னியில் புலிகளது ஏனைய ஊடகங்களும் இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் விதமாகவே செய்திகளையும், கண்ணோட்டங்களையும் வெளியிட்டு வருகின்றன.

இந்திய பிராந்தியத்துக்குள் பாகிஸ்தானிய படையினர் அத்துமீறிப் பிரவேசித்துள்ளதாக விபரித்த புலிகளின் குரல், இந்தியப் படையினர் மலைச் சிகரங்களை வெற்றிகரமாக மீட்டு வருவதையும் திரும்பத் திரும்ப அறிவித்தது.

பாகிஸ்தான் படையினர் பின்வாங்கி வருவதாகவும், இந்தியப் படைகள் வெற்றியைப் பெறும் என்றும் புலிகளின் குரல் தனது செய்தி அறிக்கைகளிலும் மக்களுக்கு தெரிவித்துள்ளது.

இதேவேளை முரசுக்கு கிடைத்த தகவலின்படி, இலண்டனில் இருக்கும் புலிகளின் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் இந்திய அரசியல் தலைவர்கள் சிலருடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டுள்ளார். இந்தியா தனது இறைமையை காப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விடு தலைப் புலிகள் அமைப்பு ஆதரிப்பதாக அத் தலைவரிடம் அன்ரன் பாலசிங்கம் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.

இந்தியாவுடன் சுமுக உறவை ஏற்படுத்த விரும்பும் புலிகள், இந்திய அரசியல் தலைவர்களுடன் அன்ரன் பாலசிங்கம் ஊடாக தொடர்புகளை பேணுவதற்கு முடிவு செய்துள்ளனர்.

இதற்கிடையே புலிகளின் கட்டளைப் படிதான் பாரதிய ஜனதாவுடன் பாட்டாளி மக்கள் கட்சி போன்றவையும், கலைஞர் கருணாநிதியும் உறவு கொண்டுள்ளனர் என்று சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

இதுபற்றி பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறும்போது, சுப்பிரமணியம் சுவாமி போன்றோரின் பிதற்றல்களுக்கு காது கொடுப்பதில்லை! என்று கூறியிருக்கிறார்.

# தொடர் தாக்குதல்களுக்கு நோட்டம்
# கிழக்கில் புதிய அணிகள் பொறுப்பேற்பு!

கிழக்கில் புலிகளின் புதிய அணிகள் பொறுப்பேற்றுள்ளன. வன்னிப் போர் முனையில் நின்ற அணிகளில் ஒரு பகுதியே தற்போது கிழக்குக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பொறுப்பில் இருந்த அணியினர் வன்னிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ராசிக் மீதான தாக்குதலும் புதிய அணிகள் பொறுப்பேற்ற பின்னரே நடந்ததாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகளது முன்னாள் தளபதியும், தற்போது வன்னிப் போர்முனை தளபதியுமான கருணாவின் தலைமையில் சயந்தன் படைப்பிரிவு செயற்பட்டு வருகிறது.

ராசிக் மீதான கரும்புலித் தாக்குதலில் பலியான மேஜர் அரசப்பன் சயந்தன் படைப்பிரிவை சேர்ந்தவரே.

மட்டக்களப்பு பிரதேசத் தளபதியாக இருந்தவரும் வன்னிக்கு அழைக்கப்பட்டுள்ளார். அவரது இடத்தில் மட்டக்களப்பு பெரிய புல்லுமலையைச் சேர்ந்த நாகேஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கின் அணிகள் வன்னிப் போர் முனையில் போர் அனுபவங்களை பெறும் வகையில் அடிக்கடி மாற்றப்படுவதாக தெரிகிறது.

புதிய அணியினர் கிழக்கில் பல தாக்குதல்களுக்கு திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. அதன் முதற்படியாக உளவறியும் வேலைகள் நடந்து வருகின்றன.

மட்டக்களப்பு நகருக்குள் படையினருக்கு சவாலான தாக்குதல்களுக்கும் திட்டமிட்டுள்ளனராம். அதற்கு முதற்படியாகவே நகர காவலரணில் பரீட்சார்த்த தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாக தெரிகிறது.

### ஏனைய இயக்கங்கள்

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் தொடர்பான தகவல்களையும் புலிகள் சேகரித்து வருகின்றனர்.

தமிழ்க் கட்சிகளில் உள்ள சிலரது உறவினர்கள் புலிகளில் உள்ளனர். அவர்கள் மூலம் எச்சரிக்கைகள் வந்துள்ளன.

'உங்களை விடமாட்டார்கள். எங்காவது போய்விடுங்கள்' என்று தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகருக்கு அவரது உறவினர் தகவல் அனுப்பியுள்ளாராம்.

இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டு விட்டதால் பாரிய தாக்குதல் ஒன்றை தமிழ்க் கட்சிகள்மீது புலிகள் தொடுக்கும் அபாயம் இருப்பதாக மட்டக்களப்பில் பரவலாக பேசப்படுகிறது. இதனால் இயக்க முகாம்களுக்கு அருகில் இருப்போர் கிலி கொண்டுள்ளனர்.

# முக்கிய உறுப்பினர் பலி
## படையினர் திடீர் தாக்குதல்

யாழ் குடாநாட்டில் கொடிகாமம் வரணிப் பகுதியில் ஜட்டாலை என்னும் இடத்தில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

புலிகளைப் பொறுத்தவரை இது எதிர்பாராத மோதலாகும். குறிப்பிட்ட பகுதியில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த புலிகள் முடிவு செய்திருந்தனர்.

இதனை முன்னிட்டே புலிகள் இயக்க உறுப்பினர்கள் அங்கு கூடியிருந்தனர். இவர்கள் அவ்வாறு கூடப்போகும் தகவல் படையினருக்கு முன்கூட்டியே கிடைத்துவிட்டதாக அறியப்படுகிறது.

குறிப்பிட்ட நேரத்தில் திடீர் சுற்றி வளைப்பு நடத்தி படையினர் தாக்கத் தொடங்க, புலிகளும் பதிலுக்கு தாக்குதல் நடத்தியபடி தப்பிச் செல்ல ஆரம்பித்தனர். அதன் போது நான்கு புலிகள் பலியானார்கள்.

பலியானவர்களில் ஒருவர் றோய் என்று இனம் காணப்பட்டுள்ளது. இவர் நீண்ட காலமாக படையினரால் தேடப்பட்டு வந்த முக்கிய உறுப்பினராவார்.

இம்மோதலில் சிக்கி வயோதிபர் ஒருவரும் பலியானார்.

# டாங்கிகள் தயார் நிலை
## எறிகணைகள் பெருமளவு குவிப்பு

மன்னார்-பூநகரி சாலையில் மோதலை தொடர உதவியாக கனரக வாகனங்கள் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளன.

இராணுவ வாகனங்களில் பெருமளவு ஆட்டிலெறி எறிகணைகள் கொண்டு செல்லப்படுவதையும் காண முடிகிறது.

இதேவேளை மன்னார் வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்த 36 சடலங்களில் புலிகளின் சடலங்கள் எத்தனை? என்பது கேள்விக்குறியே.

26.06.99 முதல் நாள் சண்டையில் பலியான புலிகளது சடலங்களில் ஒரு பகுதியே படையினரால் கைப்பற்றப்பட்டன. அன்றைய மோதலில் 22 புலிகள்தான் பலியானார்கள். அதில் சில உடல்களை புலிகள் மீட்டிருந்தனர். எனவே சடலங்கள் பற்றிய ஊர்ஜிதமான நம்பகமான தகவல்களை பெற்ற பின்னரே உறுதியான செய்தியை கூறமுடியும்.

இதேவேளை 28.06.99 அன்று பூநகரி பகுதியில் கிபீர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

# புளொட் உறுப்பினர்கள் புலிகளுடன் இணைவு!

வவுனியாவில் புளொட் இயக்க உறுப்பினர்கள் எட்டுப்பேர் புலிகளுடன் இணைந்துள்ளனர்.

அரசுடனும்படைகளுடனும் இணைந்து செயற்படும் தமிழ் அமைப்புக்களில் இருந்து விலகுமாறும், விரும்பினால் தம்மோடு வந்து இணையுமாறும் புலிகள் அழைப்பு விடுத்தது தெரிந்ததே.

இதனையடுத்து ஏற்கனவே மட்டக்களப்பு பகுதியில் இருந்து 15 பேர் வரையான ஏனைய இயக்க உறுப்பினர்கள் புலிகளிடம் சென்றுள்ளனர். மேலும் பலர் வந்து சேரத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறியிருந்தனர்.

இந்நிலையில் கடந்த வாரம் வவுனியாவில் புளொட் உறுப்பினர்கள் எட்டுப் பேர் தப்பிச் சென்று புலிகளுடன் இணைந்துள்ளனர்.

இத் தகவல் வவுனியாவில் உள்ள படையினருக்கும் எட்டியதாகவும், அவர்கள் விசாரணை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

யாழ் குடாநாட்டிலும் புலிகள் பரவலாக பிரசுரங்களை விநியோகித்துள்ளனர். தமிழ்க் கட்சிகளில் இருந்து விலகுமாறு கோரும் பிரசுரங்கள் படையினரின் கண்காணிப்பையும் மீறி யாழ் நகரிலும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

# டாக்டர் விடுதலை

வவுனியாவில் கடத்தப்பட்ட மகப்பேறு மருத்துவர் டாக்டர் முகைதீன் 29.06.99 அன்று விடுவிக்கப்பட்டார்.

இவர் கடத்தப்பட்டதும் புலிகள்மீதே அரச தகவல் தொடர்பு சாதனங்கள் குற்றம் சாட்டியிருந்தன. முன்பும் ஒருமுறை புலிகள் இவரைக் கடத்திச் சென்று சிகிச்சை செய்வித்ததாகவும் கூறப்பட்டது. இது தவறான தகவலாகும். வவுனியாவில் உள்ள தமிழ் கட்சி ஒன்றுதான் பணம் கேட்டு முன்பு கடத்தியிருந்தது.

பின்னா முஸ்லிம் அமைச்சர் ஒருவரது தலையீட்டால் முகைதீன் விடுதலையாகியிருந்தார். தற்போது அவரை கடத்தியவர்கள் யார், என்பதை உடனடியாக ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

# தமிழ், முஸ்லிம்களின் ஆதிக்கம் வலுக்கிறது
## மஹாசங்கத் தலைவர் குமுறல்!

"இந்த நாட்டின் அரசியல் யாப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் படி இங்கு பௌத்த மக்களுக்கும் புத்த சாதனத்துக்கும் அரசாங்கத்தினால் எதுவித பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை. இந்த ரீதியில் அரசாங்கம் பாராமுகமாக இருந்து வந்தால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம்" என்று அமரபுரி மஹா சங்க சபாவின் தலைவர் மடிஹி பஞ்ஞசீக மகாநாயக்க தேரோ கண்டியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் அரசாங்கத்துக்கு எச்சரிக்கைவிடுத்தார்.

இன்று இந்நாட்டில் வாழும் பௌத்த சிங்களவர்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். பௌத்த மதத்தையும் சிங்கள மொழியையும் பாதுகாப்பதற்கு-அரசியல் யாப்பின் அடிப்படையில்-செயற்பட வேண்டிய ஆட்சியாளர்கள் அரசியற் சட்ட திட்டங்களுக்கு உரிய மதிப்பை அளிக்காதிருக்கின்றனர். இது இவ்வாறு தொடருமானால், பௌத்த மதத்தையும் சிங்கள சமுதாயத்தையும் அழிவிலிருந்து காப்பாற்ற முடியாது.

தலை நகரான கொழும்பில் 60 வீதம் சிங்களவரல்லாதோரின் ஆதிக்கம் வலுவடைந்துவிட்டது. இதே ரீதியில் போனால், வட பகுதி முற்று முழுதாகத் தமிழர்களுடைய ஆதிக்கத்துக்குள்ளும், கிழக்குப் பகுதி முஸ்லிம்களுடைய ஆதிக்கத்துக்குள்ளும் போய்விடும் என்பதில் ஐயமில்லை.

சிங்கள சமுதாயத்தையும் பௌத்த சாதனத்தையும் பாதுகாப்பதற்கு ஏற்ற வழி முறைகள் ஆட்சியாளர்களுக்குத் தெரியாதிருக்குமானால் மகாசங்கத்தினரான நாங்களே உரிய வழி முறைகளை வகுத்துத்தர ஆயத்தமாக இருக்கிறோம்."

இவ்வாறு மடிஹி பஞ்ஞசீக மஹா நாயக்க தேரோ தொடர்ந்து பேசினார்.

# நகரில் கிளைமோர்
## அருகில் முகாம்

வவுனியா நகரில் புலிகளது தாக்குதல் அணிகள் ஊடுருவியுள்ளன என்று முரசு குறிப்பிட்டமை தெரிந்ததே.

27.06.99 அன்று இரவு 9.15 மணியளவில் வவுனியா நகரில் அதி உயர் பாதுகாப்பு பகுதியில் கிளைமோர் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் உள்ள படையினரது ஜோசப் முகாம் அருகே உள்ள மின் கம்பத்திலேயே கிளைமோர் பொருத்தப்பட்டிருந்தது. படையினருக்கு சவாலாகவே இது நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் மூன்று படையினர் பலியானார்கள். ஒருவர் ஸ்தலத்திலும், இருவர் அநுராதபுரம் மருத்துவ மனையிலும் பலியானார்கள்.

மின்கம்பத்தில் கிளைமோர் வெடித்தமையால் சில பகுதிகளுக்கு மின்சாரம் தடைப்பட்டது.

இதனையடுத்து 28.06.99 அன்று வவுனியா ராஜேந்திரம் குளம் பகுதி சுற்றிவளைக்கப் பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

# மரண தண்டனை!

மட்டக்களப்பு-வாழைச்சேனை அம்மன் கோயில் ஒன்றில் திருவிழாக் கடைதிறந்திருந்த கே. புஸ்பராஜா (32) எனும் நபர் 28.06.99 அன்று நடுநிசி ஒரு மணியளவில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் முன்னாள் ரெலோ அங்கத்தவராகவும் வாகரைப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினராகவும் இருந்தவர் என்றும் தற்சமயம் வாழைச்சேனை காகித ஆலை இராணுவ வலயத்திற்குள் வசித்து வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காகித ஆலையிலுள்ள புலனாய்வு இராணுவத்தினருடன் தொடர்பு வைத்திருந்ததே பழிவாங்கலுக்கான முக்கிய காரணம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிநாடு சென்று தொழில் பார்த்து விட்டுத் திரும்பிய இவருக்கு நான்கு மனைவியர் என்றும் தெரியவந்துள்ளது.

# பயணிகளை இறக்கி பொல்லடி
## கைவைத்தால் இதுதான் கதி!

மன்னாரில் புலிகளின் தாக்குதலில் இரு படையினர் ப்லியானார்கள். 23.06.99 அன்று இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இது பற்றி தெரியவருவதாவது:

சம்பவ தினத்தன்று மன்னார் பொது விளையாட்டரங்கின் அருகில் உள்ள தேநீர் கடையில் புலிகள் இருவர் தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர். உளவுப்பிரிவைச் சேர்ந்த புலிகளே அவர்கள் என்று தெரிகிறது.

அச்சமயம் மோட்டார் சைக்கிளில் இரு படையினர் அங்கு வந்தனர். மோட்டார் சைக்கிளை விட்டிறங்கி கடைக்குள் சென்றனர். சிகரெட் வாங்குவதற்கே அவர்கள் சென்றனர்.

கடையில் இருந்த புலிகள் இருவரும் தகவல் அறிந்துதான் படையினர் வருவதாக நினைத்துவிட்டனர். அதனால் பிஸ்டலை எடுத்து இரண்டு படையினரையும் சுட்டுவிட்டு, தப்பிச் சென்றுவிட்டனர்.

இச் சம்பவம் பிற்பகல் 4.20 அளவில் இடம்பெற்றது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த படையினர் குறிப்பிட்ட கடையை அடித்து நொறுக்கினார்கள். அப் பகுதியால் சென்றோரும் தாக்கப்பட்டனர்.

அப்பாதை வழியாக வந்த தாழ்வுப்பாடு பஸ் இல 29-8500, பேசாலை பஸ் இல: 29-9141, எருக்கலம்பிட்டி 60-7162 ஆகிய பஸ் வண்டிகளில் வந்த பயணிகள் வரிசையாக இறக்கப்பட்டு கம்பிகளாலும், பொல்லுகளாலும் தாக்கப்பட்டனர்.

மன்னார் நகரப் பள்ளிவாசலுக்குள் புகுந்த சீருடையினர் அங்கிருந்தோர்மீதும் தாக்குதல் நடத்தினர்.

'இராணுவத்தில் கைவைத்தால் இதுதான் நடக்கும் என்று புலிகளிடம் கூறுங்கள்' என்று தாக்குதலுக்கு உள்ளான பொதுமக்களிடம் கூறப்பட்டது.

# கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள புகையிரத சேவை!
## தொடர்ந்து நடத்த சீருடையினருக்கு இணக்கமில்லை

(நமது நிருபர்)

கிழக்கில் மட்டக்களப்பு வரை இடம்பெற்று வந்த புகையிரத சேவை 1996ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தினர் ஏறாவூர்- மைலம்பாவெளியில் புகையிரதத்திற்கு கண்ணிவெடி வைத்துத் தகர்த்ததின் பின்னர் நிறுத்தப்பட்டது.

புகையிரதச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் பொது மக்களின் போக்கு வரத்திற்குப் பெரும் நெருக்கடிகளும், பொருள் பண்டங்களை எடுத்து வருவதில் லொறிகளை நம்பியிருக்க வேண்டியிருப்பதால் விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளன. அத்துடன் லொறிகள் யாவும் 24 மணி நேரம் தடுத்து சோதனையிடப்பட்ட பின்னரே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

இந்தச் சிரமங்களைக் கருத்திற் கொண்டு தற்போது பொலன்னறுவை வரை இடம்பெறும் புகையிரதசேவையை மட்டக்களப்புவரை நீடிக்கு மாறு கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

புகையிரதச் சேவை மட்டக்களப்புவரை நீடிக்கப்பட்டால் பொலன்னறுவையிலிருந்து மட்டக்களப்பு வரையுள்ள 60 மைல்தூர காட்டுப் பகுதிக்கு ஒரு புறமும், அதே தொலைவிலுள்ள பிரதான நெடுஞ்சாலைக்கு மறுபுறமும் வீதிப் பாதுகாப்பு வழங்க வேண்டிய கட்டாயம் உள்ளதாகக் கூறி சீருடைத் தரப்பு புகையிரதச் சேவைக்குச் சம்மதிக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

# அகதி முகாமில் கசிப்பு விற்பனை
## மூன்று உயிர்கள் பலி

(திருமலை நிருபர்)

திருமலை அலஸ்தோட்டம் அகதிமுகாமில் சாராய விற்பனை தொடர்பாக எழுந்த சச்சரவையடுத்து அநியாயமாக மூன்று உயிர்கள் தீயில் வெந்து பலியாகியுள்ளன.

கடந்த 17ந் திகதி மாலை களவாகச் சாராயம் விற்பதைப் பிடிப்பதற்காக பொலிஸார் முகாமுக்குள் வந்து போனார்கள். இதனையடுத்து எழுந்த வாய்த்தர்க்கங்களால் மூன்று பிள்ளைகளின் தந்தையான நடராசா தேவராசா (31 வயது) என்பவர் தனக்குத் தானே பெற்றோல் ஊற்றித் தீவைத்துக் கொள்ள முயன்றாராம்.

இதைக் கண்ட இராஜகோபால் பவளராணி (35 வயது- மூன்று பிள்ளைகளின் தாய்) என்பவர் அதைத் தடுக்க முயன்ற போது அவர் மீதும் பெற்றோல் பட்டிருக்கிறது. பக்கத்தில் விளக்கு இருந்ததால் இருவர் மீதும் தீ தாவிப் பரவவே இதைக் கண்ணுற்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையான பேரின்பவரதன் (30வயது) ஓடிவந்து இருவரையும் காப்பற்ற முயன்ற போது தீ வரதன் மேலும் பரவியது.

இரவு 9 மணியவில் இடம் பெற்ற இச் சம்பவத்தையடுத்து இவர்கள் உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். எனினும் பவளராணி 19ம் திகதி இரவு மரணமானார். தேவராசா 20ந் திகதி காலையும் பேரின்பவரதன் 23ம் திகதி இரவும் மரணமாகியுள்ளனர்.

முகாம் வாசிகளுடன் தொடர்பு கொண்ட போது "இறந்தவர்கள் மூவரும் நல்ல வர்களே. அவர்களது மரணங்கள் எங்களை வெகுவாகப் பாதித்துள்ளன. இதை விதி என்று தான் சொல்ல வேண்டும். மூன்று குடும்பங்கள் நிர்க்கதியாகி விட்டனவே" என்று கவலை தெரிவித்தார்கள்.

முரசுக்குக் கிடைத்த தகவல்களின்படி இந்த முகாமில் சாராயம், கசிப்பு என்பன அமோகமாக விற்பனையாகின்றன. சிலர் பிடிபட்டு நீதி மன்றில் குற்றமும் கட்டியிருக்கிறார்கள்.

பேரின்ப வரதனின் மரணச் சடங்கின் போது விற்பனை செய்வதற்கென கசிப்பு கொண்டு வந்த ஒருவர் துரத்தப்பட்ட சம்பவமும் இங்கு நடந்துள்ளது.

# ராசிக் குழுவுக்குள் பூசல்

மட்டக்களப்பில் ராசிக் குழுவுக்கு காந்தி என்பவர் தற்போது பொறுப்பாக இருக்கிறார். அவருக்கு பதிலாக பாஸ்கரன் என்பவரை நியமிக்க ஈ.பி.ஆர்.எல்.எஃப் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் விரும்பியுள்ளார்.

இதற்காக சமீபத்தில் மட்டக்களப்பு சென்று ராசிக் குழு உறுப்பினர்கள் சிலருடன் பேச்சு நடத்தியிருக்கிறார்.

27.06.99 அன்று இரவு பாஸ்கரன் வீட்டில் கலந்தாலோசனை நடைபெற்றது. ஆயுதங்கள் ஏந்திய காவலர்கள் சகிதம் இக் கலந்தாலோசனையில் சுரேஸ் கலந்து கொண்டார்.

ராசிக் உயிருடன் இருந்தபோது பாஸ்கரன் ஒதுங்கியிருந்தார். ராசிக் அவரை கண்டித்ததே காரணம் என்று கூறப்படுகிறது. அதனால் பாஸ்கரன் கொழும்பில் ஈ.பி.ஆர். எல்.எஃப் அலுவலகத்தில் வந்து தங்கியிருந்தார். சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு பாஸ்கரன் நம்பிக்கையானவரானார்.

ராசிக் வரதராஜப் பெருமாளுக்கு நெருக்கமாக இருந்ததால் அவருடன் சுரேசுக்கு கசப்பு ஏற்பட்டிருந்தது. தற்போது பாஸ்கரனை அக் குழுவின் தலைவராக்கினால் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்று சுரேஸ் நினைக்கிறார். ஆனால் ராசிக் குழுவுக்குள் பாஸ்கரனுக்கு ஆதரவில்லை என்று தெரிகிறது. இதனால் சர்ச்சைகள் எழுந்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

## பக்தர்கள் தீமிதிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கையில் பிரபல்யம் வாய்ந்த மட்டக்களப்பு-புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத் தீ மிதிப்பு உற்சவத்தில் இம்முறை சுமார் 4600 பக்தர்கள் கலந்து கொண்டனர்.

தீ மிதிப்பில் கலந்து கொண்டோரில் அதிகமானோர் பெண்களாகவே இருந்தார்கள். யுத்தக் கொடூரத்தில் தமது அன்புக்குரிய உறவினர்களைப் பறிகொடுத்த அதிகமானோரே தமது நேர்த்திக்கடன் நிறைவேற்றினர்.

தொடர்ந்து செல்லும் யுத்தத்தின் கோரத்தில் அகப்பட்டுப் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்த மக்கள் தங்களுக்கு ஆறுதல் கோரி தெய்வ சந்நிதானத்தில் தங்களது துயரச் சுமைகளை வெளிப்படுத்துகிறார்கள் என்று இவ்வாலயத்தின் தொண்டரும், காப்பாளருமான திரு.ந.நவரெட்ணம் முரசுக்குத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சக்தி வழிபாட்டு ஆலயங்களில் மிக அதிக எண்ணிக்கையானோர் தீ மிதிப்பில் கலந்து கொண்டது இதுவே முதற் தடவையாகும். சென்ற ஆண்டு இவ்வாலயத்தில் 3800 பேர் தீ மிதிப்பில் பங்கெடுத்தார்கள், என்றும் அவர் சொன்னார்.

பாதுகாப்புத் தரப்பினர், புலிகள், போக்கு வரத்துச் சபையினர், மாநகர சபையினர் ஆலய உற்சவத்திற்காக தமது ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கல்வி அலுவலகத்தில் அதிகாரி ஆட்டம்!
## பெண் அலுவலர்கள் தப்பியோட்டம்

கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளராக உள்ள அதிகாரி ஆவேசமாக வலயக் கல்வி அலுவலகத்திற்குள் பிரவேசித்து வாய்க்கு வந்தவாறு தாறுமாறாகத் தூஷித்துப் பேசிக் கூக்குரலிட்டார். எதுவுமறியாத அலுவலர்கள் மிரண்டு விழித்தனர்.

அதிகாரி அத்துடன் நிறுத்திக் கொண்டாரில்லை. தனது காற்சட்டைச் ஷிப்பைத் திறந்து காட்டியபடி மனநோயாளி போன்று பேயாட்டம் ஆடினார். இதனைக் கண்டதும் அங்கிருந்த பெண் அலுவலர்கள் தப்பியோட்டம் பிடித்தனர்.

இவர் பேயாட்டம் ஆடியதற்கான காரணம் இதுதான்; கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து அரசியல் இழுபறியில் மாட்டித் தற்போது சம்மாந்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அதிகாரியின் விடயத்தில் மேற்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்டிருந்தார் என்று ஒரு துண்டுப் பிரசுரம் வெளியானது. மேலும் அதில் இந்த அதிகாரியின் வெறி நடவடிக்கைகளும் சூசகமாக விவரிக்கப்பட்டிருந்தது. 'பிறெஷர்' காரணமாகவே இந்த அதிகாரி பித்துப் பிடித்து முறைகேடாக நடந்து கொண்டார். இச்சம்பவம் நடக்கும் போது தற்போதைய கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளரும் அலுவலகத்தில் இருந்தார்.

இவரது நடத்தைக் கெட்ட நடவடிக்கையை அங்குள்ள அதிகாரிகளும், குறிப்பாக பெண் அலுவலர்களும் மற்றும் சமூக நல அமைப்புக்களும் வன்மையாகக் கண்டிக்கின்றன.

பெண்கள் தொடர்ந்து கடமை புரிய அச்சம் கொண்டுள்ளனர். கீழ்த்தரமான இந்த அதிகாரியின் நடத்தை தமக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியிருப்பதாக கல்வி அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## முன்னுக்குப் பின் முரணான நடுவர் தீர்ப்பு
## குளறுபடியான தமிழ்த் தினப்போட்டிகள்!

(மட்டக்களப்பு நிருபர்)

மாணவர்களிடையே திறமைகளை வளர்த்தெடுக்கும் ஆக்க பூர்வமான நிகழ்ச்சிகளாக இருக்க வேண்டிய தமிழ்த்தினப் போட்டிகள் தற்போது மாணவர்களிடையேயும் பாடசாலைகளிடையேயும் கசப்புணர்வுகளை உண்டாக்கி, ஊக்கங்கெடவைக்கும் முறையில் இடம் பெற்றுவருவது குறித்துப் பலரும் கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

பாடசாலைகளுக்கிடையே இடம்பெறும் போட்டி நிகழ்ச்சிகளில் நடுவர்களாகக் கடமையாற்ற வேண்டியவர்கள் சாதி, சமய, பிரதேச, அரசியல் பின்னணிகளைக் கருத்திற்கொண்டு பக்கச் சார்பானவர்களாகவும், சுயநலமிகளாகவும் கடமையாற்றுவதால் பல குளறுபடிகள் எழுகின்றன.

சமீபத்தில் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.கே.கந்தசாமி தலைமையில், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது. அங்கு நடனம் கோலாட்டம், காவடி, கரகம் எனும் குழு நிகழ்ச்சிகளில் கல்குடா கல்வி வலயத்திலிருந்து மட்/கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயமும், மட்டக்களப்பு வலயத்திலிருந்து புனித சிசிலியா மகளிர் கல்லூரியும் பங்கு பற்றின.

இப்போட்டி நிகழ்ச்சிகளில் பின் தங்கிய பகுதியான கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலய நிகழ்ச்சிகள்- சிறிதும் சந்தேகமின்றி சிறந்த முறையில் அமைந்திருந்ததால் நடுவர்கள் பலரும் இந்த வித்தியாலயமே வெற்றி பெற்றதாக அறிவித்தனர்.

இருந்தபோதும் விழாக்குழுச் செயலாளரும், மட்டக்களப்பு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு.வி.தங்கத்துரை, ஒலிபெருக்கி மூலமும் அறிவித்தல் பலகையிலும் மட்/சிசிலியா மகளிர் கல்லூரியே முதலிடம் பெற்று வெற்றியீட்டியதாக அறிவித்ததையடுத்து அதற்கு ஆட்சேபனையும் சலசலப்பும் ஏற்பட்டது. அங்கிருந்த சகலரும் வெளியேறினர்.

இதனைத் தொடர்ந்து நிலைமை மோசமாகவே; சம்பந்தப்பட்ட பக்கச் சார்பு நடுவர்கள் தாம் கூட்டலில் தவறு விட்டதாகக் கூறி சமாளித்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டு மட்/கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயமே வெற்றி பெற்றதாக அறிவிப்புச் செய்யப்பட்டது. அப்போது பாடசாலை அதிபரோ, மாணவர்களோ, வாகரை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரோ மண்டபத்தில் இருக்கவில்லை.


### பெப்ரிக் பெய்ண்டிங் (Fabric painting)

ஒவ்வொரு சனிக்கிழமையும் 2.00-4.00 மணி வரை 'தேனும' (OKI International) 43, பழைய நீர்கொழும்பு வீதி, வத்தளையில் வகுப்புகள் நடத்தப்படும்.

தமிழ் சிங்கள மொழிகளில் கற்பிக்கப்படும்- பெய்ண்டிங்கு தேவையான பொருட்கள் இலவசமாக கொடுக்கப்படும்.

கட்டணம்- 1800/-

தனிப்பட்ட வகுப்புகளும் நடத்தப்படும்.

தொடர்புகளுக்கு:-
ஷாமலா ஜெயரட்ணம்
தொ.பே. 936196


### 4வது, 1வது பிறந்தநாள் வாழ்த்து



கணன் 09.04.99 | சௌமியா 04.05.99

வட்டுக்கோட்டை பிறேம்-றஞ்சி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கணன் தனது 4வது பிறந்த தினத்தையும் செல்வப் புதல்வி சௌமியா தனது 1வது பிறந்ததினத்தையும் கனடாவில் கொண்டாடினார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, விக்னேஸ் மாமா, மாமி, சாந்தா, பெரியப்பா, பெரியம்மா, நேசன்மாமா, மாமி, ஈசன், பெரியப்பா, பெரியம்மா, சுரேஸ் சித்தப்பா, சித்தி, கேதீஸ் மாமா, மாமி, தவம் மாமா, மணிமாமா, சிவாமாமா, தவச்செல்வன்மாமா, சக்தி மாமா, அண்ணன், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், தங்கை, மற்றும் தாத்தாமார், பாட்டிமார், பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

### 2வது பிறந்தநாள் வாழ்த்து



றோய் சிவநேஸ்வரன் | 03.07.1999

பருத்தித்துறை சிவநேஸ்ரவன்-ஞானசுந்தரி தம்பதியினரின் செல்வப் புதல்வன் றோய் தனது 2வது பிறந்தநாளை லெபனானில் உள்ள LIQUGAS இல்லத்தில் 03.07.1999 அன்று மிக ஆனந்தமாக கொண்டாடினார். இவரை, லெபனானிலுள்ள அப்பா, அம்மா, பெரியம்மா, நண்பர்கள் பருத்தித்துறையிலுள்ள பாட்டா, பாட்டி, இத்தாலியிலுள்ள மாமா மாமி, நாவலப்பிட்டி மாமன்மார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, அக்கா, தம்பி, ஆகியோர் பல கலைகளும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: சிவநேஸ்வரன் தம்பதிகள்-LIQUIGAS, LEBANON.


### இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க பயிற்சியை அளிக்கும் 90 நாட்கள் ஆங்கில பாடநெறி

**500 SCHOLARSHIP PROGRAMME**

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.07.1999

இப்பாடநெறிக்காக பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும். பாடநெறிக் கட்டணம் முற்றிலும் இலவசம்!!!

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசம் எழுதப்பட்ட ரூபா 3.50 முத்திரை ஒட்டிய நீள கடிதவுறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். அல்லது 077-802849 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**I.L.C. International**
P.O.Box-119,
Kandy.
Tel. : 08-222664, 077-801245

The Student ஆங்கில கல்வி இதழ் 6 மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.



### சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.


**SHAKTHY SARAVANA,**
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை



### மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**
நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



பம்பலப்பிட்டியில்

**ROYAL SHELTER PROMOTERS**
வழங்கும்

சொகுசு தொடர்மாடி வீடுகள்

கிளன்அபர் அபார்ட்மெண்ட்: பூரண அமைதியான சூழலில் சீமான்கள் வாழும் வீதியில் கவர்ச்சியான முறையில் கட்டப்பட்ட ஒரு வீட்டை உங்களுக்கென்று தெரிவு செய்யுங்கள்.
ஒரே நிமிடத்தில் பம்பலப்பிட்டி சந்தி.
நாளாந்த தேவைக்கு அத்தனை சாமான்கள் நிறைந்த -சந்தி-
போக்குவரத்து வீதிகள் அனைத்தும் இணைக்கும் சந்தி.
Lift வசதி அனைத்து தளத்திற்கும்.

3 படுக்கை அறைகள். 1 அறைக்கு A/C வசதி
3 குளியல் அறைகள்.
1 குளியல் அறையில் சுடுதண்ணீர் வசதி.

வீடு முழுவதும் பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்ட தரை.
DISH அண்டானா
பெண்றி கபட் இணைக்கப்பட்ட குசினி.
தரம் வாய்ந்த குளியல் அறை சாதனங்கள்
ஒவ்வொரு வீட்டுக்கும் 1 வாகன தரிப்பிடம்.

"எங்கள் இல்லங்களில் நீங்கள் உங்கள் உள்ளங்களில் நாங்கள்"

**30, GLENABER PLACE, BAMBALAPITIYA.**
T.P.:- 077 - 340931


### ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
1934 ** 04 ** 08

உதிர்வு
1998 ** 07 ** 10

திதி
1999.06.29

காத்தமுத்து வீரகத்தி

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய், கடமைமிகு தலைவனாய் பரிவும் பாசமும் காட்டி எங்களை வளர்த்து உயர்வடையச் செய்து விட்டு மீளாப் பயணம் சென்று விட்ட எம் தெய்வமே. ஒருவருடம் சென்றபோதும் உங்கள் இனிய முகமும் நினைவுகளும் எம் மனங்களில் நிழலாடுகின்றதே ஐயா! உங்களை நினைக்கையில் தினமும் கண்கள் குளமாகின்றதே. எப்போது இக் கண்கள் உங்கள் திருமுகத்தைக் காணுமோ? எங்களுடன் நின்று எமக்கு வழிகாட்டும் தெய்வமே, உங்கள் பாதங்களில் எம் அன்பு மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி தவமணி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
தகவல் வீ.முரளி, 128,டைக் வீதி, திருகோணமலை.



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நகர்வும் – நிறுத்தமும்

ரணகோஷ படையினர் மன்னார்-பூநகரி பாதையை கைப்பற்றும் மற்றொரு நகர்வை 26.06.99 சனிக்கிழமை நள்ளிரவின் பின்னர் ஆரம்பித்தனர்.

வழக்கமாக அதிகாலையிலேயே ஆரம்பமாகும் படை நடவடிக்கை இம்முறை நள்ளிரவோடு ஆரம்பமாகியது.

இதற்கு முன்னர் ரணகோஷ 04 நடவடிக்கையில் விடத்தல்தீவை கைப்பற்றி விட்டதாகவும், அதனால் ரணகோஷ 04 நடவடிக்கை இலக்கை எட்டியதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

நாம் அதனை மறுத்திருந்தோம். பாப்பா மோட்டையிலேயே படையினரது முன்னரங்க நிலைகள் இருப்பதாக கூறியிருந்தோம்.

அதேபோல பாப்பா மோட்டையிலிருந்து நாயாறு ஆற்றின் கரையை ஒட்டியதாக பெரியமடுவை இணைக்கும் தொடுப்பு முயற்சியும் புலிகளது தாக்குதலால் தடுக்கப்பட்டிருந்ததை தெரிவித்திருந்தோம்.

நாம் கூறிய இந்த கள முனைத் தகவலை தற்போது படையினர் வெளியிட்டுவரும் கள முனை செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

எனவே ரணகோஷ 04 புலிகளது கடும் எதிர்ப்பால் இலக்கை எட்டாது தடைப்பட்டது என்பது உறுதியாகிறது.

ரணகோஷ 04 விடத்தல்தீவு எல்லையை நெருங்கியபோதும், உள்ளே பிரவேசிக்க முடியவில்லை. பாப்பாமோட்டை எல்லையோடு படை நகர்வை புலிகள் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

அதே போன்றே, நாயாறு ஓரமாக பாப்பா மோட்டை முதல் பெரியமடுவரையான குறுக்குத் தொடுப்புக்கும் புலிகள் கடும் எதிர்ப்பைக் காட்டியிருந்தனர்.

ரணகோஷ 03, 04 ஆகிய நடவடிக்கைகள் இரண்டும் பள்ளமடு, விடத்தல்தீவு ஆகியவற்றை கைப்பற்றுவதையும், பெரிய மடுவரை குறுக்குத் தொடுப்பு ஏற்படுத்தவுமே முன்னெடுக்கப்பட்டன.

எனினும் ரணகோஷ 02 வரை படையினரை முன்னேற அனுமதித்த புலிகள், ரணகோஷ 03, 04 இரண்டையும் எதிர்த்து முறியடிப்பு சண்டை நடத்தினார்கள்.

மன்னார்-பூநகரி சாலையில் முன்னேறிய படையினரை எறிகணைகள் மூலம் பீரங்கிப் படையணி தடுத்து நிறுத்தி, பலத்த சேதம் விளைவித்தது.

பெரியமடுவில் இருந்து நகர்ந்த படையினரை புலிகளது விசேஷ படையணி தரைச் சண்டை மூலம் எதிர்கொண்டது. இச் சண்டைகளின்போது புலிகள் தாக்குதல் அணி தளபதி ஒருவரையும் இழந்திருந்தனர்.

ரணகோஷ 03, 04 ஆகிய நடவடிக்கைகள் பலத்த எதிர்ப்பை சந்தித்ததையடுத்து, சில நாட்கள் பாப்பாமோட்டை, பெரிய மடு முன்னரங்க முனைகளில் அமைதி நிலவியது.

அந்த அமைதியை 22.06.99 அன்று புலிகளது விசேஷ அணி குலைத்தது.

பாப்பா மோட்டை பகுதியில் இருந்த ரணகோஷ படையினரின் முன்னரங்க காவல் அரண்கள்மீது ஒரே நேரத்தில் விசேஷ அணி அதிரடித் தாக்குதல் தொடுத்தது.

மொத்தம் 20 காவலரண்கள்மீது தாக்குதல் நடந்தது. இத் தாக்குதலில் ஏழுக்கு மேற்பட்ட படையினர் பலியானதாக புலிகள் கூறினர். புலிகள் தரப்பில் மூன்று பேர் பலியானார்கள். நாலு படையினர் பலியானதாக படையினர் கூறினர்.

பாப்பா மோட்டையில் இருந்து படை நகர்வுக்கான அடுத்த கட்ட ஆயத்தங்கள் நடைபெறும்போதே புலிகளது தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தகைய தாக்குதலை 'ஏற்பாட்டுக் குலைப்பு' தாக்குதல் என்று அழைக்கின்றனர்.

ரணகோஷ படையினரை தேடிச்சென்று புலிகள் நடத்திய பரவலான முதல் தாக்குதலும் இதுதான். அதற்கு முன்பு ரணகோஷ படையினர் முன்னேறும்போதே மோதல்கள் மூண்டிருந்தன.

காவலரண்கள்மீதான தாக்குதல்களில் ஆயுதங்கள் சிலவும் புலிகளால் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ரணகோஷ படையினர் நிலைகொண்ட பகுதிகளில் தாக்குதல் நடத்தும் பொறுப்பு புலிகளின் விசேஷ படையணியிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாப்பாமோட்டையில் புலிகள் தாக்குதல் நடத்திய நான்கு நாட்களின் பின்னரே, அங்கிருந்து படை நகர்வு ஆரம்பமானது.

பாப்பா மோட்டையில் இருந்து விடத்தல்தீவு பத்துகிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.

பாப்பா மோட்டையில் இருந்து விடத்தல் தீவுக்கு உள்பாதை வழியாகவும் செல்லலாம். அல்லது மன்னார் பூநகரி நெடுஞ்சாலை வழியாக பள்ளமடுவரை சென்று அங்கிருந்தும் செல்லலாம். பள்ளமடுவில் இருந்து விடத்தல்தீவு 2.5 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது.

மன்னார்-பூநகரி சாலையில் உள்ள பள்ளமடுவை கைப்பற்றுவதால் ஒரே நடவடிக்கையில் பல பலன்கள் உள்ளன.

1) மன்னார்- பூநகரி சாலையில் மேலும் முன்னேறி நிலை கொள்வதாக அமையும்.
2) பள்ளமடுவை கைப்பற்றினால் அங்கிருந்து குறுக்காக பெரியமடுவுடன் தொடுப்பை ஏற்படுத்த சாதகம் அதிகம்.
03) பள்ளமடுவை கைப்பற்றினால் விடத்தல்தீவும் கையில் வந்தது மாதிரித்தான்.

எனவேதான் 26.06.99 அன்று பாப்பா மோட்டையில் இருந்து படையணிகள் பள்ளமடு சந்தியை இலக்கு வைத்து முன்னேறின.

நள்ளிரவு நேரம் திடீரென்று படை நகர்வுகள் ஆரம்பித்தமையால் புலியணிகள் போதியளவு களமுனையில் இருக்கவில்லை.

அவ்வாறிருந்தும் காப்பரண்களில் இருந்த புலிகள் முன்னேறும் படையினரை எதிர்கொண்டு தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர்.

ஆயினும் புலிகளது காப்பரண்கள் சில படையினரால் கைப்பற்றப்பட்டதோடு, புலிகள் தரப்பிலும் இழப்புக்கள் ஏற்பட்டன.

படையினர் முன்னேறும் தகவல் எட்டியதும், புலிகளது ஏனைய அணிகள் உதவிக்கு விரைந்தன. பீரங்கிப் படையணியும் தாக்குதலை ஆரம்பித்தது.

அதற்கிடையே புலிகளது காப்பரண்களை கைப்பற்றி சில கிலோ மீட்டர் தாரம் படையணிகள் முன்னேறி நிலைகொண்டுவிட்டன.

இம் மோதல்களின் போதுதான் புலிகள் இயக்க உறுப்பினர்களது சடலங்களும் படையினரது கட்டுப்பாட்டில் வந்த பகுதிக்குள் மாட்டிக் கொண்டன. அவர்களது ஆயுதங்களும் படையினரால் கைப்பற்றப்பட்டன.

எனினும் பள்ளமடு சந்தியை நோக்கி படையினர் தொடர்ந்து முன்னேற முடியவில்லை. விரைந்து வந்த புலிகளது அணிகள் முறியடிப்பு தாக்குதலை தொடுக்க ஆரம்பித்தன.

இதேவேளை பெரியமடுவில் இருந்து இன்னொரு படையணியும் பள்ளமடுவை நோக்கி நாயாற்று கரை ஓரமாக தரை நகர்வில் இறங்கியது.

அந்தப் படையணியையும் புலிகளின் தாக்குதல் அணிகளும், பீரங்கிப் படையணியும் தடுத்துத் தாக்கின.

இந்த மோதல்களின்போது இடையில் சிக்கி ஒன்பது பொதுமக்களும் பலியானார்கள்.

ரணகோஷ படை நடவடிக்கை ஆரம்பமான பின்னர் நடைபெற்ற மிகப் பெரும் சண்டை இதுதான்.

டாங்கிகள் சகிதம் முன்னேற முயன்ற படையினர்மீது புலிகளின் டாங்கி எதிர்ப்பு படையணி தாக்குதல் நடத்தியது. ஒரு டாங்கி சேதமானதாக படைத்தரப்பு கூறுகிறது. ஒரு டாங்கி முற்றாக தகர்ந்ததாகவும், ஆறு டாங்கிகள் சேதமாக்கப்பட்டதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

டாங்கிகளை பெருமளவில் உபயோகித்து புலிகளது தடைகளை தகர்த்துச் செல்லவே படையினர் திட்டமிட்டிருக்க வேண்டும்.

புலிகளது டாங்கி எதிர்ப்பு படையணி விரைவாக செயற்பட்டதால், டாங்கிகள் எதிர்பார்த்தளவு பயனளிக்கவில்லை.

புலிகளது விசேஷ அணி, பீரங்கிப் படையணி, டாங்கி எதிர்ப்பு அணி ஆகிய மூன்றும் இணைந்தே பள்ளமடு சந்தியை கைப்பற்றும் நகர்வுக்கு எதிராக பெரும் முறியடிப்பு தாக்குதல் தொடுத்தன.

இம் மோதல்களில் முதல் மூன்று நாட்களும் (26 முதல் 29வரை) புலிகளது தரப்பில் 30 பேர் வரை பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

86 புலிகளது உடல்களை படையினர் மீட்டதாக கூறப்பட்டபோதும், 36 உடல்கள்தான் மருத்துவ மனையில் வைக்கப்பட்டிருந்தன. மீதி உடல்கள் எங்கே? பழுதடைந்ததால் எரித்து விட்டதாகவும் கூறவியலாது. ஏனெனில் 36 உடல்களில் பல பழுதடைந்த நிலையில்தான் காணப்பட்டன. மோதல் நடுவே உயிரிழந்த ஒன்பது பொது மக்களின் உடல்களும் அவற்றுக்குள் இருப்பதாகவும் தகவல்.

படையினர் தரப்பில் 250ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். பலியானோர் எண்ணிக்கை படையினர் கூறுவதற்கு நேர் எதிர் என்பது சுதந்திரமான தகவல்களின்படி தெரிகிறது.

இருநூறு படையினர் வரை நான்கு நாள் சமரில் பலியானதாக புலிகள் இறுதியாக கூறியுள்ளனர். இதனை படையினர் மறுத்து வருகின்றனர்.

படையினர் தரப்பில் பெரும் இழப்பு இல்லையானால் நான்கு நாட்களாக பள்ளமடுச் சந்தியை கைப்பற்ற முடியாமல் போனது ஏன்? என்ற கேள்வி எழுவது இயல்பே!

ரணகோஷ 04 இலக்கை எட்டவில்லை. எனவே ரணகோஷ 04 இரண்டாம் கட்டம் என்ற பெயருடன் பள்ள மடுவை கைப்பற்றும் முயற்சியில் குதித்துள்ளனர்.




ரணகோஷ பல கட்டங்களை கொண்டது. அதில் ஒரு கட்டமான ரணகோஷ 04 பல உப கட்டங்களை கொண்டதாக அறிவிக்கப்படுவது குழப்ப நிலையைத்தான் காட்டுகிறது.

ரணகோஷ 04 கட்டம் இரண்டும், இச் செய்தி எழுதப்படும்வரை தனது இலக்கான பள்ளமடு சந்தியை சென்றடையவில்லை. பள்ளமடுவில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில்தான் மோதல்கள் நடந்து வருகின்றன.

ஏற்கனவே வவுனியா-யாழ் சாலையிலும் முக்கிய சந்திகளை படையினர் நெருங்கிய பின்னர் ஒரு சில கிலோ மீட்டர் தூரத்தை கடக்க மாதக்கணக்காகக்கூட சண்டைகள் நடந்துள்ளன.

அதே நிலைதான் தற்போது மன்னார் பூநகரி சாலையிலும் ஏற்பட்டுள்ளது. பள்ளமடு சந்தியை கைப்பற்ற மூன்று கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. அதற்காக இதுவரை நான்கு நாட்கள் சண்டை நடந்திருக்கிறது.

புலிகள் ஒரு எல்லையை வரையறுத்து அதற்கு மேல் படைகள் நகர அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்து, சண்டையை ஆரம்பிக்கிறார்கள்.

ஜெயசிக்குறுய் எதிர் சமரிலும், தற்போது ரணகோஷ எதிர் சமரிலும் புலிகள் அவ்வாறுதான் செய்கின்றனர்.

ரணகோஷ நடவடிக்கையின் முதல் இரு கட்டங்களிலும் படையினர் நீண்டு பரவி நிலை கொள்ள புலிகள் அனுமதித்தனர்.

வவுனியா-யாழ் சாலையை கைப்பற்றியே தீருவோம் என்று நின்ற படைத்தரப்பு அந்த முயற்சியை கைவிட்டு, மன்னார்- பூநகரி சாலையை கைப்பற்றும் நகர்வுக்கு திசை திரும்புவதை புலிகளும் விட்டுப் பிடித்தனர்.

அவ்வாறு திசை திரும்பினால் மேலும் பெரு நிலப்பரப்பில் படைகள் நிலைகொள்ள வேண்டியிருக்கும். அதனால் படை பலம் செறிவு குறைந்து பலவீனமாகும் என்றே புலிகள் காத்திருந்தனர்.

அதே போலவே படையினரும் ரணகோஷ நடவடிக்கை மூலம் நிலப்பகுதிகளை மளமளவென்று கைப்பற்றியதால், அங்கு நீண்டு நிலைகொள்ள வேண்டியதாகியது.

அதேசமயம் தாம் கைப்பற்றிய பகுதிகளில் படையினர் எங்கும் நிறைந்திருக்கவில்லை. அவ்வாறு நிலைகொள்ள படையினர் தொகை போதாது. அதனால் ரணகோஷ படையினர் கைப்பற்றியதாக கூறப்படும் நிலப்பகுதிகளில் புலிகள் தற்போதும் நிலை கொண்டுள்ளனர்.

பல பகுதிகளில் வீதியோரமாகவும், பாதுகாப்பான இடங்களிலும்தான் படையினர் நிலை கொண்டுள்ளனர். உள்ளே புலிகள் நடமாடுகின்றனர்.

ஆனால் இத்தகைய இராணுவ நடவடிக்கைக்காக பெருமளவு மக்கள் இடம்பெயர வேண்டி ஏற்பட்டதுடன், பல வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. பெரும்பாலும் வீதியோர வீடுகள் புல்டோசரால் தரைமட்டமாக்கப்பட்டு பாதுகாப்பு அரண்களாக மாற்றப்பட்டுள்ளன.

சுண்டைக்காய் காற்பணம், சுமைகூலி முக்காற் பணம் என்பது போன்று, படை நடவடிக்கையால் ஐந்து கிலோ மீட்டர் நிலம் பிடிக்கப்படும்போது குறைந்தது 20 கிலோ மீட்டர் பகுதி வரை பாதிக்கப்படுகிறது.

ரணகோஷ 04 இரண்டாம் கட்டத்தில் படையினர் பள்ளமடு சந்திக்கு செல்ல முன்பாகவே விடத்தல்தீவு வெறிச்சோடிப்போயுள்ளது. ஷெல் தாக்குதல்களால் விடத்தல்தீவில் மட்டும் ஐந்து பேர் பலியானதுடன் 60 பேர் காயமடைந்தனர்.

கட்டாவயல், கோவில்குளம், கள்ளியடி ஆகிய பகுதிகளிலும் எறிகணைகள் சரமாரியாக ஏவப்பட்டதால் மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர். இவர்கள் பாலியாறு, வெள்ளாங்குளம், மூன்றாம்பிட்டி ஆகிய பகுதிகளில், தங்க இடமின்றி வீதியோரங்களில் இருக்கின்றனர். உணவு இன்றித் தவித்த இம் மக்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் உதவியளித்துள்ளன.

மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் காரியாலயம் உட்பட வங்கிகள் போன்றவை இடம் பெயர்ந்துள்ளன.

இதேவேளை மாங்குளம் பகுதியில் இருந்தும் சண்டை நடைபெறாத பகுதியான பாண்டியன் குளம் நோக்கி எறிகணை வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

மன்னார்-பூநகரி சாலையில் படையினர் பள்ளமடுவை எப்படியாவது கைப்பற்றத்தான் போகின்றனர்.

ஆனால் அதற்கு கொடுத்துள்ள, கொடுக்கப்போகும் விலை பெரிதாக இருக்கும்.

மன்னார்-பூநகரி சாலையில் வவுனியா-யாழ் சாலை போல நீண்ட சமருக்கு புலிகள் தயாராக இருக்கிறார்களா? என்பது கேள்விக் குறி.

இந்த சாலையை தக்கவைக்க பெரும் ஆட்பல இழப்பை கொடுக்க புலிகள் முன்வரமாட்டார்கள்.

ஆனால், படையினரின் ஆட்பலத்தை முடியுமானவரை அழித்தொழிக்கும் களமாகவே இதனை பயன்படுத்தப்போகிறார்கள்.

புலிகளது பீரங்கிப் படையணியே மன்னார் பூநகரி சாலையில் படைகளுக்கு பெரும் சவாலாக இருக்கும்.

அடர்ந்த காட்டுப் பகுதிகளில்கூட இலக்கறிந்து துல்லியமாக தாக்கும் திறனை புலிகளது பீரங்கிப் படையணி நீண்ட போர் அனுபவம் மூலம் பெற்றுள்ளது.

மன்னார்-பூநகரி சாலையில் பரந்த வெளிகள் உள்ளன. இங்கு புலிகள் தரைத் தாக்குதல் நடத்துவது கடினமாக இருக்கலாமே தவிர, பீரங்கிப் படையணி எறிகணைகளை பொழிய தடையிருக்காது.

மன்னார்-பூநகரி சாலையின் மொத்த நீளம் 75 கிலோ மீட்டர். அதன் பின்னர் உள்ள யாழ் சாலை படையினரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அதனை கைப்பற்றத் தேவையில்லை.

மன்னார்-பூநகரி சாலையில் தற்போது கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரம் வரைதான் படையினர் நகர்ந்துள்ளனர்.

ரணகோஷ 03இன் பின்னர்தான் புலிகள் ரணகோஷ படையினருக்கு எதிரான முறியடிப்பு சமரை தொடுக்க ஆரம்பித்தனர்.

அதிலும் ரணகோஷ 03இல் பெரியமடு பள்ளமடு தரைத் தொடுப்பு முயற்சியைத்தான் புலிகள் தடுத்தனர்.

ரணகோஷ 04இன் போதும் பாலமோட்டைவரை படைகள் நகர பெரும் எதிர்ப்பு காட்டவில்லை. பெரியமடு, பாலமோட்டை தொடுப்பு முயற்சியைத் தடுத்து சண்டையிட்டனர்.

எனவே, மன்னார்-பூநகரி சாலையில் ரணகோஷ படையினரை எதிர்த்து புலிகள் முறியடிப்பு சமரை 26.09.99 அன்றுதான் ஆரம்பித்தனர்.

அதன் பின்னர் நான்கு நாட்கள் நடந்த சண்டைகளில் படையினரால் கிட்டத்தட்ட ஏழு கிலோமீட்டர் தூரம் வரைதான் செல்ல முடிந்தது. இலக்கு வைத்த பள்ளமடு சந்தியை நான்கு நாட்களாக கைப்பற்ற முடியவில்லை.

எனவே, புலிகள் வவுனியா-யாழ் சாலையில் கவனமாக இருப்பதால், மன்னார்-பூநகரி சாலை வழியாக சுலபமாக சென்றுவிடலாம் என்று படைத்தரப்பு போட்ட கணிப்பு பொய்த்துள்ளது.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையிலும் வவுனியா முதல் ஓமந்தை வரையான பத்துக் கிலோமீட்டர் தூரத்தை புலிகளது கடும் எதிர்ப்பின்றியே படையினர் துரிதமாகக் கடந்திருந்தனர்.

அதன் பின்னர் ஒவ்வொரு கிலோ மீட்டரை கடப்பதற்கும் பலத்த விலை கொடுக்க வேண்டி இருந்தது.

ஓமந்தையில் இருந்து மேலும் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் வரையே ஒரு வருட சமரில் முன்னேற முடிந்தது.

தற்போது மன்னார்-பூநகரி சாலையில் பதினைந்து கிலோ மீட்டர் வரை முன்னேறியுள்ள படையினர், அதில் 7 கிலோ மீட்டர் தூரத்தையே எதிர்ப்புக்கள் மத்தியில் கடந்துள்ளனர்.

இந்த நிலப்பிடிப்புக்கு கொடுத்துள்ள விலை மலைக்க வைக்கிறது. பூரண விபரங்களை தணிக்கை தடுக்கிறது. கொழும்பு, அநுராதபுர வைத்திய சாலைகளில் படையினர் நிறைந்துள்ளனர். ஆம்புலன்ஸ் வண்டிகள் பறக்கின்றன. விமானங்களும் ஓயாமல் பறந்தன.

ஆனால் புலிகள் தரப்பில் பலத்த உயிரிழப்பு என்று தகவல் தரும் படைத்தரப்பு, தமது தரப்பு இழப்பை நான்கு நாட்களாக திட்டவட்டமாக கூறவில்லை. இந்த தயக்கமும் சந்தேகம் தருகிறது.

ஆனால் புலிகள் முதல் நாள் போரில் (26.06.99) தமது தரப்பில் 22 பேர் பலியானதை உடன் அறிவித்தனர்.

கள நிலவரம் காரணமாக இழப்புக்களை அறிவிக்க முன்னே பின்னேயானாலும் தமது இழப்பு விபரங்களை புலிகள் மறைப்பதில்லை என்ற நம்பிக்கை இருக்கிறது. அதே நம்பிக்கையை மறு தரப்பு ஏற்படுத்த தவறுகிறது.

மன்னார்-பூநகரி சாலையை படையினர் கைப்பற்றுவதானால், படைப்பலத்தில் பாரிய சரிவின் பின்னரே கைப்பற்ற வேண்டும் என்று புலிகள் முடிவு செய்துவிட்டனர்.

அவ்வாறு பாரிய சரிவு ஏற்பட்டால்தான் அதன்பின்னர் பலவீனமான படையணிகளை தமது பலத்திற்கு ஏற்ப தாக்கியழிக்கலாம் என்பது புலிகளது உத்தி.

முன்னர் வவுனியா-யாழ் சாலையில் ஓமந்தையில்தான் புலிகள் முறியடிப்பு சமரை ஆரம்பித்தனர். அப்போது நடந்த சண்டையைவிட, தற்போதைய பள்ளமடு சண்டையின் உக்கிரம் அதிகம். 'ஜயசிக்குறுய்' சமரில் புலிகளது அனுபவமும், உத்திகளில் தேர்ச்சியும், பீரங்கிப் படையணியும் படையினருக்கு பலத்த சவாலாக மாறி நிற்கின்றன.

எப்படியாவது பள்ளமடுவை படையினர் கைப்பற்றத்தான் போகின்றனர். ஆனால் அதற்கு கொடுக்கப்படும் விலை மன்னார்-பூநகரி சாலையில் படை ஆட்பலத்தை கேள்விக்குள்ளாக்கும்.

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



**ஹஜ், சிவராத்திரி** நாட்கள் விடுமுறை நாட்களாக மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளதல்லவோ? தமிழ் பேசும் வாக்குகள் திசை மாறியதால்தான் இந்த அறிவிப்பாம்! தேர்தல்களும் நெருங்குதல்லோ!

**தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு** ஒரு சவால். தேனகத்தில் சீருடையினரால் ஒரு அப்பாவி கொல்லப்பட்டுள்ளார். இன்னொருவர் இம்சைப் படுத்தப்பட்டுள்ளார். இதுக்கு விளக்கமே கோரத் தேவையில்லை. சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கச் செய்யட்டும் பார்க்கலாம்! அதை விடுத்து "விளக்கம் கேட்கிறோம். அழைப்பு விடுக்கிறோம்!" என்று 'பந்தாவாக' அறிக்கை விட்டு யாது பயனுங்கோ?!

**திருவான மலையின்** வெகுஜனப் பிரதிநிதிதான் அதிகாரத் தரப்பாருக்கு இராஜதந்திர பேச்சாளர் போல செயற்படுகிறார். ரெண்டு எழுத்தார் கடும் கோபத்தில் இருக்கின்றனராம். வெகுஜனப் பிரதிநிதியைப் பற்றி திருவான மலைப் பிரமுகர்கள் சிலரிடம் காட்டமாகவும் கூறியுள்ளனராம். அதனால் ஊருக்குச் செல்வதைக் குறைத்துள்ளாராம் பிரதிநிதி.

**அரியாலை, கொட்டடி** புதைகுழிகள் பற்றி தமிழ்க் கட்சிகள் பேசவில்லையல்லவோ? சில கட்சிகள் அதுபற்றி பேசமாட்டோம் என்றும் சீருடைத் தரப்புக்கு உத்தரவாதம் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

**யாழ் செம்மணி** புதைகுழிகளைத் தோண்டிய உள்ளூர்காரர்கள் ஒரு அளவுவரை தோண்டிவிட்டு நிறுத்திவிட்டனராம். பார்வையாளர்களாகச் சென்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள்தான் மேலும் தோண்டுமாறு சற்று காட்டமாகக் கூறினார்களாம். அப்படித் தோண்டியதால்தான் இரண்டு எலும்புகள் கண்டு பிடிக்கப்பட்டன. இல்லையென்றால் பாம்பு பல்லிதான் கிடக்கும் என்று கதை முடிந்தாலும் முடிந்திருக்கும்.

**கொழும்பில் பிறப்பு, இறப்பு** பதிவாளர்களாக தமிழர்களை நியமிக்க இருப்பதாக ஐந்து மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடந்த காலத்தில் அறிவிக்கப்பட்டது ஞாபகம் இருக்குதோ? பத்திரிகைகளிலும் முன்பக்கத்தில் வெளியான செய்தியல்லோ? அப்போதே அது தேர்தல் வாக்குறுதி; செயலாகாது என்று 'முரசு' கூறியதல்லோ! பலமாதங்களாகியும் ஒரு பதிவாளர்கூட நியமிக்கப்படவில்லை! இந்த வாக்குறுதிக்கே இந்தக் கதி என்றால்...?

**தலைநகரிலுள்ள வெளிநாட்டு** தூதரகம் ஒன்றின் இராஜதந்திரி தமிழ்க் கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்து உரையாடினாராம். பின்னர் பத்திரிகையாளர் ஒருவருடன் பேசும்போது, "வடக்கு-கிழக்கில் நாம் அறிந்த நிலவரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் அறியாதுள்ளனவே!" என்று ஆச்சரியம் தெரிவித்தாராம்.

**யாழ்ப்பாணம் மானிப்பாயில்** தனியாக வசித்த இளைஞன் மரணம் என்று செய்தி வந்ததல்லோ? இதற்கும் சீருடையினருக்கும் சம்பந்தம் இல்லையாம். பலியானவர் ரெண்டு எழுத்தாரும் அல்லவாம். ஊருக்குள் பெண் புரசுகளுக்குத் தொல்லை கொடுத்தாராம். ஊர் சேர்ந்து மரண அடி கொடுத்து நரகத்திற்கு ரிக்கெட் எடுத்துக் கொடுத்துப் போட்டுதாம். இந்த மாதிரி சமாச்சாரங்களை விசாரிப்பதில் யாழில் உள்ள சீருடையினர் கவனம் செலுத்துவதில்லை. முறைப்பாடுகளை காது கொடுப்பதில்லையாம். அதுதான் சனமே சட்டத்தை கையில் எடுத்து கொட்டத்தை அடக்கிப்போட்டுதாம்!

**இந்தியாவும், பாகிஸ்தானும்** சார்க் நாடுகள். சார்க் தலைவி மௌனம் சாதிக்கிறார். இது இராஜதந்திர வட்டாரங்களை ஆச்சரியப்பட வைத்திருக்கிறதாம். உண்மைகளைப் பேசினால் அரசுக்கு பிடிக்காதே-என்று மௌனம் சாதிக்கும் தமிழ்க் கட்சிகள் போல, யாரையும் பகைப்பானேன்? என்று தலைவியும் மௌனம் சாதிக்கிறாராக்கும். ஆனாலும் அயலக மட்டத்தில் இது பற்றி அதிருப்தி நிலவுகிறதாம். ஆக்கிரமிப்பு என்று அமெரிக்காவே கூறும்போது சார்க் தலைவி மௌனம் சாதிப்பது அவர்களுக்கு வருத்தம்தானாம்.

**கிரிக்கெட் அணி** மாற்றங்களுக்குக் காரணம் தோல்வியல்லவாம். அதிகார சக்தியின் அதிருப்தியை அணித் தலைவர் சம்பாதித்ததுதான் காரணமாம். அதுதான் அதிரடி மாற்றங்கள்!

**இவ்வாரப் பொன்மொழி: உபயம்: மாவீரன் நெப்போலியன்.**

**போக்கிரித்தனத்துக்கு எல்லையுண்டு! முட்டாள் தனத்துக்கு எல்லையில்லை!"**


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

240

ஆனையிறவு படைத்தளம்மீதான தாக்குதல் பற்றி பிரபாகரன் விளக்கமளித்துவிட்டு சென்ற கையோடு, குண்டு வீச்சு விமானங்களின் சத்தம் வானில் கேட்டது.

புலிகள் அனைவரும் பதுங்கிநிலை எடுத்துக் கொண்டனர். விமானங்களை குறிபார்த்து துப்பாக்கிகள் உயர்ந்து காத்திருந்தன.

ஆனால் இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் ஆனையிறவுத் தளத்தை நோக்கியே பறந்து சென்றன.

தளப்பகுதியை அண்டியதும் தாழப் பறந்து தரையை நோட்டமிட்டன. ஆனையிறவில் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று தகவல்கள் கிடைத்ததால் அடிக்கடி கண்காணிப்பு பறப்புக்களில் விமானப் படையினர் ஈடுபட்டனர்.

ஆனையிறவு முகாமை பலப்படுத்தும் வேலைகளும் நடைபெற்றன. ஜூலை 9ம் திகதி பகல் பொழுதில் குண்டு வீச்சு விமானங்கள் புடைசூழ உலங்கு வானூர்திகள் பறந்து சென்று தளத்தில் இறங்கின.

உணவுப் பொருட்களும் ஆயுத தளபாடங்களும் தளத்துக்கு விநியோகித்துவிட்டு சென்றன.

புலிகள் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது, தளத்துக்குள் பாதுகாப்பு ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தன.

எனவே, இரு தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக சமருக்கான ஏற்பாடுகளை செய்து கொண்ட களமாகவே ஆனையிறவு சமர்க்களம் மாறவிருந்தது.

## முற்றுகை

ஜூலை 10ம் திகதி– 1991. அதிகாலை 4.20 மணி.

ஆனையிறவுத் தளத்தின் இரண்டு முனைகளாகிய தடை முகாம் நோக்கியும், உல்லாச விடுதி முகாம் நோக்கியும் புலிகளது 'பசீலன் 2000' ரக மோட்டார்கள் குறிவைத்து நிறுத்தப்பட்டன.

புலிகளது சொந்த உற்பத்தியான பசீலன் எறிகணைகள் முகாமை நோக்கி பறந்து சென்று விழுந்து வெடிப்பதுதான் சண்டை ஆரம்பமாவதற்கான அறிகுறி.

அதிகாலை 4.30 மணிக்கு பசீலன் எறிகணைகள் முகாமை நோக்கிச் சீறிப் பறந்தன. விழுந்து வெடித்தன.

முற்றுகைச் சமர் ஆரம்பித்துவிட்டது என்பதை பசீலன் எறிகணைகள் பிரகடனப் படுத்தின.

ஜூலை 11ம் திகதி அதிகாலைவரை முகாம்மீது தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்தன. பசீலன் எறிகணைகளே அதிகளவில் உபயோகப்படுத்தப்பட்டன.

அப்போது ஆட்டிலெறிகள் புலிகளிடம் இல்லையானாலும், பசீலன் மோட்டார் எறிகணைகள் கணிசமான பங்கை வகித்தன.

ஆட்டிலெறிகள் இருந்திருந்தால்கூட முகாம் அருகே கொண்டு சென்று பயன்படுத்தியிருக்க முடியாது. இனம் கண்டு அழிக்கப்பட்டுவிடும்.

ஆனையிறவு தளம் தாக்கப்படும் செய்தி கொழும்புக்கு எட்டியது. போர் விமானங்கள் தயாராகின. உலங்கு வானூர்திகள் புறப்பட ஆயத்தமாகின.

'மிக முக்கிய தளம்மீது தாக்குதல் தொடுத்துள்ளனர் என்பது உண்மைதான். ஆனால் மிக எளிதாக முறியடித்துவிடலாம். முன்கூட்டியே தகவல் கிடைத்ததால், தாக்குதலை முறியடிக்கும் சகல ஏற்பாடுகளும் தளத்தில் செய்யப்பட்டுள்ளன.' என்று இராணுவத் தளபதி ஜனாதிபதிக்கு நம்பிக்கையோடு அறிவித்தார்.

## தடை

ஜூலை 10ம் திகதி பொழுது புலர்ந்ததும் போர்விமானங்களும், உலங்கு வானூர்திகளும் வானை ஆக்கிரமித்தன.

உலங்கு வானூர்திகள் தாழப் பறந்து தளத்துக்குள் இறங்க முற்பட்டன. உள்ளே காயமடைந்தவர்களை மீட்க அவை தரையிறங்க வேண்டியிருந்தது.

எறிகணைத் தாக்குதல்களால் படையினர் பலர் காயமடைந்திருந்தனர். எத்தனையோ தடவை முயன்றும் அவற்றால் தரையிறங்க முடியவில்லை.


புலிகளது விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் உலங்கு வானூர்திகளை இறங்க விடாது வானில் தடை வேலி அமைத்தன.

அதனால் உலங்கு வானூர்திகள் தளத்துக்குள் இறங்க மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

முதல் நாளிலேயே தளத்துக்கு வெளியே இருந்து உதவி செய்ய முடியாதவாறு புலிகளது விமான எதிர்ப்புப் படையணி வெற்றிகரமாக தடுத்துவிட்டது.

படையினருக்கு இது எதிர்பாராத நிலை. கொழும்பில் இராணுவத் தலைமை சற்று யோசிக்கத் தொடங்கியது.

முதல் நாளன்றே புலிகளை பின்வாங்கச் செய்யலாம். பரந்த வெளிகளில் விமானத் தாக்குதலுக்கு புலிகள் ஈடுகொடுக்க முடியாது என்று நினைத்தது தப்புக் கணக்காகி விட்டது.




1. பெரிய உப்பள பிரதான படைமுகாம்
2. இராணுவ தடை முகாம்
3. பாடசாலை இராணுவ முகாம்
4. பிரதான உப்பள அலுவலக இராணுவ முகாம்
5. உல்லாச விடுதி இராணுவ முகாம்
6. யாழ்ப்பாணம் நோக்கிய பிரதான வீதி
7. யாழ்ப்பாணம் நோக்கிய புகையிரதப் பாதை
8. புல்லாவெளிச் சந்தி நோக்கிய பாதை
9. தட்டுவன் கொட்டிப் பாதை

பகல் முழுவதும் எறிகணைத் தாக்குதல், விமான எதிர்ப்புத் தாக்குதல் போன்றவற்றில் பாதுகாப்பான நிலைகளில் நின்றவாறு புலிகள் சண்டையிட்டனர்.

## புல்டோசர்

பத்தாம் திகதி இரவு உல்லாச விடுதி முகாமை கைப்பற்றுவது என்பதுதான் திட்டம்.

ஆனையிறவுத் தள தென்பகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த பால்ராஜ் அதற்குரிய ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார். தாக்குதலணி பொறுப்பாளர் சூசை, மகளிர் படைப்பிரிவு தளபதி ஜனா ஆகியோர் தமது அணிகளைத் தயார் நிலையில் வைத்திருந்தனர்.

தென்பகுதியில் இருந்த புலிகளது காவல் அரணில் இருந்து உல்லாச விடுதிமுகாமை எட்ட வேண்டுமானால் 500 யார் தூரத்தை கடந்தாக வேண்டும்.

அதனைக் கடப்பது சுலபமல்ல. தற்பாதுகாப்பு நிலை எடுக்க முடியாத பரந்த வெளி. முகாமில் இருந்து படையினரது இயந்திரத் துப்பாக்கிகள் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்க்கும். வேட்டுக்கள் மூலமே வேலி அமைக்கும்.

அப்படியானால் எப்படி அந்த இடைத் தூரத்தைக் கடப்பது? அதற்கும் புலிகளிடம் திட்டம் இருந்தது. கவசமிடப்பட்ட புல்டோசர்களையும், உழவு இயந்திரங்களையும் புலிகள் தயார் செய்திருந்தனர்.

அவற்றை முகாமை நோக்கி நகரவைத்து, அவற்றையே காப்பரண்களாக கொண்டு பின்னால் செல்லும் தாக்குதல் அணிகள் முதலில் காவலரண்களைக் கைப்பற்ற வேண்டும்.

அடுத்ததாக உல்லாசவிடுதி முகாமின் மத்திய பகுதிமீது தாக்குதலைத் தொடுத்து அம் முகாமை கைப்பற்றுவது என்று திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

## தாக்குதல்

பத்தாம் திகதி இரவு பத்து மணிக்கு உல்லாச விடுதி முகாம்மீது தாக்குதல் ஆரம்பமானது. 'பசீலன் 2000'ரக எறிகணைகள் முகாமுக்குள் ஏவப்பட்டன.

அவை ஏவப்பட்டு விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும்போதே மூன்று முனைகளில் இருந்து புல்டோசர்களும், உழவு இயந்திரங்களும் முகாமை நோக்கி விரைந்தன.

புல்டோசர்களது நகர்வைக் கண்டதும் படையினர் தமது அரண்களில் இருந்து தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர்.

கவசமிடப்பட்ட உழவு இயந்திரத்தை குறிவைத்து படையினர் ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சரை ஏவினார்கள். உழவு இயந்திரம் தீப்பற்றி எரியத் தொடங்கியது.

மேலும் முன்னேற முயன்ற உழவு யந்திரங்களும் படையினரும் தாக்குதலில் சேதமாக்கப்பட்டு முன்னேற முடியாது நின்றன.

இந்த உழவு யந்திரங்களுக்குள் இருந்த புலிகளும் பலியானார்கள். இவற்றின் பின்னால் நகர முயன்ற பலர் காயமடைந்தனர்.

இத்தனைக்கும் மத்தியில் புலிகளால் கவச வாகனம் போல தயாரிக்கப்பட்ட புல்டோசா சகல எதிர்ப்புக்களையும் தாண்டி முன்னேறியது.

முன்னேறிய புல்டோசர் முக்கிய காவலரண் ஒன்றை இடித்து தகர்த்தபடி உட்புகுந்தது.

புல்டோசரின் பின்னால் நகர்ந்து முன்னேறிய புலிகளது அணி அந்த காவலரணைக கைப்பற்றியது.

அதுவரை படையினரது காவலரணாக இருந்தது, புலிகளது காவலரணாக மாறியது.

அங்கிருந்தபடியே படையினர்மீது புலிகள் தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர்.

ஒரு காவலரண் தம் கையில் வீழ்ந்தமையால் புலிகள் நம்பிக்கையோடு உழவு யந்திரங்களை மேலும் இறக்கி, அவற்றின் பின்னால் நகர்ந்து முன்வரிசைக் காவலரண்கள்மீது நெருங்கி நின்று தாக்குதல் தொடுத்தனர்.

இருதரப்பிலும் பலர் இச் சண்டையில் பலியானபோதும், முன்வரிசைக் காவலரண்கள் புலிகளின் கையில் வீழ்ந்தன.

## 12 மணிக்கு

இப்போது அடுத்தது என்ன? உல்லாச விடுதி முகாமின் முன்னணிக் காவலரண்கள் வீழ்ந்ததால், அந்த முகாமின் பாதுகாப்பு கேள்விக் குறியானது.

தளபதி பால்ராஜ், சூசை, ஜெனா ஆகியோர் அடுத்த தாக்குதலுக்கு திட்டமிட்டனர்.

புல்டோசரை மேலும் முன்னேறவைத்து முகாமின் மத்திய பகுதி அரண்களை தகர்ப்பது என்று முடிவானது.

புல்டோசர் மிக இலாவகமாக சென்று குறித்த இலக்கை இடித்தது. அதன்பின்னால் நகர்ந்து புலிகள் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தனர்.

இத் தாக்குதலுக்கு சூசை தலைமை தாங்கிச் சென்றார். எந்தெந்த கட்டடங்களை கைப்பற்ற வேண்டும், எந்த அரண்களை புல்டோசர் இடிக்கவேண்டும்? என்றெல்லாம் உத்தரவுகள் வழங்கி அணிகளை வழிநடத்திக் கொண்டிருந்தார்.

உல்லாச முகாமின் கட்டடங்கள் புலிகளிடம் வீழ்ந்த நிலையில் படையினர் அங்கிருந்து பின்வாங்கி, தமது அடுத்த பிதான முகாமான உப்பள முகாமுக்கு சென்றனர்.

தாக்குதல் ஆரம்பித்து இரண்டு மணி நேரத்திற்குள் ஆனையிறவு தள முகாம்களுள் ஒன்றான உப்பள முகாம் புலிகளிடம் வீழ்ந்தது.

சரியாக நள்ளிரவு 12 மணிக்கு உல்லாச முகாமில் நின்றபடி வோக்கிடோக்கி மூலம் முகாம் கைப்பற்றப்பட்ட செய்தியை சூசை அறிவித்தார்.

உல்லாச முகாமை கைப்பற்றும் சண்டையில் 33 புலிகள் பலியானார்கள்.

உல்லாச முகாம் படையினரால் இழக்கப்பட்டதால், அங்கு விமானத் தாக்குதல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதனால் இரவிரவாக அங்கிருந்த காவலரண்களை புலிகள் புதுப்பித்து பலப்படுத்தினர். உடைத்துக் கைப்பற்றிய காவலரண்களை புதுப்பிக்கும் தேவை எழுந்திருந்தது.

மறுநாள் பதினோராம் திகதி பகல் முழுவதும் விமானங்கள் வட்டமிட்டுத் திரிந்தன. குண்டுகளை பொழிந்தன.

புலிகள் நகர்வு முயற்சிகளில் ஈடுபடாது இரவுக்காக காத்திருந்தனர்.

'முகாம் முற்றுகையை முறியடிக்க மூன்று நாள் போதும்' என்று கொழும்பில் படைத் தலைமை கூறிக்கொண்டிருந்தது.

உல்லாச விடுதி முகாம் கைப்பற்றப்பட்ட செய்தியையும் வெளியே கூறாமல் வைத்திருந்தனர்.

ஆனால், முன்பு போல் அல்லாது படைத் தலைமை கவலை கொள்ள ஆரமபித்தது. விமானப் படையினரால் முற்றுகையை முறியடிக்க முடியாதது ஒருபுறமிருக்க, ஒரு முகாமும் வீழ்ச்சி கண்டுவிட்டமையால் புலிகள் தமது கணிப்புக்களை பொய்யாக்க ஆரம்பித்துவிட்டனர் என்று படைத் தலைமைக்கு தெரிந்துவிட்டது. அதனால் விரைந்து பதிலடி கொடுக்க வேண்டும் என்னும் பரபரப்பு படைத் தலைமையிடம் தொற்றிக்கொண்டது.


## இரண்டாம் நாள்

பதினோராம் திகதி இரவு சுமார் 7.30 மணியளவில் ஆனையிறவு தளமுகாமின் மற்றொரு பிரதான முகாமான தடைமுகாமின் ஒரு பகுதிமீது தாக்குதல் ஆரம்பமானது.

படையினரின் தங்கு விடுதியே தாக்குதலின் இலக்காக இருந்தது.

இத் தாக்குதல் ஆனையிறவுத் தளத்தின் வடபகுதித் தாக்குதலுக்கு பொறுப்பான தமிழ்ச் செல்வனின் தலைமையில் நடத்தப்பட்டது.

# ஒரு முன்னேற்றமும் ஒரு பின்வாங்கலும்



கவசமிடப்பட்ட புல்டோசர்

உள நுழையும் தாக்குதல் அணிககு பொறுப்பாக தென்மராட்சிப் புலிகளது பொறுப்பாளர் குணா நியமிக்கப்பட்டிருந்தார். மகளிர் படையணித் தளபதிகளில் ஒருவரான விதுஷாவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

தடைமுகாம் பகுதி புலிகளால் தாக்கப்படலாம் என்பதை ஊகித்து படையினர் தயாராக இருந்தனர்.

தடை முகாம் பகுதி புலிகளிடம் வீழ்ச்சியடைந்தால், ஆனையிறவுத் தளமே வீழ்ச்சி கண்டதற்கு ஒப்பாகிவிடும்.

எனவே தடைமுகாம் பகுதியை காப்பாற்றுவதற்கு என்ன விலை கொடுக்கவும் தளத்தின் படைத் தலைமை தயாராக இருந்தது.

அதனால் தள இராணுவத்தின் பெரும்பலம் அங்கு ஒன்று குவிக்கப்பட்டு தாக்குதலை எதிர்பார்த்து தயார் நிலையில் காத்திருந்தது.

புலிகளின் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கியதுமே, படையினரின் பதிலடித் தாக்குதலும் தொடங்கிவிட்டது.

துப்பாக்கிச் சண்டை தொடங்கிய சில நிமிடங்களில் புல்டோசர் ஒன்று புறப்பட்டது.

சின்ன உப்பளத்திலிருந்து தங்கு விடுதிக்கு செல்லும் ஒரு சிறியபாதை வழியாக புல்டோசர் சென்று கொண்டிருந்தது.

ஆனால் அப்பாதை சரியாக இருக்கவில்லை. அதனால் படையினரின் காவலரணை எட்ட முன்பாகவே பாதையைவிட்டு இறங்கிய புல்டோசர் புதைந்துவிட்டது.

இதனால் சண்டையில் பெரும் தடை ஒன்றை புலிகள் எதிர்நோக்கினார்கள்.

புல்டோசர் காப்பின்றி முன்னேற முயன்ற புலிகள் படையினரின் இயந்திரத் துப்பாக்கிகளின் தடையை தாண்ட முடியாது பலியானார்கள்.

இச் சண்டை நீண்டநேரம் நடந்தது. படையினர் உக்கிரமாக சண்டையிட்டனர்.

தடைமுகாமை இழந்தால் தமது கதி என்னாகும் என்பதை அனைவரும் உணர்ந்திருந்தமையால் ஜீவமரணப்போராகக் கருதியே சண்டையிட்டனர்.

படையினரின் தாக்குதலில் 63 புலிகள் பலியானார்கள். நூறுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ரவை மழை மத்தியில் மீட்பதற்கு, புலிகளின் மீட்புக் குழுவினர் சிறப்பாக செயற்பட்டனர்.

இச் சண்டையில் பலத்த சேதம் ஏற்பட்ட நிலையில், புலிகளின் தடைமுகாம்மீதான தாக்குதலை நிறுத்தி பின்வாங்கினார்கள்.

## மூன்றாம் நாள்

மூன்றாம் நாளான பன்னிரண்டாம் திகதி தமது அணிகளை புனரமைப்பதில் புலிகள் ஈடுபட்டிருந்தனர்.

அதனால் ஆனையிறவு தளத்தை சூழவும் அமைதி நிலவியது.

இடைக்கிடையே போர் விமானங்கள் வானில் தோன்றி குண்டுகளை வீசும் சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.

படையினரும் முகாம்களுக்குள்ளேயே இருந்தனரே தவிர, முன்னேறி புலிகளை நோக்கி தாக்குதல் நடத்த முனையவில்லை.

தற்காப்பு தாக்குதலில் மட்டுமே ஈடுபடுவது, தாக்குதலுக்கு செல்வதில்லை என்று தளப் படைத்தலைமை முடிவு செய்திருந்தது.

மூனறாம் நாள முழுவதும் பெரும உயிர்ப் பலிகள் இன்றி கழிந்தது. இரு நாள் போரில் பலியான தமது உறுப்பினர்களுக்கு புலிகள் வீரவணக்கம் செலுத்தினர்.

நான்காம் நாள் பதின்மூன்றாம் திகதி மறுபடி பாரிய சண்டை ஒன்றுக்கான ஏற்பாட்டில் புலிகள் ஈடுபட்டனர்.

இரவு ஏழு மணிக்கு உப்பள முகாமை தாக்குவதுதான் திட்டம்.

முதல்நாள் சண்டையில் கைப்பற்றப்பட்ட உல்லாச விடுதி முகாமுக்கு அருகில் இருந்ததுதான் உப்பள அலுவலக முகாம்.

இதற்கும் கவசமிடப்பட்ட புல்டோசர் தயாரானது.

பால்ராஜின் கண்காணிப்பில் சூசை தாக்குதலணிக்கு தலைமை ஏற்க, மகளிர் படையணிக்கு ஜனா தலைமை தாங்கினார்.

இரவு ஏழுமணிக்கு புல்டோசர் புறப்பட்டது.

அதன் பின்னே புலியணிகள் விரைந்து முன்னேறின.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது - இராஜதந்திரி

# போர்க் கொள்கையும் திறந்த வெளிச் சிறையும்

மடு மாதா ஆலயத்திற்கு மின்சாரம் வழங்கும் விழா வெகு விமரிசையாக நடைபெற்றுள்ளது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை நேரில் கலந்து கொண்டு உரையாற்றியுமுள்ளார்.

மடுமாதா ஆலயம் சகல இனங்களுக்கும் பொதுவான தேவாலயம் என்றும் அமைச்சர் அவர்கள் பிரகடனம் செய்துள்ளார்கள்.

இந்தப் பிரகடனமானது ஏற்கனவே மடுமாதா ஆலயம் ஒரே ஒரு இனத்துக்கு மட்டும் சொந்தமானதாக இருந்தது போன்றும், படையினர் கைப்பற்றியபின்னரே அந்த இன ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளியிடப்பட்டது போன்றுமே எண்ண வைக்கிறது.

அது மட்டுமன்றி, பாதுகாப்பு அச்சம் இன்றி 50 ஆயிரம் யாத்திரிகர்களுக்கு மேல் உற்சவங்களில் கலந்து கொள்ள தென்னிலங்கையில் இருந்து அழைக்கப்பட்டுள்ளனர். இந்த அழைப்பை படையினரே விடுத்திருக்கின்றனர்.

சிங்கள கத்தோலிக்கர்களுக்காக மடுவை மீட்டுக் கொடுத்திருப்பதுபோன்ற வீரகர்ஜனையாகவே இந்த அழைப்பு தொனிக்கிறது.

எனவே, புலிகள் இருக்கும்போது மடுமாதா ஆலயத்திற்கு தமிழர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்; படையினர் சென்ற பின்னரே சிங்களவர்கள் தரிசிக்கும் உரிமை கிடைத்தது என்னும் பிரசாரம், புலிகளை தமிழர்களது நலன் காப்போராகவும், படையினரை சிங்கள இனத்தின் நலனைக் காப்போராகவுமே இயல்பாக இனம் பிரித்துக் காட்டுகிறது.

படையினர் மடுமாதா ஆலயப்பகுதிக்குள் பிரவேசிக்க முன்னரே, அங்கு இன, மத பேதமின்றி சகலரும் செல்வதற்கு புலிகளால் எவ்வித தடையும் இருக்கவில்லை. ஆனால் வவுனியாவில் படையினர்தான் அனுமதி வழங்குவதில் தயக்கங்களைக் காண்பித்து வந்தனர்.

மடுமாதா ஆலயப் பகுதிக்குள் புலிகள் நடமாடியபோதும், அங்கு போர் சார்ந்த முகாம்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகளே அங்கு தங்கியிருந்தனர்.

ஆனாலும் என்றோ ஒரு நாள் சர்வதேச மத்தியஸ்தம் முன்பாக புலிகளுடன் பேச்சு நடத்தியேயாக வேண்டும். இலங்கைத் தீவில் யுத்தத்தை நிறுத்தி, அரசியல் தீர்வொன்றைக் கண வேண்டுமாயின் தமிழ் பேசும் தரப்பின் அரசியல், இராணுவத் தலைமையாக புலிகளை ஏற்று பேச்சு நடத்தியாக வேண்டியிருக்கும்.

ஆனால் புலிகளைப் பற்றிய தற்போதைய பிரசாரங்கள் அவர்களுடன் பேச்சு நடத்துவதை சிங்கள மக்கள் விரும்பாத நிலைக்கே இட்டுச் செல்கின்றன. புலிகளை ஒழித்துவிட்டே தீர்வு பற்றிப் பேசலாம் என்ற பேரினவாத சக்திகளது நிலைப்பாட்டுக்கே உரமூட்டுகின்றன.

யுத்தத்துக்காக நாட்டின் வளம் அநியாமாக நாசமாகிறது என்று ஜனாதிபதி முதற்கொண்டு அமைச்சர்கள்வரை பேசிவருகின்றனர்.

இவ்வாறான பேச்சுக்களால் யுத்தத்துக்கு முடிவு கட்ட இயலாது. யுத்தத்தால் தேடிய அகதிகளை கட்டாயமாக வெளியேற்றுவது சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கும் முரணானது.

மடுத் தேவாலயத்தில் புகலிடம் தேடியிருந்த தமிழ் அகதிகளை கட்டாயமாக வெளியேற்றிய ஆட்சியாளர்கள், சில நாட்களுக்கு மட்டும் அங்கு தங்கவுள்ள சிங்கள யாத்திரிகர்களுக்காக அவசர அவசரமாக மின்சாரம் வழங்கி கோலாகல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

தாமாக விரும்பி யாழ் செல்ல விண்ணபித்த நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் வவுனியா முகாம்களிலும், திருமலையிலும் காத்துக்கிடக்கின்றன. அவர்களுக்கு கப்பல் வசதி செய்து கொடுக்கக்கூட ஆட்சியாளர்கள் முன்வரவில்லை.

இதுதவிர யாழ் குடாநாட்டுக்கு செல்வதற்காக ஆயிரக்கணக்கான பயணிகள் பல மாதங்களாக திருமலையில் தவம் கிடக்கிறார்கள். அரசு தனது செலவில் கப்பல் போக்குவரத்து செய்து கொடுக்கவில்லை.

ஆனால் மடுவில் இருந்த தமிழ் அகதிகளை சொந்த பகுதிக்கு அனுப்புவதற்கு மட்டும் ஒற்றைக்காலில் நின்றனர். பெருமளவு செலவில் மடுவுக்கு மின்சாரத்தையும் கொண்டு சென்றுள்ளனர்.

யாழ் தமிழ்ப் பயணிகளுக்கு கப்பல் சேவை வழங்குவது பற்றி ஜனாதிபதியுடன் ஈ.பி.டி.பி. உட்பட தமிழ்க் கட்சிகள் பலமுறை பேச்சு நடத்தின. கப்பல் சேவை நடத்த அரசின் கஜானாவில் பணம் இல்லை என்றே காரணம் கூறப்பட்டது. தற்போதுகூட தனியார் கப்பல் சேவை ஒன்றுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு கப்பல் சேவை நடத்துமானால் குறைந்த கட்டணத்தில் பயணிகள் சென்று வரக்கூடியதாக இருந்திருக்கும்.

அவர்கள் அங்கு சில நாட்களே தங்குவதற்கு வசதியாகவும் கோடிருபாய்களை செலவிட்டு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போரில் தாம் கைப்பற்றிய தமிழ்ப் பகுதிகளில் ஒன்றை வைத்து சிங்கள மக்களுக்கு கண்காட்சி நடத்துவது போன்ற ஏற்பாடாகவும் இதனைக் கருத முடிகிறது.

யாழ் குடாநாட்டில் நல்லூர் கந்தசாமி கோவில் உட்பட பிரபலமான தோவலயங்களின் திருவிழாக்களுக்கு ஊரடங்கை தளர்த்தக்கூட தயக்கம் காண்பிக்கப்பட்டது. கீரிமலை போன்ற புனித தலங்களுக்கு பெரும் திரளான பக்தர்கள் செல்வதற்கு படை முகாம்களது பாதுகாப்பை காரணம் காட்டி அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

சிவராத்திரியை முன்னிட்டு ஊரடங்கை தளர்த்துமாறு யாழ் குடாநாட்டில் வேண்டுகோள் விடுக்கப்பட்டும்கூட, அக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அதே யாழ் குடாநாட்டில் வெசாக் தினத்தை முன்னிட்டு ஊரடங்கு தளர்த்தப்பட்டு, படையினரால் இசை நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

எனவே, ஆட்சியாளரும், படையினரும் தாம் கைப்பற்றி நிலைகொண்டுள்ள பகுதிகளில் பேரினம் சார்ந்த நலன்களை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளையே கைக்கொண்டு வருகின்றனர் என்பது மிகத் துல்லியமாக தெரிகிறது.

தற்போது வன்னியில் ரணகோஷ நடவடிக்கைகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் படையினரால் பின்பற்றப்படும் அணுகுமுறைகள் அடிமைகளுக்கும், எஜமானர்களுக்கும் இடையிலான அணுகுமுறைகளை ஒத்ததாகவே அமைந்துள்ளன.

ஏற்கனவே 'மடுமாதா ஆலயத்தை மீட்ட தலைவி' என்று தனிச் சிங்களத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் உருவப்படம் பொறித்த தேர்தல் சுவரொட்டிகள் மாகாணசபை தேர்தலில் வெளியாகியிருந்தன.

இதுபற்றி கத்தோலிக்க மக்கள் பலர் அதிருப்தி தெரிவித்தும்கூட ஜனாதிபதி சந்திரிக்காவோ அல்லது வேறெந்த அமைச்சர்களோ வருத்தம் தெரிவிக்கவும் இல்லை. எனவே ஆட்சியாளரின் பூரண விருப்பத்தோடு செய்த பிரசாரமாகவே அது விளங்குகின்றது.

ஆனால் இப் பிரசாரங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானதாகவே விளங்குகின்றன. அது மட்டுமன்றி ஆட்சியாளர்களும், படையினரும் தம் நலன்களுக்காவும், வீர தீர பிரசாரத்திற்காகவும் பேரினவாதத்துக்கு தீனி போடும் பிரசாரங்களிலேயே ஈடுபட்டுள்ளனர்.

வீரவிதான இயக்கம் போன்றவை நேரடியாக பேரினவாதப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதால் உடனடியாக இனம் கண்டு கொள்ளத்தக்கதாக இருக்கிறது.

ஆனால், சிங்கள மக்களது வாக்குகளை குறிவைத்து ஆட்சியாளர்கள் செய்து வரும் யுத்தம் சார்ந்த பிரசாரங்கள் மிக நாசூக்காக- பேரின பெருமிதங்களையே ஏற்படுத்தி வருகின்றன.

மடு தேவாலயம் பற்றிய பிரசாரத்திலும் சிங்கள மக்களிடம் தங்கள் வீர தீரச் செயலை மார்தட்டிக் கூறி, அவர்களைப் பெருமிதம் கொள்ளச் செய்யும் போக்கே மேலோங்கியுள்ளது.

தம்மால் உருவாக்கப்படும் இத்தகைய பேரினவாதப் பெருமிதங்களை அடுத்த தேர்தல்களில் வாக்குகளாக மாற்றிக் கொள்வதற்கே ஆட்சியாளர்கள் கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

மடுமாதா ஆலயத்திற்கு சிங்கள மக்கள் செல்வதை புலிகள் முன்பு தடுத்து வந்தது போன்றே காண்பிக்க முனைகின்றனர். அது மட்டுமல்லாது மடுமாதா ஆலயம் புலிகளின் பிடியில் இருந்தது போன்றும் சித்தரிக்கத் தலைப்படுகின்றனர்.

இவையாவும் சாதாரண சிங்கள மக்களிடம் "புலிகள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள், புலிகள் சிங்கள மக்களை தேவாலயங்களுக்குகூட அனுமதிக்காதளவுக்கு கொடூரமானவர்கள்!" என்ற கருத்தையே உருவாக்கும்.

இக் கருத்தோட்டமானது புலிகளுக்கு எதிராக மட்டுமன்றி, தமிழ் மக்களுக்கு எதிரானதுமான உணர்வுகளையே சாதாரண சிங்கள மக்களிடம் ஏற்படுத்தும்.

'புலிகள் தமிழ் மக்களுக்காக போராடுகிறார்கள், தமிழர்கள் அனைவரும் புலிகளுக்கு ஆதரவானவர்கள்' என்றே சாதாரண சிங்கள மக்கள் நம்புகின்றனர்.

சாதாரண சிங்கள மக்கள் மட்டுமல்ல, படையினர்கூட அவ்வாறு எண்ணுவதால்தான் புலிகள் தம்மைத் தாக்கும்போது, தமிழ் மக்கள்மீது கோபத்தைக் காண்பித்து வருகின்றனர்.



வனனி ஆணடானகுளம பகுதி மககளுககு இலககஙகள கொடுககபபடடு படைமினரால எடுககபபடட புகைபபடம். (நனறி துலணட)

சிங்கள யாத்திரிகர்கள் மட்டுமன்றி, சிங்களப் பத்திரிகையாளர்கூட மடுப்பகுதிக்குச் சென்று வந்தனர். தென்னிலங்கை சிங்களப் பத்திரிகையாளர்கள் இருவர் மடுவுக்கு சென்று, அங்கிருந்து புலிகளிடம் தொடர்பு கொண்டு தமிழ்ச் செல்வனின் பேட்டியைக்கூடப் பெற்று வந்திருந்தனர்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனா உட்பட பல பிரமுகர்கள் மடுப்பகுதிக்கு சென்று வந்தனர்.

மடு ஆலயப்பகுதியை ஆயுத பாவனையற்ற புனிதப் பகுதியாக ஆலய நிர்வாகம் பேணிவந்தது. விடுதலைப் புலிகளும் இதற்கு பூரண ஒத்துழைப்பை நல்கியே வந்துள்ளனர்.

கடந்த காலத்தில் புலிகளது குண்டுத் தாக்குதல்களால் சிங்கள மக்கள் பலர் பலியாகியுள்ளனர். குடியேற்றவாசிகள்மீதும் புலிகள் தாக்குதல்கள் நடத்தியிருக்கின்றனர். ஆனாலும் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் புலிகளை விடுதலைப் போராளிகள் என்றும், வேலுப்பிள்ளை பிரபாகரனை நெல்சன் மண்டேலா, யாசீர் அரபாத் போன்றோருக்கு இணையான தலைவராகவுமே சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் புகழாரம் சூட்டியிருந்தார்.

ஆனால் மடுமாத தேவாலயத்திற்கு சிங்கள மக்கள் செல்வதையோ, வழிபாடு செய்வதையோ புலிகள் தடுத்ததும் இல்லை. அப் பகுதிகளில் சிங்கள யாத்திரிகர்களை அச்சுறுத்தியதும் இல்லை. அவ்வாறு இருந்தும் இவ் விடயத்தில் புலிகளை சிங்கள மக்களது வழிபாட்டு உரிமையைத் தடுத்தவர்களாக சித்தரிக்க சந்திரிக்கா அரசாங்கம் முனைந்துள்ளது.

இந்த முனைப்பானது புலிகளைப் பலவீனப்படுத்தப்போவதில்லை. இன உறவுகளில் மேலும் குரோதங்களை உருவாக்குவதற்கும், தமிழ் மக்களது போராட்டம் தொடர்பாக தவறான விளக்கங்களை சிங்கள மக்களிடம் உருவாக்கவுமே தூண்டுதலாக அமையும்.

விடுதலைப் புலிகளோடு பேசுவதற்கு தாம் தயாராக இருப்பதாக ஆட்சியாளர்கள் கூறுவதற்கு தவறுவதில்லை. இக் கூற்று வெளியுலகைத் திருப்தி செய்யும் ராஜதந்திர கூற்றாகவே விளங்குகிறது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி, நியாயமான தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை ஏற்படுத்துவது மூலமே, பேச்சுக்கு எதிரான சக்திகளை ஓரங்கட்ட கூடியதாக இருக்கும்.

ஐ.தே.கட்சி ஆட்சியின் யுத்த முனைப்புக்கள் தோல்வி கண்டுவிட்டன என்பதை சிங்கள மக்கள் நன்கு உணர்ந்ததால்தான், கடந்த பாராளுமன்றத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் யுத்தத்துக்கு எதிரான பிரசாரத்திற்கு ஆதரவு கிடைத்தது.

ஆனால் இன்று ஆட்சியாளர்கள் செய்து வரும் பிரசாரம் ஒவ்வொன்றும் யுத்தம் நியாயமானது என்றும், சிங்கள மக்களுக்கும் பயனுடையது என்றும் நம்பவைக்கும் விதமாகவே அமைந்து வருகிறது.

எனவே, இன்றைய ஆட்சியாளர்கள் தமது போர்க் கொள்கையையும், நிலப்பிடிப்பையும் சிங்கள மக்களின் நலன்களைக் காக்கும் கொள்கையாகவும் இனம் காட்டக் கிடைத்துள்ள சந்தர்ப்பமாகவே மடுமாதா ஆலயத் திருவிழாவை பயன்படுத்துகின்றனர்.

ஏற்கனவே பல வருடங்களாக 20 ஆயிரம் தமிழ் அகதிகள் மடு தேவாலயப் பகுதிகளில் போதிய அடிப்படை வசதிகள்கூட இன்றி தங்கியிருந்தனர்.

அரசு நினைத்திருந்தால் அப்போதும் மின்சாரம் வழங்க முடிந்திருக்கும்; அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்திருக்கலாம்.

மடுவைக் கைப்பற்றிய பின்னர் தேவாலயப் பகுதியில் இருந்த அகதிகளை அவர்களது விருப்பத்திற்கு மாறாகவே ஆட்சியாளர் வெளியேற்றியுள்ளனர். இந்த நடவடிக்கையும் ஆட்சியாளரின் போர்க் கொள்கையின் சுயருபத்தை இனம் காட்டியுள்ளது.

தாம் எங்கு வாழ வேண்டும்? என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். புகலிடம்

இதற்கு பணம் இல்லை என்று கூறும் அதே ஆட்சியாளர்கள்தான் மடுவுக்குச் செல்லும் சிங்களப் பயணிகளை மகிழ்விக்க 12.6 மில்லியன் ரூபா செலவிட்டு மின்சாரம் வழங்கியுள்ளனர்.

சந்திரிக்கா அரசாங்கத்தால் வட பகுதியில் பல்வேறு பெயர்களில்- சூரியக்கதிர் முதற்கொண்டு ரணகோஷ 04 வரை இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு ஆட்சியாளர்கள் முன்வரவில்லை.

பாஸ் முறைகள் மூலம் வன்னிப் பகுதி மக்களின் போக்குவரத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அடிக்கடி போக்குவரத்து பாதை முடப்படுகிறது. தகுந்த பஸ் வசதிகள்கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு கப்பல் சேவை வழங்க அரசால் முடியவில்லை. விமானப் படையினரால் நடத்தப்பட்டு வரும் விமான சேவையிலும் பயணிகளுக்கு அடிப்படை வசதிகூட இன்றி, ஆடு மாடுகள் போன்றே பயணம் செய்து வருகின்றனர்.

வன்னியில் தொடர் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு இடமின்றி மர நிழல்களிலும், வீதியோரங்களிலும், இடிந்த கட்டடங்களிலும் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

தங்குமிடமற்ற அந்த மக்களுக்கு தற்காலிக குடியிருப்புக்கள் அமைப்பதற்கு கூரைத்தகடுகள் கொண்டு செல்லக்கூட தொண்டர் நிறுவனங்களுக்கும் படையினர் அனுமதியளிக்காது இழுத்தடிக்கின்றனர்.

இதேவேளையில், தமிழ் பிரதேசத்தில் தாம் கைப்பற்றிய மடு தேவாலயத்திற்கு செல்லும் தென்னிலங்கை யாத்திரிகர்களுக்கும்,

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு இலக்கங்கள் கொடுக்கப்பட்டு புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன.

வழக்கமாகத் திருடர்கள் போன்ற சமூக விரோதிகளைப் பிடிக்கும்போதுதான் இவ்வாறு இலக்கங்கள் கொடுத்து புகைப்படம் எடுப்பது வழக்கமாகும். சிறைகளிலும் இவ்வாறு இலக்கங்கள் கொடுக்கப்படுவதுண்டு. மாடுகளுக்கும் இலக்கங்கள் குத்தப்படுவதுண்டு.

யாழ் குடாநாட்டில் குடும்ப உறுப்பினர்களது புகைப்படங்களை தொங்கவிடுமாறு கூறப்பட்டது. பத்து வயது சிறுவர்களுக்கும் அடையாள அட்டை பெறுமாறு அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட விசேஷ அடையாள அட்டைகள் இனிமேல் படை அதிகாரியால் வழங்கப்படும் என்று கடந்த வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் படை அதிகாரிகளை சார்ந்து இருக்க வேண்டியதாகவே புதிய நடைமுறைகள் அமைந்து வருகின்றன.

கைப்பற்றப்படும் பகுதி எங்கும் இராணுவ கண்காணிப்பின் கீழ் தமிழ் மக்களை வைத்திருப்பதே இன்றைய போர்க் கொள்கையின் பிரதான அம்சமாக அமைந்திருக்கிறது.

எனவே, தமிழ்ப் பிரதேசங்கள்- திறந்த வெளி சிறைச்சாலையாகவே மாற்றப்பட்டுள்ளன. அடிமைத்தனமான வாழ்க்கைக்கு தமிழ் மக்களைப் பக்குவப்படுத்தும் பயிற்சிகள்தான் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

படையினரைப் பொறுத்தவரை இது அவர்களது கடமை. பல ஆயிரம் படையினரை பலி கொடுத்து அவர்கள் போரில் ஈடுபடுவது தமிழ் மக்களைத் தட்டி எழுப்புவதற்காகவல்ல. எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு பணிவான ஒரு சமுகத்தை உருவாக்குவதற்கே அவர்கள் முனைப்புக் காட்டுவார்கள்.

செம்மணிப் புதைகுழிகளும், தோண்டப்படாது இருக்கும் ஏனைய புதைகுழிகளும் அந்த முனைப்புக்கு உட்பட்டவையே.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

'யாழ் செம்மணியில் எலிகளின் உடல்தான் கிடக்கின்றன' என்று பெரிதாகச் செய்தி போட்டது டெயிலி நியூஸ்.

இப்போது இரு எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டு விட்டதால், புலிகளது காலத்தில் கொல்லப்பட்டவர்கள் பற்றியும் ஆராய வேண்டும் என்று 25.06.99 அன்று செய்தி போட்டுள்ளது.

பெரிய கோட்டிற்கு அருகே அதைவிடப் பெரிதாக இன்னொரு கோடு கீறிவிட்டால் முதல் கோடு சிறிதாகிவிடும் அல்லவா?

இதே அரச பத்திரிகை தெற்கில் புதைகுழிகள் தோண்டப்பட்டால் ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் கொலையுகம் என்று பந்தி பந்தியாக எழுதியிருக்கும்.

சூரியகந்தை புதைகுழி தோண்டப்பட்டபோது, சிறிமாவோ அம்மையார் காலத்தில் ஜே.வி.பி. இளைஞர்கள் கொல்லப்பட்டது பற்றி இதே பத்திரிகை நினைவூட்டியதா? இல்லையே!

செம்மணிப் புதைகுழி விவகாரத்தை சிறிய விடயமாகக் காண்பிக்கும் சதித்தனம்தான், புலிகள் காலத்திய தடுப்பு முகாம்கள் பற்றி இந்த நேரத்தில் நினைவூட்டுவதாகும்.

இந்தச் சதிக்கு சுரேஸ் பிரேமச்சந்திரன் அபாரமாக ஒத்துழைத்திருக்கிறார்.

புலிகளால் மூவாயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று சுரேஸ் டெயிலி நியூசுக்கு தகவல் கொடுத்துள்ளார்.

புலிகள் தடுப்பு முகாம் வைத்திருந்தனர் என்பது உண்மைதான். புலிகளது ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டிக்கக்கூடாது என்றும் கூற வரவில்லை.

ஆனால், எந்த நேரத்தில், எதனை- ஏன் கூறுகிறார்கள்? என்பதுதான் முக்கியம்.

செம்மணிப் புதை குழிகளைத் தோண்டாது அரசு இழுத்தடித்தது. மிகப் பாரிய அழுத்தங்களால் ஒருவிதமாக அரை குறையாக தோண்டியுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் அறுநூறுபேர் காணாமல் போகவில்லை என்று அரசு கூறியதும் பொய் என்பதை செம்மணிப் புதைகுழி விவகாரம் அம்பலமாக்கி விட்டது.

அப்படியிருந்தும் மேலும்பல புதைகுழிகள் தோண்டப்பட வேண்டியுள்ளன. ராஜபக்ஷ பல திடுக்கிடும் தகவல்களைக் கூறியுள்ளார். கிருஷாந்தி வழக்கின் ஏனைய குற்றவாளிகளும் பல தகவல்களை கூற முன்வந்துள்ளனர். அரசு இவற்றை வேண்டுமென்றே அலட்சியம் செய்து வருகிறது.

### செம்மணியை மூடி மறைக்க தகவல் கொடுத்தவர்

இந்த அலட்சியத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து, ஏனைய புதைகுழிகளைத் தோண்டும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும். இங்கு வந்துள்ள மனித உரிமை பிரதிநிதிகளிடம் விடாது வாதிட்டு முழு உண்மைகளும் அம்பலமாகும் விதமாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கச் செய்ய வேண்டும்.

இதில் ஒன்றைக்கூட செய்யாத சுரேஸ், செம்மணி விவகாரத்தை திசை திருப்பும் அரச பத்திரிகைக்கு தன்னாலான தகவல் கொடுத்திருக்கிறார்.

இதே சுரேஸ்தான் சில மாதத்திற்கு முன்னர் விடுத்த அறிக்கை ஒன்றில், 'செம்மணியைத் தோண்ட புலிகள் ஒத்துழைக்க வேண்டும்' என்று கோரியிருந்தார்.

அதே சுரேஸ்தான் செம்மணியை திசை திருப்ப புலிகளை இழுத்து குழப்பியிருக்கிறார்.

டெயிலி நியூஸில் அப்படி ஒரு தகவலை கொடுத்தால் ஆட்சியாளர்கள் வரதராஜப் பெருமாளைவிட சுரேஸ் கெட்டிக்காரன் என்று நினைப்பார்கள் எனக் கருதிவிட்டாரோ?!

செம்மணி விவகாரத்தை உலகமே திரும்பிப் பார்க்கும் பொறுத்த நேரத்தில் அதனை மறைக்க உதவிக்கொண்டு, புலிகள் தமிழ்க் கட்சிகளை மதிக்க வேண்டும் என்று கூறினால் நடக்கிற காரியமா?

சகல படுகொலைகளையும், மனித உரிமை மீறல்களையும் கண்டிக்கிறோம் என்று சுரேஸ் போன்றோர் கூறலாம்.

அப்படியானால் துரையப்பா அரங்கில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டபோது சுரேஸ் எங்கே போனார்?

இந்தியப் படை காலப் படுகொலைகள் பற்றி கண்டித்து ஒரு அறிக்கை விட்டிருக்கலாம்தானே?

அவ்வளவு ஏன்? செம்மணி விவகாரத்தை மறைக்க புலிகளை இழுத்தவர், இந்தியப் படை காலத்திய படுகொலைகளையும் சேர்த்து குறிப்பிட்டிருக்கலாம்தானே!

***

யாழ் குடாநாட்டில் விசேஷ அடையாள அட்டைகளை கிராம சேவையாளர்களே இதுவரை வழங்கி வந்தனர்.

கடந்தவாரம் முதல் படை அதிகாரியே அதனை வழங்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் 'சிவில் நிர்வாகம்' இருப்பதாக தமிழ்க் கட்சிகள் சில கூறிவருகின்றன. அதனைக் குழப்பக்கூடாது என்றும் கூறுகின்றன.

சிவில் நிர்வாக அதிகாரிகள் படையினரின் உத்தரவுப்படி நடக்கும் நிர்வாகம்தான் யாழில் இருக்கிறது. சிவில் நிர்வாகம் எங்கே இருக்கிறது?

அது ஒருபுறமிருக்க, சிவில் அதிகாரிகள் செய்த வேலைகளைக்கூட படிப்படியாக சீருடை அணிந்த அதிகாரிகள் பொறுப்பேற்பது பற்றி தமிழ்க் கட்சிகள் என்ன கூறப்போகின்றன?



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 68

**கடந்தவாரம்**

**உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றுவதில் அமீன் முழு முயற்சி செய்தான். அதன் மூலம் முஸ்லிம் நாடுகளது நிதி உதவியைப் பெறுவதே அமீனின் திட்டம். அமீனுக்கு தன் பாதுகாப்பு பற்றிய அச்சமும் ஏற்படுகிறது. தனது ஐந்து மனைவியரையும் காதலிகளையும் கண்காணிக்க ஏற்பாடு செய்கிறான். ஐந்தாவது மனைவிமீது சந்தேகம் ஏற்படுகிறது....**

**இனி...**

# இடி அமீன்

**தருவது ரசிகன்**

அமீனின் ஐந்து மனைவியரையும் காதலிகளையும் மிக நம்பகமான உளவாளிகள் கண்காணித்தனர். நம்பகமானவர்களாக இருந்தாலும் அவர்கள் புத்திசாலிகளாக இருக்கவில்லை.

அமீனின் ஐந்தாவது மனைவி வீட்டிற்கு அவளது நெருங்கிய உறவினன் ஒருவன் அடிக்கடி வந்து போனான்.

ஐந்தாவது மனைவி வீட்டை கண்காணிக்க நான்கு பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். பகலில் இரண்டுபேர். இரவில் இரண்டுபேர் என்று முறை வகுத்துக் கண்காணித்தனர்.

சொல்லி வைத்தாற்போல நான்கு பேருக்குமே சந்தேகம் வந்திருந்தது. தங்கள் சந்தேகத்தை தமது பொறுப்பதிகாரியின் காதுக்குக் கொண்டு போனார்கள்.

ஐந்தாவது மனைவியின் நெருங்கிய உறவினன் ஒரு கார் வியாபாரி. அதனால் அவளைச் சந்திக்க வரும்போது அடிக்கடி வெவ்வேறு கார்களில் வருவான்.

தன்னையோ தான் பயன்படுத்தும் வாகனங்களையோ குறிப்பாக அடையாளம் காணக்கூடாது என்பதால்தான் அடிக்கடி கார்களை மாற்றுகிறான் என்று உளவாளிகள் முடிவு செய்திருந்தனர்.

கொஞ்சம் ஆழமாக விசாரணை செய்திருந்தால் அவர்களுக்கு உண்மை கிடைத்திருக்கும். அதற்குப் பொறுமை இல்லை; அவசியமும் இல்லை.

உயிர்களைப் பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. சந்தேகப்பட ஒரு காரணம் இருந்தால் போதும், ஆளைத் தீர்த்து விடலாம்.

பொறுப்பதிகாரியும் நிதானமாக-தீர ஆராயும் புத்தி இல்லாதவன். தனது உளவாளிகள் கொண்டுவந்த தகவலை அமீனிடம் சொன்னால் பெரும் பாராட்டுக் கிடைக்கும் என்று மகிழ்ந்தான்.

**"என்னப்பா செய்கிறீர்கள்? என் மனைவியர் வீடுகள், காதலிகள் வீடுகள் எல்லாவற்றையும் கண்காணிக்கிறீர்கள் அல்லவா?"** என்று சில வாரங்களுக்கு முன்னர் ஒரு நாள் கேட்டான் அமீன்.

"ஆம்! தங்கள் உத்தரவுப்படியே சகலதும் நடந்து வருகின்றன."

**"அப்படிக் கண்காணித்தும் ஒரு சுவாரசியமான சங்கதிகூட தட்டுப் படவில்லையா? எல்லோரும் நல்லவர்களாக இருக்க முடியாதே!"** என்று ஒரு வஞ்சகச் சிரிப்பை உதிர்த்தான் அமீன்.

பொறுப்பதிகாரிக்கு அந்தச் சிரிப்பின் ஞாபகம்தான் வந்தது. தனக்கு இன்று சிறப்புக் கவனிப்பு இருக்கும் என்று நம்பினான்.



தகவலோடு அமீனிடம் ஓடினான். அப்போதுதான் தவளைப் பொரியலை மிளகுத் தூளில் தொட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் அமீன்.

அமீனுக்கு தினமும் குறைந்தது ஆறு முறை சாப்பிட்டாக வேண்டும். இல்லையென்றால் பசி அவன் உயிரை வாங்கி விடும்.

பொறுப்பதிகாரி தயங்கித் தயங்கி தகவலைக் கூறினான். தவளையொன்றை கத்தியால் இரண்டு துண்டாக வெட்டி, அவற்றை முள்ளுக்கரண்டியால் குத்தி எடுத்து வாய்க்குள் அனுப்பிக் கொண்டிருந்தான்.

தான் கூறிய தகவலுக்கு எந்தப் பிரதிபலிப்பும் இல்லாமல், அமீன் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைப் பார்க்க, பொறுப்பதிகாரிக்கு பயம் வந்துவிட்டது.

'மனைவிமீது புகார் சொன்னது பிடிக்கவில்லையோ; இன்று என் கதி அதோகதிதானா?' என்று உள்ளூர நடுக்கம் பிடித்துக் கொண்டது.

பொறுப்பதிகாரியை அமருமாறும் கூறாது, நிதானமாக ருசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் சாப்பிடுவதைப் பார்க்க பொறுப்பதிகாரிக்கே ஒரு மாதிரி குமட்டலாக வந்தது.

அமீன் சாப்பாட்டில் கவனமாக இருக்கிறான் என்று பொறுப்பதிகாரி நினைத்துக் கொண்டிருந்தாலும், அமீனின் கவனம் உண்மையில் சாப்பாட்டின்மீது இருக்கவில்லை.

பொறுப்பதிகாரி கூறிய தகவலை வைத்து மனதுக்குள்ளே ஒரு ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தான்.

எந்த விடயத்தையும் எடுத்த எடுப்பிலேயே சந்தேகத்தோடு நோக்கினால், உண்மையை அறிவது கடினம்.

'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.' அமீனின் மனதில் உயிர்ப் பயம் அதிகமாகியிருந்தது.

தான் செய்யும் காரியங்கள் நியாயமற்றவை என்பதை அவன் நன்கறிவான்.

அதனால் தன்மீது பற்றுள்ளதுபோல நடிப்பவர்களுக்கு உண்மையான பற்றுக் கிடையாது; தன் அதிகாரத்திற்கும், பணத்திற்காகவுமே நடிக்கிறார்கள் என்றும் நினைத்திருந்தான்.

அதனால் தனது ஐந்தாவது மனைவி பற்றி புகார் வந்ததுமே அப்படியே நம்பி விட்டான்.

சமீபகாலமாக அவள் தன்னை உதாசீனப்படுத்தியது போல இப்போது நினைக்கையில் தோன்றியது.

அகங்காரமாகவே அவள் நடந்து கொள்வதாக அவன் மனதுக்குள் பல காட்சிகள் தோன்றி மறைந்தன.

இறுதியாக அமீன் ஒரு முடிவுக்கு வந்தபோது, தவளைப் பொரியல் மீதமில்லாது அவன் வயிற்றுக்குள் போயிருந்தது.

**"உனக்கு எனது பாராட்டுக்கள். மீதியை நான் கவனித்துக் கொள்கிறேன். மேலதிக தகவல் இருந்தால் தொடர்பு கொள்!"** என்று பொறுப்பதிகாரியை அனுப்பி வைத்தான்.

அன்றே தனது பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சிலரை ஐந்தாவது மனைவியின் வீட்டருகே நிறுத்தி வைத்தான் அமீன்.

அவளது உறவினன் வந்தால் கைது செய்து கொண்டுவருமாறு கட்டளை போட்டிருந்தான்.

வழக்கம்போல தன் காரில் அவள் வீட்டுக்கு சென்றான் அந்த உறவினன். அவன் காரை விட்டு இறங்குவதற்கு முன்னரே குண்டுக் கட்டாக தூக்கிச் செல்லப்பட்டான். ஜீப் ஒன்றுக்குள் வீசியெறிப்பட்டான்.

அரைமணி நேரத்திற்குள் அமீனின் முன்பாக நிறுத்தப்பட்டான்.

**"என் மனைவி உன் காதலியா?"** என்று கேட்டு பயங்கரமாகச் சிரித்த அமீன் தன் காலால் அவனை வயிற்றில் உதைத்தான். அவன் வலியால் குனிந்தபோது முதுகில் தன் முழங்கையால் இடித்தான். அவன் அப்படியே தரையில் குப்புறவிழுந்தான்.

பின்னர் அவனையும் ஜீப் ஒன்றில் ஏற்றிக் கொண்டு, ஐந்து மெய்க் காப்பாளர்களுடன் ஐந்தாவது மனைவியின் வீட்டுக்குச் சென்றான்.

அவள் அந்த நேரத்தில் அமீனை எதிர்பார்க்கவில்லை. அந்த வியப்பு அடங்குவதற்குள் அதிர்ச்சி முந்திக் கொண்டது.

அவளது உறவினன் இரத்தம் சொட்டச் சொட்ட அவள் முன்பாக உருட்டித் தள்ளப் பட்டான்.

மெய்காப்பாளர்களை தன் கண்ணசைப்பு மூலம் அங்கிருந்து நகருமாறு கட்டளையிட்ட அமீன், அவர்கள் வெளியே சென்றதும், கதவுகளை காலால் அடித்து மூடினான்.

இப்போது அமீனும், மனைவியும், உறவினனும் மட்டுமே அங்கு இருந்தனர்.

அமீனின் மனைவி அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கும், என்ன ஏது? என்று அமீனிடம் விளக்கம் கேட்பதற்கும் சந்தர்ப்பமே இருக்கவில்லை.

அவள் கன்னத்தில் அமீனின் கை ஓங்கி இறங்கியது. அவளுக்கு பொறி கலங்கியது.

**"துரோகமா செய்கிறாய்? இந்த எமனுக்கே எமனா நீ?"** என்றபடியே அவளது வயிற்றில் பலமாக உதைத்தான்.

அவளால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. அப்படியே மல்லாந்து விழுந்தாள்.

அவளது உறவினன் பயந்து போய் மூலையில் மடங்கி அமர்ந்து இதனையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். பயத்தில் அவனுக்கு சிறுநீர் கழிந்துவிட்டது.

அவனிடம் திரும்பிய அமீன் **"எழுந்து நில்லடா நாயே!"** என்று உறுமினான். அமீன் சொல்லி முடிக்க முன்பாகவே அவன் எழுந்து நிற்க, **"எல்லாவற்றையும் கழற்றிப் போடடா?"** என்றான்.

அந்த உத்தரவையும் அவன் துரிதகதியில் கைகள் நடுங்க நடுங்க செய்து முடித்துவிட்டு நிர்வாணமாக நின்றான்.

அவனை உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை உற்று நோக்கினான் அமீன். பின்னர் இடுப்புக்கு கீழே முறைத்தான்.

வலியால் முனகிக்கொண்டு மல்லாந்து கிடந்த மனைவியின் அருகில் சென்றவன், குனிந்து அவளது தலை முடியைப் பற்றித் தூக்கினான்.

**"அவனிடம் அப்படி எதையடி பார்த்தாய்? என்னிடம் இல்லாதது எதைக் கண்டாய்?.... பார்த்தாயா?"** என்று கெட்ட வார்த்தை யால் திட்டினான்.

அப்போதுதான் அவளுக்கு அமீன் தன்னைச் சந்தேகப்படுகிறான் என்பது புரிந்தது.

அவள் விளக்கம் கூற முற்பட்டாள். அதற்குள் அவளது கன்னம் இரண்டிலும் மாறி மாறி அடித்த அமீன், தன் இடுப்பிலிருந்த கத்தியை எடுத்தான். விசையை அழுத்தியதும் விரியக்கூடிய கூரிய கத்தி அது.

கத்தியை அவள் கையில் கொடுத்தான். அவள் ஏன் என்று தெரியாமல் விழித்தாள்.

அவளது உறவினரின் இடுப்புக்கு கீழே தன் சுட்டு விரலை நீட்டிய அமீன் அவளிடம் கூறினான்: "வெட்டிப் போடு!"

அப்படியொரு கொடூரமான உத்தரவு வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. "ஐயோ! அவர் நல்லவர். தப்பான உறவு எதுவும் எங்களுக்குள் கிடையாது அவர்..." மேற்கொண்டு அவள் பேச முடியாதவாறு அமீனின் கை அவள் கழுத்தில் அழுத்தியது.

**"நல்லவன் என்று தெரிகிறது. வல்லவனா என்றும் உபயோகித்துப் பார்த்திருப்பாய்தானே! பேசாதே! கொன்று விடுவேன். சொன்னதைச் செய்!"**

அவளால் செய்ய முடியவில்லை. அவனது ஆணுறுப்பை வெட்டி எறிய அவள் திட்டவட்டமாக மறுத்து விட்டாள்.

அதனால் அவளுக்கு அவன்மீது அனுதாபம் இருப்பதாக அமீன் தன் கருத்தை உறுதியாக்கிக் கொண்டானே தவிர, அப்படி ஒரு காரியத்தை அவளால் எப்படி செய்ய முடியும் என்று நினைத்துப் பார்க்கவில்லை.

அவளது உறவினன் பக்கம் திரும்பினான்; **"உனக்கு இவள் வேண்டுமா?"** என்று கேட்டான்.

"வேண்டாம்!" என்றான் வெட வெடத்தபடி.

**"இவள்மீது உனக்கு பிடிப்பு இருக்கிறதா? இல்லையா?"**

"இல்லை!"

**"இவள் முக்கியமா? உன் உயிர் முக்கியமா?"**

"என்.. என் உயிர்தான்!"

**"உண்மையாகத்தான் சொல்கிறாயா?"**

"ஆ..ஆம்..!"

**"என்னிடம் பொய் சொன்னால் என்னாகும் தெரியுமில்லையா?"**

"தெரியும்! கொன்றுவிடுவீர்கள்!"

**"கொன்றுவிட மாட்டேனடா, உயிரோடு தின்று விடுவேன்!"** என்று கூறிவிட்டு அவனது மரண பயத்தை இரசித்தான்.

**"நான் சொலகிற படி கேட்பாயா?"** என்று கேட்க. அவன் "ஆம்!" என்றான். உடனே அவளிடம் கொடுத்த கத்தியை பறித்து அவன் கையில் திணித்த அமீன் முகத்தில் குரூரத்தின் சாயை தெரிந்தது.

அவனது தடித்த உதடுகளில் இருந்து கட்டளை உதிர்ந்தது; **"இந்தா! இந்தக் கத்தியால் இவளைக் குத்திக் கொன்றுவிடு!"** அமீனின் கட்டளையில் அவன் திகைத்துப் போனாலும், அவன் ஒரு கோழை. அதனால் தன் உயிரைக் காக்க அவளது உயிரை எடுப்பது பற்றி தயக்கம் காண்பித்தானில்லை.

கத்தியை நடுங்கும் கரத்தால் பெற்றுக் கொண்டு அவளை நெருங்கினான்.

அவளது கண்கள் கெஞ்சின. அவளது உதடுகள் துடித்தன. அவள் உயிர்ப்பிச்சைக்கு ஏங்கினாள்.

அவன் சற்றும் இரக்கமின்றி, அவளது வயிற்றில் கத்தியைச் செருகினான். இரத்தம் பீறிட்டு அவன் உடம்பையும் நனைத்தது.

குத்திவிட்டு அவன் அமீனை திரும்பிப் பார்த்தபோது, அமீனின் கையில் இன்னொரு கத்தி பளபளத்துக் கொண்டிருந்தது.

**(இடி தொடரும்)**

# இந்தியா-பாக் மோதல்

## அமெரிக்காவின் வேசம்

இந்திய-பாகிஸ்தான் மோதலில் அமெரிக்காவின் நிலைப்பாடு பலருக்கு ஆச்சரியம் அளிக்கக்கூடும்.



இந்திய எல்லையில் ஊடுருவிய தீவிரவாதிகளை வெளியேறவேண்டும் என்று அமெரிக்கா அடிக்கடி கூறுவதை இந்தியப் பத்திரிகைகள் சிலகூட சந்தோசமாக வெளியிட்டு வருகின்றன.

ஆனால் அமெரிக்காவின் நோக்கமே வேறு. தென்னாசியாவில் தன்னை ஒரு பக்கச் சார்பற்ற மத்தியஸ்தராக, சமாதான விரும்பியாக காண்பிக்க முற்படுகிறது.

இதன் மூலம் தென்னாசியாவில் தனது மேலாதிக்க எண்ணத்துக்கு சமாதான சாயம் பூசப்பார்க்கிறது.

ஏதோ, நாடுகளுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தவே இங்கும் தன் மூக்கை நீட்டுவதாக பாச்சா காட்டுகிறது.

இந்தியாவையும், இந்திய மக்களையும் தனக்கு எதிரான போக்கில் இருந்தும், விழிப்பில் இருந்தும் திசை திருப்பவும் இதனை ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்கிறது.

இந்தியா அணுக்குண்டு தயாரிப்பதை நிறுத்த தலைகீழாய் நின்றது அமெரிக்கா. பொருளாதாரத் தடை என்று மிரட்டியது. எதுவும் பலிக்கவில்லை. இந்திய மக்களுக்கு அமெரிக்காமீது அதிருப்தி ஏற்பட்டதுதான் கண்ட பலன். அப்போது ஏற்பட்ட அதிருப்தியை தணிக்கத்தான் தற்போது நியாயம் பேசும் நீதிமான் வேசம் போட்டுள்ளது.

இந்திய எல்லைக்குள் ஊடுருவல் நடைபெற்றது ஒன்றும் இரகசியமல்ல. எனவே அதனை அமெரிக்கா கண்டித்திருப்பது அதிசயமல்ல. அவ்வாறும் செய்யாதுவிட்டால் தென்னாசியாவில் இந்தியாவை ஓரம் கட்டுவதுதான் அமெரிக்காவின் திட்டம் என்பது அம்பலமாகிவிடுமே!

உண்மையில் தென்னாசியாவில் இந்தியா அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு பச்சைக் கொடி காட்டினால், பாகிஸ்தானைக் கைவிடக்கூட அமெரிக்கா தயாராய் இருக்கிறது.

இந்தியா அதற்கு உடன்படப் போவதில்லை. தென்னாசியாவில் தானே வல்லரசாக இருப்பதுதான் இந்தியாவின் ஆசை.

தற்போது இந்தியாவை பகைக்காது, நேரடியாக எதிர்க்காது தென்னாசியாவுக்குள் தனது காலை ஊன்றுவதுதான் அமெரிக்காவின் கொள்கை. அதனால்தான் இந்தியாவை தாஜா பண்ணப் பார்க்கிறார்கள்.

அதேசமயம் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று இரு நாடுகளுக்கும் விஜயம்செய்தது. முதலில் சென்றது பாகிஸ்தானுக்குத்தான்!

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் தந்திரமாகவே இந்த விஜயம் நடந்துள்ளது.

# தூக்கக் கொலை

தூக்கத்தில் நடக்கும் வியாதி உள்ளவர்களைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அமெரிக்காவில் தூக்கத்தில் நடக்கும் ஒருவர் செய்த விபரீத செயலைப் பாருங்கள்.

அவரது பெயர் ஸ்கொட் பால்டர். 43 வயது. இந்த மனிதருக்கு தூக்கத்தில் நடக்கும் வியாதி இருந்தது.

1997ம் ஆண்டில் ஒருநாள் தூக்கத்தில் நடந்தபோது, தன் மனைவியை பார்த்திருக்கிறார். மனைவி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்கிறார். இவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. கத்தியை எடுத்து 44 முறை மனைவியை குத்திப் பொத்தலாக்கி விட்டார்.

பின்னர் பொலிசார் விசாரித்தபோது தனது செயல் எதுவும் நினைவில் இல்லை என்றார். ஆனால் அவர் அணிந்திருந்த ஆடைகளில் காணப்பட்ட இரத்தக் கறைகளை வைத்து பொலிசார் கைது செய்தனர்.

இவ்வழக்கு இரண்டு ஆண்டுகளாக நடந்து வருகிறது. விரைவில் தீர்ப்பு வரவுள்ளது. தூக்கத்தில் நடப்பவர்கள் உங்கள் வீட்டில் இருந்தால் ஜாக்கிரதை.

# அங்கு கண்ட காட்சி

கொசோவோவில் செர்பிய படைகள் செய்த அட்டூழியங்கள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

17 வயது இளம் பெண் ஒருவர் தன் கண்ணால் கண்ட அனுபவங்களை கூறியுள்ளார். செர்பியப்படைகளிடம் தப்பி அவர் அல்பேனியாவுக்கு தப்பிச் செல்லும்போது கண்ட காட்சிகளையே கூறியுள்ளார்.

"நான் சென்ற தெருவின் அருகில் சோதனைச் சாவடி இருந்தது. அதில் செர்பிய வீரர்கள் இருந்தனர்.

அப்போது வேன் ஒன்றில் 30 கொசோவோ இனப் பெண்கள் வந்தனர். அவர்களை சோதனையிடுவதற்காக இறங்குமாறு அவர்கள் கட்டளையிட்டனர்.

அவ்வாறு இறங்கிய பெண்களின் ஆடைகளை செர்பிய இராணுவத்தினர் தாறுமாறாக கிழித்தனர். பின்னர் அப் பெண்களை அருகில் உள்ள வயல் வெளிகளுக்கு இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவு புரிந்தனர்.

அந்தப் பெண்கள் முனகுவதும் அலறுவதும் கேட்டது. என்னால் அவர்களது



அழுகைக் குரல்களை மறக்கவே முடியாது. இந்தக் கொடுமையை பொறுக்கவே முடியாது." என்று அப் பெண் பேட்டியளித்துள்ளார்.

# ஆய்வின் முடிவு?

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் சமீபத்தில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. அந்த ஆய்வின் முடிவு பின்வரும் தகவலை வெளியிட்டுள்ளது.

வேலைக்கு செல்லும் ஆண்கள், பெண்கள் ஆகியோரிடம் நடத்திய ஆய்வில் பெண்களிடம் செக்ஸ் ஆர்வம் குறைந்து வருவதாக தெரிந்துள்ளது.

18 முதல் 59 வயது வரையான ஆண், பெண்களிடமே இந்த ஆய்வு நடந்தது. இரண்டாயிரம் பெண்களிடமும் கருத்துகள் அறியப்பட்டன.

அதில் 40 சதவீதமான பெண்கள் தங்களுக்கு செக்ஸில் நாட்டம் குறைந்துள்ளதாக கூறியுள்ளனர். ஆனால் ஆண்களில் பெரும்பாலானோர் அதற்கு நேர்மாறான கருத்தையே கூறியுள்ளனர்.

உடலுறவில் தங்களுக்கு மகிழ்ச்சி இல்லை என்று பெண்கள் கூறுவதையிட்டு என்ன காரணம் என்றும் ஆராயப்பட்டது.

அலுவலகங்களில் நீண்ட நேரம் பணியாற்றுவது, வீட்டு வேலைகளையும் பெண்ணே செய்யவேண்டி இருப்பது போன்றவற்றால் ஏற்படும் சோர்வும் முக்கிய காரணம் என்று கண்டறிந்துள்ளனர்.

# ஜெயித்த காதல்

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளர் அனிதா பிரதாப். துணிச்சலான பெண்மணி.

விடுதலைப் புலிகளது தலைவர் பிரபாகரனை பேட்டி கண்டு அட்டைப் படத்துடன் இந்திய சஞ்சிகையில் பரபரப்பாக முதலில் வெளியிட்டவரும் இவர்தான்.

இந்தியப் படை காலத்திலும் துணிச்சலாக செய்திகளை வெளியிட்டு வந்தார். இவருக்கு ஏராளமான ஊதியம் கிடைக்கிறது. இதனால் சக பத்திரிகையாளர் சிலருக்கும் பொறாமை.

தற்போது சி.என்.என்.செய்தி நிறுவனம் பெரும் தொகையை ஊதியமாகக் கொடுத்து பணியில் அமர்த்தியுள்ளது. அனிதா பிரதாப்புக்கும் இந்திப் பட



வில்லன் நடிகர் குல்ஷன் குரோவருக்கும் இடையே காதல் மலர்ந்தது.

இருவரும் நீண்டகாலம் காதலித்து தற்போது திருமணம் செய்துகொண்டனர். குல்ஷன் நிழலில் வில்லன். நிஜத்தில் அனிதாவின் கதாநாயகன்.



படிப்பகம்

www.padippakam.com



## மறுபடி திரும்புதல்

↑ **கொ**சோவோவில் செர்பியப் படைகள் இனப்படு கொலையைக் கட்டவிழ்த்து விட்டன. படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், சித்திரவதை முகாம்கள், புதைகுழிகள் என்று அடக்குமுறை தலைவிரித்தாடியது. கொசோவோ மக்கள் இடம்பெயர்ந்து உயிர் காக்க ஓடினார்கள்.

இந்தப் பச்சிளம் சிறுவனின் குடும்பமும் செர்பியப் படைகளால் அழிந்தது. மிஞ்சியது இவனும், பச்சிளம் சிறுவனான சகோதரனும்தான். உயிர் தப்புவதற்கு, பச்சிளம் சிறுவனைச் சுமந்தபடி மலைப்பகுதிக்கு ஓடினான் இந்தச் சிறுவன்.

தற்போது கொசோவோவில் செர்பிய ஆதிக்கத்துக்கு முடிவு காணப்பட்டுள்ளதால் பிஞ்சுக் குழந்தையை ஏந்தியபடி திரும்பி வருகிறான் இந்தச் சிறுவன். அடக்கு முறைகளும், அவை தரும் துயர்களும் நிரந்தரமல்ல!

## முகம்-காணலாம்

↘ **தொ**லைபேசியில் பேசியபடியே பேசுபவரையும் திரையில் பார்க்கலாம். அத்தகைய தொலைபேசிகள் பாவனைக்கு வந்திருப்பது தெரிந்ததுதான். ஆனால் செல்லுலார் தொலைபேசியிலும் அந்த வசதி வந்திருப்பதுதான் புதுமை.

ஜப்பானில் எலெக்ரானிக் தொழிற்துறையில் பிரபலமாக விளங்கும் 'கியோசெரா' இந்த புதுமையைச் செய்துள்ளது.

செல்லிடப் பேசிகளிலும் (செல்லுலார்) இனிமேல் பேசுபவர்களின் உருவங்கள் அதிலுள்ள இரண்டு அங்குலத் திரையில் தெரியும். இதற்கு 'விஷுவல் ஃபோன் விபி 210' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த ஃபோனின் எடை 165 கிராம் மட்டும். ஒரு விநாடிக்குள் இரண்டு உருவங்கள் திரையில் தோன்றும்.

'காதல் கோட்டை' முதற்கொண்டு பல படங்களில் தொலைபேசியூடாக பேசும்போது முகம்பார்க்காமல் அவஸ்தைப் படுவார்களே காதலர்கள்: இந்த ஃபோன் வந்தால் அந்த அவஸ்தையே கிடையாதப்பா! முகம் பார்த்தே காதலிக்கலாம்.

### த க வ ல் பெட்டி







## பல் வீரன்

↑ ஒரு காரைக்கூட நம்மால் தனியாகக் கட்டி இழுக்க முடியாது. ஆனால் இந்தியரான கோபால் ஸ்ரீவத்சிங் கப்பலையே கட்டி இழுத்து கலக்கியிருக்கிறார். அதுவும் கைகளால் அல்ல, தன் பற்களால்தான் கட்டி இழுத்திருக்கிறார். கப்பலின் எடை 275 தொன். இதனை உலக சாதனையாகப் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளார்.

30 வயதான ஸ்ரீவத்சிங்குக்கு 500 தொன் எடையுள்ள கப்பலையும் இழுத்துக் காட்ட வேண்டும் என்பதுதான் இலட்சியமாம். யப்பா!



## நாளைய காட்சியகம்

↓ இதனைப் பார்த்தால் கட்டடம் மாதிரித் தெரிகிறதா? கட்டடமேதான். 2002ம் ஆண்டில் கட்டி முடிக்கப்படப்போகும் வித்தியாசமான கட்டடத்தின் மாதிரி வடிவம்தான் இது.

இதனை அமெரிக்காவில் உள்ள இந்தியர் ஒருவர் வடிவமைத்துள்ளார். வோஷிங்டனில் உள்ள மால் என்னும் இடத்தில் இதனை கட்டியமைக்கப் போகின்றனர். அமெரிக்கத் தேசிய அருங்காட்சியகமாக அமையப்போகிறது.


நூற்றாண்டு மாறும்போது கட்டட வடிவங்களும் மாற்றமடையப்போகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் பழுதல்லவே!

## இது புதுசு

↘ உலகெங்கும் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன. இலங்கையிலும் கொழும்பில் காலையும், மாலையும் போக்குவரத்து நெரிசல் பயங்கரம். வாழ்க்கை வெறுத்துப்போகும்.

ஆளுக்கொரு வாகனத்தில் பலர் பயணம் செய்வதால் வாகன நெருக்கடி மேலும் அதிகரிக்கிறது. இதனைத் தவிர்க்க ஜப்பான் நாட்டின் பிரபல வாகன தயாரிப்பு நிறுவனமான டொயோட்டா நிறுவனம் சிறிய கார்களை அறிமுகம் செய்துள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் இந்தக் குட்டிக் கார்களில் இரண்டுபேர் மட்டும் பயணம் செய்யலாம். தெருவை ஆக்கிரமிக்காமல் பயணிக்கலாம்.






## விதம் விதமாக

↑ இங்கு வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளவை பெற்றோல் போடும் இயந்திரங்கள். பெற்றோல் நிலையங்களில் இவற்றை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு பெற்றோல் போடும் இயந்திரங்களை சேகரிப்பதுதான் பொழுதுபோக்கு. இதற்காக பல நாடுகளுக்குச் சென்று விதம் விதமான இயந்திரங்களை சேகரித்து சாதனை படைத்துள்ளார். இவற்றை கண்காட்சிக்கு வைத்து தன் திறமையை பறைசாற்றியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

## புதிய கூட்டணி விவேக்-வையாபுரி

செந்தில், கவுண்டமணி கூட்டணிபோல இப்போது விவேக்,வையாபுரி கூட்டணி நகைச்சுவை நடிப்பில் கொடிகட்டிப் பறக்கிறது.

சமீபத்திய வெற்றிப் படங்களில் விவேக், வையாபுரி கூட்டணிதான் நகைச்சுவை விருந்து படைத்திருக்கிறது.

இக் கூட்டணி பற்றி வையாபுரி கூறுகிறார்: "நானும் விவேக்கும் 'இளையராகம்' படத்தில்தான் ஜோடி சேர்ந்து நடித்தோம். அதன் பின்னர் 'கண்ணெதிரே தோன்றினாள்', 'உன்னைத் தேடி', 'பூமகள் ஊர்வலம்' உட்பட பல படங்களில் ஜோடியாக நகைச்சுவை பண்ணியிருக்கிறோம்.

தற்போது 'ஆசையில் ஒரு கடிதம்', 'ரோஜா வனம்' உட்பட பல படங்களில் இணைந்து நடிக்கிறோம். எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணியாக உலாவரும்." என்று நம்பிக்கையோடு கூறுகிறார்.

## இரண்டு விஜய்

'மின்சாரக் கண்ணா' படத்தில் இரட்டை வேடத்தில் தூள் கிளப்பி நடித்து வருகிறார் விஜய். படத்தின் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமாருக்கும் விஜய்க்கும் இடையே பனிப்போர் நடப்பதாகவும் கூறுகிறார்கள்.

விஜய் சில காட்சிகளுக்கு யோசனை கூற, அது இயக்குநருக்குப் பிடிக்கவில்லையாம்.

எப்படியோ படம் வளர்ந்து வருகிறது. 'படத்தில் எனக்கு இரட்டை வேடம். இரண்டிலும் நிறைய வேறுபாடு இருக்கும். அதிலும் ஒரு பாத்திரம் எனக்கு சவாலாக இருக்கிறது!' என்று விஜய் கூறியிருக்கிறார்.

## உலகம் சுற்றும் வாலிபன்

வெளிநாடுகளில் தயாராகும் படங்களில் அதிகம் நடித்தவர் பிரசாந்த். அவர் நடித்து வெளிநாடுகளில் உருவான படங்களின் பட்டியல் மேலும் நீள்கிறது.

'ஆசையில் ஒர் கடிதம்' படத்தின் பல காட்சிகள் கென்யாவில் படமாக்கப்பட உள்ளன. முதன் முதலில் கென்யாவில் தயாராகும் படம் இதுதான்.

'ஜோடி' படத்தின் படப்பிடிப்பு தற்போது கனடாவில் நடந்து வருகிறது. ஜூன் 25 முதல் 25 நாட்கள் தொடர்ந்து நடக்கிறது.

## ~~சேவகன்~~ கேசவன்

சென்றவாரம் ரம்பாவின் படத்தின் கீழே 'சேவகன்' என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டு விட்டது. 'கேசவன்' படத்தில் சரத்குமார்-ரம்பா ஜோடியாக நடிக்கின்றனர்.

## வீட்டு மனைவி

ராம்கியை இரகசியத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார் நிரோசா. திருமணத்திற்கு மறுத்து பல தடவை அல்வா கொடுத்தவர் ராம்கி. இறுதியில் வசமாக மாட்டிக் கொண்டார்.

நிரோசா கார் ஒன்றில் மார்க்கெட் சென்று தானே மரக்கறிகளை வாங்கிச் செல்கிறார். சைவ ஹொட்டலில் ஸ்பெசல் தோசையும் அடிக்கடி வாங்குகிறார். ராம்கிக்கு தோசை என்றால் உயிர்.




பிரியா ராமன்
படம்: நேசம் புதுசு

## திரையுலக மறுபக்கம் 109

## மறைக்கப்பட்ட திடீரென்று ந...

தமிழ்நாட்டிலிருந்து மயன்

பிரியாராமனும்- ரஞ்சித்தும் திருமணம் செய்து கொண்ட செய்தி சமீபத்தில் வெளியானது.

ஆனால் கடந்த மார்ச் மாதமே நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது. மிக இரகசியமாக வைத்திருந்தனர்.

'புதுமைப்பித்தன்' படத்தில் பிரியாராமனுக்கு கவர்ச்சியை வாரி வழங்கும் பாத்திரம். அதே படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடித்தவர் ரஞ்சித்.

ரஞ்சித்தின்மீது முதலில் மையல் கொண்டவர் பிரியாராமன்தான். புதுமைப்பித்தனில் இருவரும் இணைந்து நடிக்கும் காட்சிகள் இருக்கவில்லை.

ஆனால் பிரியாராமன் சம்பந்தப்பட்ட கவர்ச்சியான காட்சிகள் படமாகும்போது நேரில் காணும் பாக்யம் ரஞ்சித்துக்கு கிடைத்தது. அவருக்கும் சபலம் தலைதூக்கியது. பிரியாராமனும் ரஞ்சித்தை கணக்குப் பண்ணிக்கொண்டு வலியச் சென்று பேச ஆரம்பித்தார்.

அப்படியே படப்பிடிப்பு அரங்கில் தொடங்கிய நட்பு பிரியாராமனின் தனி பங்களாவரை சென்றது.

பிரியாராமனுக்கு மதுப்பழக்கம் இருந்தது. வேறு பல தொடர்புகளும் இருந்தன.

ரஞ்சித்தின் நட்பினால் அவற்றை படிப்படியாக கைவிட ஆரம்பித்தார். ஆனால் அவரை நாடிய பெரும் புள்ளிகளுக்கு அவரது மறுப்பு கோபத்தை ஏற்படுத்தியது. மிரட்ட ஆரம்பித்தனர்.

ரஞ்சித்தின் மடியில் விழுந்து அழுதார் பிரியாராமன். தனக்கொரு நிரந்தரத்துணை தேவை என்று விசும்பினார்.

பிரியாராமனிடம் ரஞ்சித்தும் முற்றாக மயங்கிப் போனார். அதனால் அவரது கோரிக்கையை மறுக்காது இணங்கிவிட்டார்.

ரஞ்சித்தின் வீட்டுக்கு பிரியாராமன் சென்று தாயாரிடமும் நல்ல பெயர் எடுத்துவிட்டார். அதனால் ரஞ்சித் தரப்பில் பச்சைக்கொடி.

இந்த நேரத்தில்தான் 'நேசம் புதுசு' படத்தில் பிரியாராமனுக்கு வாய்ப்புப் பெற்றுக்கொடுத்தார் ரஞ்சித்.

படப்பிடிப்பு முடியு...
தனர். நிச்சயதார்த்த...
'நேசம் புதுசு' வெ...
முதலில் முடிவு செய்தி...
புள்ளி ஒருவரிடமிருந்து...
இறுதியாக காலக்கெ...
பாதுகாப்புக்காக தங்க...
அவசரம் ஏற்பட்டுவிட்ட...
ரஞ்சித் வீட்டாரும், ...
மட்டும் சமூகமளித்திருக்...
முன்கூட்டியே தெரி...
தடுத்து விடுவாரோ ...
கல்யாணம் முடிந்த பி...

ம...

பிரபலமாக உள்ள...
மனேஜராக இருந்தவர் ந...
முன்னர் அவருடன் நெ...
அந்த நெருக்கத்தா...
தொடர்ந்து தங்கியிருந்த...
தான் பொறுப்பு.
ஆரம்பத்தில வாய்ப்...
சரித்துப் போனார்? யார்...
மனேஜருக்கு தெரியும்.
நடிகர்களின வக்கிர...
எப்படி எல்லாம நடந்து...
சொல்லியும் இருக்கிறா...
வெளிநாட்டு புள்ளி...
கொடுத்ததும் அந்த ம...
துபாயிலிருந்து ஷேக்...
கிறார்கள். சென்னையில்...
ஷேக்குகளை தன் 'கலை...
அக்கட்டத்தில் ஷேக்...
என்று கூறி இசகு பிசகா...
கொடுக்குமாறு கூறி படம்...
ஷேக் பார்த்து ரசிக்க...
கூறப்பட்டன. பல இலட்...
தற்போது நடிகை...
காதலரும் இருக்கி...
நடிகை தன்...



## மினி சினி

- ராஜீவ் மேனன் இயக்கும் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் இடம்பெறும் 'கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன்...' என்ற பாடல் ஸ்கொட்லாந்து நாட்டில் படமாக்கப்பட்டுள்ளது.
- பார்த்திபன்-தேவயாணி-அஜித்குமார் நடிக்கும் 'நீ வருவாய் என...' படத்தில் முக்கிய வேடமொன்றில் சுவலட்சுமி நடிக்கவுள்ளார்.
- முரளி நடிக்கும் 'காமராசு' படத்தை அன்பழகன் என்னும் புதிய இயக்குநர் இயக்கி வந்தார். தயாரிப்பாளருடன் ஏற்பட்ட தகராறால் தற்போது இப்படத்தை 'பூமகள் ஊர்வலம்' மதுரவன் இயக்குகிறார்.
- 'கள்ளழகர்' படத்தின் மூலம் அறிமுகமான லைலா இப்போது கார்த்திக், சத்யராஜ், முரளி ஆகியோருக்கு ஜோடியாக 3 புதிய படங்களில் நடித்து வருகிறார்.
- கமலின் 'ஹேராம்' படத்தில் ரகுமானும், அப்பாஸும் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்கள். இதில் அப்பாஸ் மருத்துவர் வேடத்தில் நடிக்கிறார்.
- விக்ரமன் இயக்கும் 'வானத்தைப் போல' படத்தில் விஜயகாந்திற்கு தம்பியாக நெப்போலியன் நடிக்கிறார். நெப்போலியனுக்கு ஜோடியாக குஷ்பு நடிக்கவுள்ளார்.
- சரத்குமார் நடிக்கும் 'ஒருவன்' கார்த்திக் நடிக்கும் 'உனக்காக எல்லாம் உனக்காக' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம், மறுபடியும் இவர்கள் இருவரும் நடிக்கும் படங்களைத் தயாரிக்கவுள்ளது.
- தமிழில் தோல்வியைத் தழுவிய, அரவிந்தசாமி-இஷா நடித்த 'என் சுவாசக் காற்றே' தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளது.
- அந்தமானில் தயாராகிவரும் ஆபாவாணனின் 'அடிமைகள்' படத்தில் சத்யராஜிற்கு ஜோடியாக 'டைம்' படநாயகி ராதிகா சௌத்ரி நடிக்கவுள்ளார்.
- நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கும் 'கேங்' என்ற மலையாளப் படத்தில் 30 வில்லன்கள் நடிக்கிறார்கள். இப்படத்தை வில்லியம்ஸ் என்பவர் இயக்குகிறார்.

## நடிப்புக்கு சிம்ரான்

'துள்ளாத மனமும் துள்ளும்', 'வாலி' ஆகிய படங்களில் தன் நடிப்புத் திறமையை காண்பித்திருக்கிறார் சிம்ரான்.

'வாலி' படத்தில் சிம்ரான் தோன்றும் காட்சியே படு கவர்ச்சியாக இருக்கும். சிம்ரானின் பின்னழகுகளை படு கவர்ச்சியாக கமரா காண்பித்திருக்கும். அஜித்துடன் படு நெருக்கமான காட்சிகளும் இருக்கின்றன. இத்தனையையும் மீறி, நடிப்புத் திறனை காட்டுவதற்கும் பலத்த வாய்ப்புக் கொடுத்திருந்தார் இயக்குநர்.

'வாலி' படத்தின் பின்னர் சிம்ரான் என்றால் கவர்ச்சிக்கு மட்டும்தான் இலாய்க்கு என்ற பேச்சு அடங்கிப்போச்!

"தமிழில் அறிமுகமான நாளில் இருந்தே எனக்கு கவர்ச்சியான பாத்திரங்கள்தான் அதிகம் வந்தன. 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்திலிருந்து மாற்றம் தொடங்கிவிட்டது." என்கிறார் சிம்ரான்.



சிம்ரான்
படம்: ஜோடி

## அஜித் முன்னணியி...

'காதல் கோட்டை'யில் புகழேணிக்கு கிடுகிடுவென்று உய... அஜித்குமார். பின்னர் காதல் லீலைகளில் மூழ்கி, கிடுகிடு... கீழே சரிந்தார்.

'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' மறுபடி தூக்கி நிறு... 'உன்னைத் தேடி' வெற்றி பெற்றது. மறுபடி படங்கள் கு... இரட்டை வேடத்தில் நடித்த 'வாலி' படம் மகா வெற்றி. பல... வேற்பு. மறுபடி உச்சத்துக்கு கொண்டுபோய்விட்டது

'ஆனந்த பூங்காற்றே' படமும் சமீபத்தில் வெளியாகி சக்கை... போடுகிறது. 'அமர்க்களம்' படம் வரப்போகிறது. அதுவும் சி... வந்திருப்பதாக தகவல்.

விஜய், பிரசாந்த் ஆகியோரையும் தற்போது ஓரம் கட்டி... வரிசையில் நிற்கிறார் அஜித்.

'என்றென்றும் காதல்' தோல்வியால் விஜய் சற்று பின்தங்கியு... ஜூன் 25இல் வெளியாகியுள்ள 'நெஞ்சினிலே' ஓடினால்தான் பந்தயத்தில் முன்னே வரலாம்.

ரஜினியின் இடத்திற்கு விஜய்யை ஒப்பிடுவதுபோல கமலின் இட... அஜித்குமாரை கூறுகிறார்கள். 'வாலி' படத்தில் அஜித்தின் ந... பார்த்த பின்னர்தான் இந்த ஒப்பீடு.


படிப்பகம்

www.padippakam.com

# ...ச்சயதார்த்தம் ...ந்த திருமணம்

...ர திருமணத்தை தள்ளிப்போட தீர்மானித் ...ட்டும் மிக இரகசியமாக நடத்தினார்கள். ...ன பின்னரே கல்யாணம் என்றுதான் ...ர்கள். ஆனால் பிரியாராமனுக்கு பெரிய ...ால்லை தொடர்ந்தது.

...தித்து மிரட்டல் வந்ததாம். அதனால்தான் ...றவை பகிரங்கமாக பிரகடனம் செய்யும்

...ராமன் வீட்டாரும் வேறு சில நண்பர்களும் ...நமணம் நடந்து முடிந்தது.

...ல் திருமணத்தை அந்தப் பெரும்புள்ளி ...தான் பெரிதாக விளம்பரப்படுத்தாமல் ...ர பத்திரிகைகளுக்கு செய்திகொடுத்தனர்.

## ...க் கொண்டார்

...ன்கெழுத்து நடிகை அவர். அவருக்கு ...ரவயதான 'இளைஞர்'. நடிகை பிரபலமாக ...மாக இருந்திருக்கிறார்.

...னஜர்' என்ற போர்வையில் நடிகையுடன் ...டிகையின் சகல காரியங்களுக்கும் அவர்

...நடியபோது நடிகை யார் யாருடன் அனு ...கெல்லாம் வலை வீசினார்? என்பதெல்லாம்

...பற்றியும் தன்னோடு தனிமையில் அவர்கள் ...ண்டனர் என்றும் அவரிடம் மறைக்காமல் ...கை.

...ன் நடிகைக்கு தொடர்புகளை ஏற்படுத்திக் ...தான்.

...வந்து பணத்தை தண்ணீராய் இறைத்திருக் ...ள பிரபல நட்சத்திர விடுதி ஒன்றில்தான் ...வையால்' மகிழ்வித்து வந்தார் நடிகை.

...ரது தனிப்பட்ட பாவனைக்கு மட்டும் ...காணங்களில் நடிகையை போஸ் ...தனர். துபாயில் இருக்கும்போது ...தான் அப் படங்கள் என்று ...ாய்கள் கூலியாகக் கிடைத்தன. ...உயரத்தில் இருக்கிறார். ஒரு

...டு விலகிப்போகிறாரோ என்று

மனேஜருக்கு பொறாமை. முன்பு போல நடிகை தன்னுடன் நெருங்க மறுப்பதும் மனேஜருக்குப் பொறுக்கவில்லை.

நடிகையை மிரட்டித் தன் ஆசைக்கு இணங்க வைக்க முயன்றார். பணம் கறக்கவும் திட்டமிட்டார். நடிகை தன் காதலரிடம் கூறி உதவி கோரினார்.

மனேஜரை ஒரு வழி பண்ணுவதற்கு காதலர் திட்டம் தீட்டிக் கொண்டிருக்க, மனேஜருக்கு எப்படியோ விஷயம் கசிந்துவிட்டது. கையில் கிடைத்த பணத்தை வாரிச் சுருட்டிக் கொண்டு தப்பியோடிவிட்டார்.

சில பத்திரிகையாளர்களை சந்தித்து நடிகையின் கதையைக் கூறி பணம் பெற்றுக்கொண்டார். அத்தோடு விடாது ஷேக்குக்காக நடிகையை வைத்து எடுத்த புகைப்படங்கள் தம்மிடம் இருப்பதாகவும் நடிகைக்கு ஃபோன் செய்து மிரட்டியுள்ளார்.

இதனால் தற்போது நான்கெழுத்து நடிகை 'டென்ஷனாக' இருப்பதாக தகவல்.

## முகப்பில்

**கார்த்திக்**

படம்: அத்தை மகன்

**கீர்த்தனா**

## சின்ன சின்ன ஆசை

'சின்ன சின்ன ஆசை' பாடலைப் பாடியவர் மின்மினி. அப்பாடலின் பின்னர் எங்கே ஆளைக் காணோமே என்று நினைத்திருப்பீர்கள். அது ஒரு சோகக் கதை.

அவருக்கு தொண்டையில் கோளாறு ஏற்பட்டு ஆறு ஆண்டுகள் பேச முடியாமல் தவித்தார். தற்போது குழந்தை பிறந்துள்ளது. அதன் பலனாக தொண்டை வியாதியும் பறந்து போயாச்சு.

'மீண்டும் பாடகியாகி பிரபலம் பெறுவேன்' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் மின்மினி. அவரது சின்னச் சின்ன ஆசை நிறைவேறட்டும்.

## மோசமான படம்

பிரபு, தேவயாணி, சிவகுமார், ஆனந்தராஜ், வடிவேலு, ராதிகா, பொன்னம்பலம் ஆகியோர் நடித்துள்ள படம் 'கும்மிப்பாட்டு.'

சமீபத்தில் திரைக்கு வந்துள்ளது. இங்கு வீடியோவில் வெளியாகியுள்ளது.

ஒரு படத்தை எப்படி எடுக்கக் கூடாது என்பதற்கு நல்ல உதாரணம் 'கும்மிப்பாட்டு.' பிரபுவின் மார்க்கெட் ஏற்கனவே தள்ளாடுகிறது. அதனை மேலும் கவிழ்க்க இந்தப் படம் போதும்.

'கும்மிப் பாட்டு' என்று ஏன் பெயர் வைத்தார்கள் என்பதே புரியவில்லை. படத்திற்கும், அதன் நாசமாய்ப் போன கதைக்கும் படத்தின் பெயருக்கும் என்ன தொடர்பு?

நேரத்தையும், பணத்தையும் விரயமாக்கியே தீருவோம் என்று பிடிவாதம் பிடிப்போர் இந்தப் படத்தைப் பார்க்கலாம்.




லிவிங்ஸ்டன்-ரம்பா
படம்: பூமகள் ஊர்வலம்



சரத்குமார்-பூஜாபத்ரா
படம்: ஒருவன்

## சரத் துணிச்சல்

சண்டைக் காட்சிகளில் 'டூப்' இல்லாமல் நடிக்கும் துணிச்சல் ஒரு சில கதாநாயகர்களுக்கே உண்டு.

பாய்வது, புரளுவது, குதிப்பது போன்ற கஷ்டமான காட்சிகளில் ஸ்டண்ட் நடிகர்களே கதாநாயகர்களுக்கு பதிலாக 'டூப்' போட்டு நடிப்பார்கள்.

விஜயகாந்த் அநேகமான காட்சிகளில் 'டூப்' போடமாட்டார். அதுபோல சரத்குமாரும் சவாலான காட்சிகளில் நடிக்க விரும்புவார்.

'ஒருவன்' படத்தில் 40 அடி உயரத்தில் இருந்து கயிற்றில் தொங்கியபடி வந்து குதிக்கும் காட்சி. 'டூப்' வைக்கலாம் என்று இயக்குநர் கூறினார். சரத் மறுத்துவிட்டு தானே நடித்தார். படப்பிடிப்புக் குழுவினர் கரகோசம் செய்து பாராட்டினார்கள். துணிச்சலான சரத்.

## பட்டாபிஷேகம்

'பூமகள் ஊர்வலம்' படத்தில் பிரசாந்த், லிவிங்ஸ்டன் இருவரும் கதாநாயகர்கள். ஆனாலும் லிவிங்ஸ்டனின் நடிப்புக்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள். ஆவுடையப்பனாகவும், ஆம்ஸ்ரோங்காவும் வெளுத்துக் கட்டியிருந்தார்.

இதனையடுத்து லிவிங்ஸ்டனை வைத்து பிரமாண்டமான படம் ஒன்றுக்கு பூஜைபோடப்பட்டுள்ளது. படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'பட்டாபிஷேகம்'. இப்படத்தில் ஜெர்மன் மொடல் அழகி கதாநாயகியாக நடிக்கிறார்.

இயக்கம்: வாஞ்சிநாதன். இசை: தேவா. பாடல்கள்: வாலி. சண்டைப் பயிற்சி: சூப்பர் சுப்புராஜன்.

## காதோடு சொல்லுகிறோம்

**பி**ரகாசமான நடிகர் உற்சாக பானத்தில் நீந்துகிறாராம். வாய்ப்புக்கள் எக்கச்சக்கமாக குவிந்து கொண்டிருக்கிறது. மனிதருக்கு தலைகால் புரியவில்லை. உற்சாக பானத்தை போட்டுவிட்டு நடித்தால் சிறப்பாக வருவதாக நியாயம் வேறு சொல்கிறாராம்.

**சி**த்தாரமான நடிகை 'குமார' இயக்குநரின் கட்டுப்பாட்டில் இருக்கிறார். சூப்பர் நட்சத்திரத்துக்கு படம் இயக்கியதால் 'குமார' நடிகர் காட்டில் அடை மழை. நடிகையும் சேர்ந்து நனைகிறார்.

'**வா**ளி' நடிகைக்கு தெலுங்கு பட உலகில் ஏகப்பட்ட வருமானமாம். படங்களில் நடிக்கிறாரோ இல்லையோ வருமானத்துக்கு குறைச்சல் ஏற்படாமல் பிரபல தயாரிப்பாளர்கள் கவனித்துக் கொள்கிறார்களாம்.

**மா**ர்க்கண்டேய நடிகர் தன் மகனான மூன்றெழுத்து நடிகருக்கு உதவியாளர் ஒருவரை நியமித்துள்ளாராம். நடிகைகளின் வலை வீச்சில் இருந்து காப்பாற்றுவதுதான் உதவியாளரது பணியாம். நட்சத்திர தம்பதியின் மகள்தான் நடிகரை மடக்க ஆவலுற்றாராம். அதனையறிந்துதான் வெள்ளம் தலைக்குமேல் செல்ல முன்பாகவே அணை கட்டியுள்ளார் தந்தை. அவர் நீண்டகால அனுபவஸ்தராச்சே!

## அட்சயா

முகப்பில் ஜொலிப்பவர் கீர்த்தனா. நாளைய தீர்ப்பு படத்தில் விஜய் ஜோடியாக அறிமுகமானவர். இருவருக்கும் அதுதான் முதல் படம். அதன்பின்னர் அழகான கீர்த்தனாவுக்கு குறிப்பிடும்படியான படங்கள் அமையவில்லை.

தற்போது தொலைக்காட்சித் தொடர்களில் பிரகாசிக்கிறார். 'அட்சயா' சக்தி ரி.வியில் ஒளிபரப்பாகிறது. அதில் அட்சயாவாக வருவது இவர்தான்.

இந்தியாவிலும், இங்கும் அட்சயாவில் கீர்த்தனாவின் நடிப்புக்கு பலத்த வரவேற்பு!



விஜயகாந்த்
படம்: கண்ணுபடப் போகுதய்யா

*சினிமா விமர்சனம்*

## இதமான பூங்காற்று

**படம்** : 'ஆனந்த பூங்காற்றே'

**நடிப்பு** : அஜித்குமார், மீனா, மாளவிகா, ராஜ்கபூர், விஜயகுமார், மணிவண்ணன், வடிவேலு இவர்களுடன் கார்த்திக்.

**இயக்கம்** : ராஜ்கபூர். இசை: தேவா.

**கதை**: அஜித்தை மாளவிகா ஒருதலையாக காதலிக்கிறார். அஜித் மீனாவை காதலிக்கிறார். மீனா விதவை. ஒரு குழந்தைக்கு தாய் என்று அனைவரும் நம்புகின்றனர். ஆனால் அது உண்மையல்ல. பாட்டு வாத்தியார் கார்த்திக்கை மதிக்கிறார் மீனா. கார்த்திக்கின் மனைவி இறந்துவிட, குழந்தையை கார்த்திக்கே வளர்க்கிறார். அப்போது கார்த்திக்கிடம் பாட்டு கற்க வரும் மீனா கார்த்திக்கை குருவாக மதிக்கிறார். கார்த்திக்கின் குழந்தையிடம் அன்பாய் இருக்கிறார்.

கார்த்திக்-மீனா உறவை தவறாகப் புரிந்து கொண்டு வதந்தி பரவுகிறது. மீனாவின் தந்தை விஜயகுமாரும் அதனை நம்பி கார்த்திக்கை கொலை செய்விக்கிறார். அதனால் வெகுண்டெழும் மீனா, கார்த்திக்கின் குழந்தையை தாயாக இருந்து வளர்க்கிறார். அஜித்தின் விடா முயற்சியால் மீனா மனது மாறி அவரைக் கைப்பிடிக்கிறார். அதுதான் கதை.

மாளவிகாவின் கவர்ச்சி, மீனாவின் அமைதியான நடிப்பு, அஜித்குமாரின் இயல்பான நடிப்பு என்று கதை தொய்வின்றி நகருகிறது. ராஜ்கபூரின் வில்லத்தனம் சத்யராஜை நினைவூட்டுக்கிறது. மணிவண்ணன், வடிவேலு கூட்டணி கலகலக்க வைக்கிறது. பாடல்களும் கண்ணுக்கும், காதுக்கும் இதமூட்டுகின்றன. பார்க்கலாம். ஒரே சொல்: நல்ல படம்.

## சுயம்வரம்

'கின்னஸ்' சாதனைப் படமான 'சுயம்வரம்' படத்தில் குஷ்பு நரிக்குறவப் பெண்ணாக நடிக்கிறார். ஐஸ்வர்யா கழிவறை துப்புரவு செய்யும் பெண்ணாக வருகிறார். சுவலட்சுமி ஊனமுற்ற பெண்ணாக தோன்றுகிறார்.

படத்தின் கதைப்படி சுவலட்சுமி, ரம்பா, ரோஜா, மகேஸ்வரி, பிரீதா, கஸ்தூரி ஆகிய ஆறுபேரும் சகோதரிகள். இவர்களின் தாய், தந்தையாக மஞ்சுளாவும், விஜயகுமாரும் நடித்துள்ளனர்.



படிப்பகம்

## வசப்படாத வாழ்வின் தாற்பரியங்கள்

காற்றும் மழையுமாய்
இருள் சூழ்ந்த காலை;
நாம் எதிரெதிரே
அமர்ந்திருந்த
ஆய்வுகூட மேசை;
நம்மைச் சூழ்ந்திருந்த,
மெல்லிய வாசனை;
விரிவுரையின் முடிவில்
இருவரும்
வேடிக்கை பார்த்திருந்த
அந்த மழையின் தூவானம்;
இன்னும் என்
நினைவுகளிலிருந்து
நீங்கவே இல்லை!
-o-
அன்றைப் போலவே
மழையின் சீதளத்தை
உள்வாங்கி நின்றிருந்த
மரங்களின்
மஞ்சள் இலைகள்
புல் வெளியில்
பூக்களாய்
உதிர்ந்து கொண்டிருந்த-ஓர்
அழகியமழைநாளில்தான்
அண்ணாக-நீ
அறிமுகமானாய்!
-o-
துயரத்தால் தொடப்படாத
ஆத்மா உனது!
நிம்மதியைத் தேடாத
நிம்மதியான
வாழ்க்கை உனது!
பாக்கியங்களும்
பாராட்டுக்களும்
நிரம்பிய பாதை உனது!
-o-
கணந்தோறும்
கணந்தோறும்
எழுகின்ற பாசத்தைக்
கொன்று வாழ்ந்திட
எனக்குத் தெரியாது!
இங்கு வாழ்க்கையின்
தர்மங்கள் எல்லாம்
மீறப்படும்போது
அன்பின் அரிச்சுவடியை
யாருக்குப் போதிப்பது?
-o-
அன்பைப்பற்றி
ஆயிரம் வாதங்கள் எழுந்தாலும்
உனக்கு நான் தங்கை
என்ற நிம்மதி
எனக்குப் போதுமடா!
-o-
மனதுக்குள்,
வெளிச்சம் வந்த வேளை
மறுபடியும்
ஓர் அஸ்தமனம்
எனது வாழ்வுக்குள்
ஊடுருவலாம்!
எனினும்,
என் மன இரைச்சல்களிலிருந்து
நிம்மதி தந்த
உனது நினைவுகள்
எனது நாளைகளிலெல்லாம்
ஒளி பாய்ச்சும்!
-o-
சிலருக்கோ
வாழ்வின் தாற்பரியங்கள்
வசப்படுவதேயில்லை;
அன்பின் அழகிய தரிசனம்
தென்படுவதுமில்லை;
அதற்காக,
நானும் நீயும்
என்ன செய்வது?

பஹீமா ஜஹான்-
அட்டாளைச்சேனை.

## அவசர அவசியம்

இலங்கையின்
மத்தியிலிருக்கும் ஒரு புள்ளி
கரையிலிருக்கும் ஒரு புள்ளியை
காதலிக்கிறது?
*
குளிர் காற்று;
சுடும் காற்று;
இது நல்ல பொருத்தம்!
*
என் கனவில் அவள்
குளிரின் பின்னணியில்!
அவள் கனவில் நான்
வெடியோசையின் பின்னணியில்!
*
தேயிலையை
உயிரோடு அனுப்பவா?
கடல் நீரை
கரிப்போடு அனுப்புடி!
*
நான்கூரையை வெறிப்பது
இரண்டு காரணங்களுக்காக
ஒன்று: ஒழுகுதல்!
மற்றது: கடிதம் தாமதித்தல்!
*
அவளும்
கூரையை வெறிக்கக்கூடும்
அது இருந்தால்!
*
எங்களுக்குள் ஒற்றுமை
எதிரிலிருக்கிறது பார்த்தீர்களா?
அழுகையே
எங்கள் பகுதித் தொழில்
அவர்கள் அழுகிறார்கள்
கௌரவமாக...
நாங்கள் அழுகிறோம்
கேவலமாக!
*
சோதனைச் சாவடிகளைத்
தாண்டி
நானும் அவளும்
இணைய வேண்டும்
சோதனைகளைத் தாண்டி
நாங்களும் அவர்களும்
இணைய வேண்டும்!

எஸ்.பிரபா.

## தேன் கிண்ணம்

சூரியன் மறைந்து
செத்த நேரத்தில்
செவ்வானமும் இருளும்...!
•••
காற்று வந்து
ராட்சஸத்தனமாய்
முகத்திலறையும்...
•••
வானம் அடிக்கடி
அறுந்து விழுந்து
நட்சத்திரங்கள்
உடைந்து சிதறும்...
•••
பூமி மீது புதுப்பனி
எம்மை விட்டு
எங்கும் பெய்யும்...
•••

## விடியாத விடியல்

முள்வேலி சுற்றிய
முகாம்களின்
மூலையில்
உடல்களோடு
உணர்வும் முடங்கும்...
•••
நிலா எரிக்கும்
தென்றல் சுடும்
இதயங்கள் காத்திருக்கும்
ஆவலோடு....,
ஒரு விடியலுக்காக...
•••
விடியும்...!
ஆனால் எப்போது?
•••

மன்னார் எம்.ஷிபான்-பேருவலை.

## அந்த நாள் ஞாபகம்


வின்னியோடும் மகளோடும்


கிரேகாவோடு



தென்னாபிரிக்காவின் மாபெரும் தலைவர் நெல்சன் மண்டேலா. 26 ஆண்டுகள் சிறையில் இருந்தவர். சமரசம் செய்திருந்தால் வெள்ளையின அரசு அவரை சிறையில் இருந்து விடுவித்திருக்கும். மண்டேலா தன் கொள்கையில் உறுதியாக இருந்தார். இறுதியில் நிற வெறியரசு விழ்ந்தது. கறுப்பின ஆட்சி எழுந்தது.

மண்டேலாவின் முதல் திருமணம் தோல்வியில் முடிந்தது. இரண்டாவது திருமணம் வின்னியோடு. இரண்டு பெண் பிள்ளைகளும் இருக்கின்றனர். வின்னியுடனும் மணமுறிவு ஏற்பட்டது.

தனது 80வது வயதில் மொசாம்பிக் முன்னாள் ஜனாதிபதியின் முன்னாள் மனைவியான கிரேகாவை திருமணம் செய்தார். மொசாம்பிக் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர் கிரேகா. இப்போது மண்டேலாவின் வாழ்க்கை நிறைவாக உள்ளது. பதவிக்கு விடை கொடுத்து விட்டு இந்தப் போராளிகள் நிம்மதியாக இருக்கின்றனர்.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

**04.07.99** முதல் **10.07.99**வரை

### மேடம்:
கிரக பரிமாற்றமும், வளமற்ற நேரமும், எடுத்த விடயங்களில் மந்தகதியினைக் காட்டும். சிக்கல்கள் தோன்றும். அச்சுவினி நட்சத்திரக்காரர் நோய் துன்பங்களில் அவதியுறுவார்கள். உறவினர்களது உதவி வார பிற்பகுதியில் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 04, 07.

### இடபம்:
சனி கால அமைப்பும்,கிரக மறைவுஸ்தானநிலையும்எடுத்த விடயங்களில் நல்ல நிலையினை ஏற்படுத்தும். சிக்கலான கணக்க நிலையினையும் கொடுக்கும். ரோகினி நட்சத்திரருக்கு பிரயாணப் பலன் ஏற்படும். மனதில் ஓரளவு நிம்மதி காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 06, 09.

### மிதுனம்:
கிரகபலம் 11ம் வீட்டில் உள்ளதாலும், ஜென்ம வீட்டில் புதன் வக்கிரக ஆட்சி பலம் பெறுதாலும், எடுத்த விடயங்கள் நன்மையளிக்கும். திருமண தொழில் விடயங்கள் நல்ல முடிவுகளைக் கொடுக்கும். திருவாதிரை, புநர்பூச நட்சத்திரக்காரர்கள் நன்மை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 07, 09.

### கடகம்:
கிரக பரிமாற்றம் நன்மையாக அமையப்பெறும். எடுத்த விடயங்கள் ஓரளவு நன்மை தரும். அத்துடன் உடலில் நோய் துன்பங்கள் தலையெடுக்கும். கல்வி, கருமங்கள் சீராக அமையும். ஆயிலிய, பூச நட்சத்திரருக்கு நன்மையுண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 06, 09.

### சிம்மம்:
பாக்கிய ஸ்தானத்தில் கிரக அமைப்பினால் குடும்ப கஷ்டங்கள் நிவர்த்தி பெறும். மக. நட்சத்திரக்காரர்களுக்கு ஊக்கமான நேரமாக அமைவதால் தடைப்பட்ட விடயங்கள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 05, 10.

### கன்னி:
அட்டமஸ்தான பலன் கஷ்டத்தைக் கொடுத்தாலும் கிரகப்பலம் செறிவடைவதாலும், கிரகபலத்துடன் கால மாற்றமடைவதாலும் இவ்வாரம் பல நல்ல கருமங்கள் நடந்தேறும். கல்வி, தொழில் சீராக அமையும். பணவசதி ஏற்படும். அத்த நட்சத்திர பெண்களுக்கு கருதிய கருமங்கள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மருண் வர்ணம்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 05, 10.

### துலாம்:
களத்திரஸ்தான கிரக கோண அமைப்பும், கிரகச் செறிவும், குடும்பத்தில் கருமங்களில் இருந்த தடைகள் நீங்கும். பிரயாண வாய்ப்பு ஏற்படும். மனதில் உள்ள கஷ்டங்கள் நிவர்த்தியாகும். விசாக நட்சத்திரக்காரர் நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 06, 10.

### விருட்சிகம்:
கிரக மறைவு ஸ்தானத்தின்படி மன உழைச்சல் அதிகரிக்கும். வார இறுதியில் உறவினர்களது வழியில் பண பொருளாதார வசதிகள் வந்து சேரும். கல்வி, தொழில் ஓரளவு சிறப்பாக அமையும். அனுஷ நட்சத்திரக்காரர்களுக்கு ஓரளவு அனுகூலமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 05, 09.

### தனுசு:-
5ம் இடம் கிரகச் செறிவு கூடுவதும், இலாபஸ்தான கிரக அமைப் பும் கல்வி, தொழில் சிறப்பாக அமையும். எதிர்கால வாழ்வுக்கான அடித்தளம் அமையும். மூல, உத்திராட நட்சத்திரக்காரர்களுக்கு சுபகாரியங்கள் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 09, 10.

### மகரம்:
மாற்றம் பெற்ற கிரக உறுதி செயற்பாடு குறைவடைவதால் நன்மை தரக்கூடிய கருமங்கள் தடை பெறும். உடலில் நோய் துன்பங்கள் கூடிக்குறையும். பிள்ளைகளின் நற்செய்திகள் கிடைக்கப்பெறும். அவிட்ட நட்சத்திரத்தாருக்கு பயணம் கூடிவரும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 06, 09.

### கும்பம்:-
கிரக ரோகஸ்தானம் பலமற்று உள்ளதால் எடுத்த விடயங்கள் கைகூடி வரமாட்டாது. பெறுமதிமிக்க பொருட்கள் அழிவு பெறக்கூடும். வீண் எதிர்ப்புக்கள், பிரச்சனைகள் வந்து சேரும். சதய நட்சத்திரக்காரருக்கு பிரச்சனைகளும் சந்திப்பார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 02.
அதிஷ்ட திகதிகள் : 07, 10.

### மீனம்:
வியாழன் 2ம் இடத்தில் உள்ளதாலும் இலாபஸ்தானத்தில் கிரக இயக்கம் உள்ளதாலும் எடுத்த, எதிர்பார்த்த விடயங்கள் கைகூடி வரும். உறவினர்களின் உதவி கிடைக்கும். உத்திரட்டாதி நட்சத்திரருக்கு யோகமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம்சிவப்பு; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 05, 09.

## நில்-கவனி-முன்னேறு

உங்களை நீங்களே நேசிக்க சொல்லித்தர ஒரு கேஸட் பிரிட்டனில் பரபரப்பாக விற்பனையாகிறது!

'ஃபோலிங் இன் லவ் வித் யுவர் செல்ஃப்.' இந்த ஒடியோ கேஸட்டை உருவாக்கியவர் ஃபியொனா ஹரால்ட் என்பவர்.

அவர் கூறும் டெக்னிக் இதோ:

**1.தன்னை நம்புவதே எல்லாம்**

நீங்கள் உங்களை என்னவாக நினைக்கிறீர்களோ அதுதான் நீங்கள்! எதை முன்னணிப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறீர்களோ அதற்கேற்றபடி எண்ணங்களை தேர்வு செய்யுங்கள். எடுத்துக்காட்டு: 'நான் சக்தியையும், வலிமையையும் என்னிடமிருந்து வெளிப்படுத்துகிறேன்.'

**2. தற்சார்பு**

தற்சார்பை வளருங்கள். மற்றவர்களைச் சார்ந்திராமல் இருக்க இருக்க, மற்றவர்களிடம் எதிர்பார்ப்பைக் குறைக்கக் குறைக்க, நீங்கள் அதிகம் கவர்ச்சி உள்ளவர்களாக ஆகிறீர்கள்.



**3. உங்களை நீங்களே நேசியுங்கள்**

உங்களை நீங்களே நேசிக்க வேண்டும். இல்லையெனில் மற்றவர்கள் உங்களை ஏற்பது என்பது கஷ்டமான விஷயமாக ஆகிவிடும்.

**4. செய்யக்கூடியதைச் செய்யுங்கள்**

உங்களின் நேரத்தில் கொஞ்சத்தை மற்றவர்களுக்கும் ஒதுக்குங்கள். தர்மத்திற்கு கொஞ்சம் செலவழியுங்கள். அது உங்களை நீங்களே நல்லவர் என்று உணரச் செய்யும்.

**5. வாழ்க்கையில் 'தைரிய சாலியாக' இருங்கள்**

ஆரோக்கியமான எண்ணங்களை எண்ணுவது நல்ல பழக்கம். உங்களை ஜாலியானவர் என்று கருதி ஒரு கும்பலே சுற்றிவரும்.

**6. உங்களுடன் நீங்கள் சுமூகமாக இருங்கள்**

உங்களுடன் நீங்கள் சுமூகமாக இருங்கள். மற்றவர்கள் இன்னும் அதிக சுமூகமாக உங்களுடன் பழக வருவார்கள். நீங்கள் உங்களிடமே தினமும் சொல்லிக் கொள்ள வேண்டியது. "என்னை நான் முற்றிலும் அங்கீகரிக்கிறேன். மற்றவர்கள் முன்னிலையிலும்கூட!"

**7. கடுமைக்கு ஒரு டாட்டா சொல்லுங்கள்**

மற்றவர்களைப் புரிந்து கொள்ளுதல், பொறுமையாக இருத்தல், உங்களிடம் நீங்களே அன்பு பாராட்டுதல். இதை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக ஆக்குகிறீர்களோ, மற்றவர்களிடமும் அப்படியே இருப்பீர்கள். மேலும் அதிக கவர்ச்சியை பெறுவீர்கள்.

**8. உங்களை கவர்ச்சியானவர் என்று மற்றவர்களை புரிந்து கொள்ள விடுங்கள்.**

உங்களிடம் நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள், 'நான் மற்றவர்களின் எண்ணங்களை இப்போது திறந்த மனதுடன் வரவேற்கிறேன். நான் பெரியவன்/ கவர்ச்சியானவன்/ செக்ஸியானவன்.

**9. எண்ணங்களை கண்காணியுங்கள்**

எதிர்மறை எண்ணங்களை உடன்பாட்டு (பாஸிடிவ்) எண்ணங்கள் மூலம் வெள்ளம் போல் பெருக்கெடுக்கச் செய்து விரட்டுங்கள். உடன்பாடாக செயல்படுவது பற்றிய எண்ணங்களை புத்தகமாகவும், டேப்ரி கார்டர் மூலமாகவும் கேளுங்கள். மற்றவர்கள் உங்களைப் பற்றிச் சொல்லிய நல்லனவற்றை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

**10. உங்களுக்கு நீங்களே ஒரு விருந்து கொடுத்துக் கொள்ளுங்கள்**

எவ்வளவு கவர்ச்சியானவர் நீங்கள்! இதற்கு உங்களுக்கு நீங்களே ஒரு விருந்து கொடுத்துக்கொள்ளக்கூடாதா, என்ன? விரும்புவதை மறக்காமல் பார்ட்டியில் சேர்த்துக் கொள்ளுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## மைக்ரோ அடுப்புக்கள்

இனியும் சமையலுக்காக பகல் முழுக்க சமையறையில் வெந்து கொண்டிருக்கத் தேவையில்லை. 'மைக்ரோ வேவ் அவன்' அடுப்புகளை பயன்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்ற நிர்ப்பந்தம் நெருங்கிக் கொண்டே இருக்கிறது. நம் நாட்டிலும் இவை தாராளமாக விற்பனைக்கு வந்துள்ளன. பலரகங்களில் உள்ளன.

மைக்ரோ வேவ் அவன்கள் மற்ற அடுப்புக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. சுமார் 700 வாட்ஸ் முதல் 900 வாட்ஸ் வரையிலான மைக்ரோ. வேவ் அவன்கள் சந்தையில் கிடைக்கின்றன.



எதைச் சமைக்க வேண்டுமோ அதனை உள்ளே வைத்துக் கதவைப் பூட்டிவிட்டு, மின்சார சுவிட்சைப் போட வேண்டியது தான். தானகவே சமையல் ரெடி.

எப்படி ஒரு துணி துவைக்கும் எந்திரத்தினுள் துணிகளைப் போட்டால் சலவை செய்யப் படுகிறதோ அதைப் போன்றுதான் இதுவும். மைக்ரோவேவ் அவன்களில் இன்னும் பல விசேஷங்கள் உண்டு.

என்ன உணவு? எவ்வளவு எடை என்பதற்கிணங்க அவற்றைச் சமைக்க எவ்வளவு நேரமாகும் என்பதை மைக்ரோ வேவ் அடுப்பு, கணித்து உங்களுக்குச் சொல்லும், அதன்படி தயார் செய்து விடலாம்.

வேலை முடிந்தால் 'பீப்' என்ற சத்தத்தோடு அது பலமுறை உங்களை அழைக்கும். நீங்கள் வராவிட்டால் மைக்ரோ வேவ் தானாக நின்று விடும். சிறு குழந்தைகள் வந்து 'திடும்' என்று அடுப்புக் கதவைத் திறக்காமல் இருக்க பாதுகாப்பு பூட்டுக்களும் உண்டு.

சமைத்த உணவு எவ்வளவு நேரத்திற்கு சூடு ஆறாமல் இருக்க வேண்டுமோ அந்த வேலையையும் மைக்ரோ வேவ் அடுப்பு செய்கிறது.

மற்ற அடுப்புக்களைப் போன்றதல்ல இது. உள்ளே இருக்கும் சமையல் சாதனம் தான் சூடாகுமே தவிர இந்தப் பெட்டி சூடாகாது.

இப்படிப்பல விசேஷங்கள் இந்த மைக்ரோ வேவ் அடுப்பில் இருந்தாலும்கூட சில ஆபத்துக்களும் உண்டு. பிளாஸ்டிக், பேப்பர், துணிகளாலான பொருட்களில் சமையல் எதையும் உள்ளே வைக்கக்கூடாது. சிலர் லேசாக சூடுபடுத்தி எடுத்து விடுவோமே என்று நினைப்பார்கள்.

கதவுகள், சுவிட்சுகள் லூசாகாமல் சரியாக இருக்கிறதா என்று அடிக்கடி பார்த்துக் கொள்ள வேண்டும். அதன் வழியாக வாயு வெளியேறலாம். அத்துடன் மின்சாரக் கசிவு எதுவும் ஏற்படாதவாறும் கவனித்துக்கொள்ள வேண்டும்.

## நீங்களே ஷம்பூ தயாரிக்கலாம்



இயற்கையிலான ஷம்பூவை நீங்கள் தயாரித்து ஏன் குளிக்கக்கூடாது? இந்த ஷம்பூ தயாரிப்பது எப்படி? இதோ இப்படி.

சீயக்காய் தூள் 100 கிராம், தூளாக்கிய பச்சைப் பயறு 20 கிராம், வெந்தயத்தூள் 10 கிராம், தூளாக்கிய செவ்வரத்தம் இலை 10 கிராம், எலுமிச்சம் பழத்தோல் பொடி 5 கிராம் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். பின் அவற்றை நன்றாகக் கலந்து கொள்ளுங்கள்.

குளிக்கும்போது அதை வெந்நீரில் கலந்து தலைக்குத் தேய்த்துக் குளியுங்கள்.

பிறகு பாருங்கள் உங்கள் கூந்தலின் ஆரோக்கியத்தை.

பொதுவாக ஷம்பூ உபயோகிக்கும்போது முதலில் தலைக்கு எண்ணெய் தேய்க்க வேண்டும். ஷம்பூவை அடிக்கடி மாற்றக் கூடாது. வாரத்திற்கு 2 தடவை ஷம்பூ உபயோகித்தால் போதும். தினமும் ஷம்பூ போட்டுக் குளிக்கக்கூடாது.

ஷம்பூ உபயோகிப்போர் அவரவர் கூந்தலின் தன்மைக்கு ஏற்ப வறண்ட, சாதாரண, எண்ணெய்ப்பசை, பாதிக்கப்பட்ட கூந்தல்களுக்கென்று தனித்தனியாக இருக்கும் ஷம்பூக்களில் தனக்கேற்றதை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

## தூக்கம் எவ்வளவு?



ஆரோக்கியமான குழந்தை சராசரியாக ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் தூங்க வேண்டும் தெரியுமா?

3 மாத வரையான குழந்தை 16-18 மணித்தியாலங்கள்
1 வயது வரையான குழந்தை 13-14 மணித்தியாலங்கள்
3 வயது வரையான குழந்தை 12 மணித்தியாலங்கள்
4 வயது வரையான குழந்தை 10-11 மணித்தியாலங்கள்
8 வயது வரையான குழந்தை 9-11 மணித்தியாலங்கள்
12 வயது வரையான குழந்தை 8-10 மணித்தியாலங்கள்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** FZ

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10-07-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 94

புவனா

டோடியின் இல்லத்தை நோக்கி ஹென்றி போல் பென்ஸ் காரை அதி உச்ச வேகத்தில் செலுத்தினார்.

கோர்ஸ் லா ரீனி என்னும் இடத்திலிருந்து நீளமான நேரிய பாதை செல்கிறது. சுமார் 600



மீட்டர்வரை இப்பாதை நீண்டு சென்றது.

அந்த நேரிய பாதையில் காரை உச்ச வேகத்தில் செலுத்தினால் படப்பிடிப்பாளர்கள் பின்தொடர முடியாது என்னும் நம்பிக்கை ஹென்றி போலுக்கு ஏற்பட்டுவிட்டது.

அந்தப் பாதை ஒரு சுரங்கத்தை நோக்கி கீழே போகிறது. அச் சுரங்கம் பொன்ட் அலக்ஸான்றே, பொண்ட் பெஸ் இன்வலி டேஸ் ஆகிய இடங்களுக்குக் கீழே சென்று அல்பேட் லேர் என்ற இடத்தைத் தொடுகிறது.

அவ்விடத்திலிருந்து இடது பக்கம் திரும்பினால் 'பொண்ட் டி லேக அல்மா' என்ற இடத்திலுள்ள சுரங்கப் பாதை தொடங்குகிறது.

இவ்விடத்தை வண்டி நெருங்கியபோது காரின் பின்புறமிருந்து பாதுகாவலர் றீஸ்-ஜோன்ஸ் காரிலிருந்த பாதுகாப்பு பட்டையை தன் இடுப்பில் அணிந்து கொண்டார்.

ஆனால் டயானா, டோடி ஆகியோரும், ஹென்றி போலும் பாதுகாப்புப் பட்டையை அணிந்து கொள்ளவில்லை.

டோடிக்கு ஹென்றி போல்மீது மகா நம்பிக்கை இருந்தமையால், வேகத்தைக் குறைக்குமாறு கூறவில்லை.

பின்தொடரும் படப்பிடிப்பாளர்களிடம் தப்பித்து தமது திறமையைக் காண்பிக்க வேண்டும் என்றுதான் டோடியும் துடித்துக் கொண்டிருந்தார்.

டயானாவும் இப்படியான சாகசங்களை இரசிக்கும் மனநிலை கொண்ட ஒருவர்தான்.

இந்த துரத்தலும், தப்பி ஓடலும் அவருக்கு இன்பமான அனுபவமாக இருந்திருக்க வேண்டும். மெல்லிய புன்னகையோடு இரசித்தபடி அமர்ந்திருந்தார்.

இளவரசியையும், தன் எசமானரையும் தன் திறமையால் ஆச்சரியப்படுத்தும் ஒரே எண்ணம் தான் ஹென்றி போலிடம் நிறைந்திருந்தது.

அவருக்குள் போதை இருந்தது. மிகச் சிறந்த சாரதியான ஹென்றி போலை அந்தப் போதை சற்று கரணம் தப்பச் செய்து கொண்டிருந்தது.

அவரது திறமைக்கு மீறிய நம்பிக்கையையும், அளவு கடந்த உற்சாகத்தையும் அந்தப் போதை ஊட்டியது.

கார் அதிவேகத்தில் சென்றதால் போதை உற்சாகமும் சேர அந்தரத்தில் மிதப்பது போன்ற உந்துதல் ஏற்பட்டிருக்கலாம்.

டயானாவும், டோடியும் தாம் இந்த வேகத்துக்குப் பயந்தவர்கள் அல்ல என்பதுபோல அலட்சியமாகவே அமர்ந்திருந்தனர். அதனால் தான் பாதுகாப்புப் பட்டையை அணியாதிருந்தனர்.

அதனை அணிந்திருந்தால் அடுத்து நிகழ்ந்த விபரீதத்தில் இருந்து தப்புவதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கலாம்.

### வண்டி சுழன்றது

'பொன்ட் டி லெ அல்மா' சுரங்கப் பாதைக்குள் அரசு வேகத்தில் பென்ஸ் புகுந்தபோது, ஹென்றி போலின் கட்டுப்பாட்டை மீறியது.

காரின் சக்கரங்கள் தெருவை உரசும் ஓசை பெரிதாக எழுந்தது. ஒரு புறமாக கார் இழுபட்டது.

ஹென்றி போல் நிதானத்தில் இருந்திருந்தால் சமாளித்திருக்கலாம். அவருக்குள் போதை இருந்தமையால் அவரது மூளை துரிதமாகச் செயற்பட்டு ஒத்துழைக்கவில்லை.

இவ்வாறு தடுமாறும்போது படப்பிடிப்பாளர்களது மோட்டார் சைக்கிள் ஒன்று படுவேகமாக வந்து காரைக் கடந்தது.

அந்த மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர் இருந்தனர்.

காரைக் கடக்கும்போது பின்னாலிருந்த படப்பிடிப்பாளர் தன் கமராவினால் காருக்குள் படம் பிடித்தார்.

கமரா வெளிச்சம் காரின் முன் கண்ணாடியில் பட்டுத் தெறித்தது. ஹென்றி போலின் கண்கள் கூசின.

அவர் கண்ணை மூடித் திறந்தபோது கார் முழுக் கட்டுப்பாட்டையும் இழந்து ஒருபுறமாகச் சாய்ந்தது.



நீஸ்-ஜோன்ஸ்

அவ்வாறு சாய்ந்தபோது வண்டிக்குள் டயானாவும், டோடியும் ஒரு பக்கமாக உள்ளேயே தூக்கி வீசப்பட்டனர்.

றீஸ் ஜோன்ஸ் பாதுகாப்புப் பட்டை அணிந்திருந்தமையால் அவர் மட்டும் தூக்கி வீசப்படாதிருந்தார்.

ஹென்றி போல் ஒருவிதமாக சமாளிக்க முயல, அப்போதுதான் டோடி "வேகத்தைக் குறை, வேகத்தை குறை... நிறுத்து" என்று கத்தினார்.

டோடி அவ்வாறு கூச்சலிட்டுக் கொண்டிருக்கும்போதே வண்டி சறுக்கியபடி சென்று கொண்டிருந்தது.

தெருவில் ஒரு பக்கமாகச் சாய்ந்தபடி சுமார் 32 மீட்டர்வரை பெரும் சத்தத்துடன், தரையில் உருளும் தகர டப்பாபோன்று சறுக்கிச் சென்ற பென்ஸ்கார், சுரங்கப்பாதையின் 13வது தூணில் மோதியது.

'டமார்' என்று பெரும் ஓசை எழுந்தது.

மோதிய வேகத்தில் காரின் முன்புறம் அப்பளமாக நொறுங்கியது. அதேவேகத்தில் சுரங்கப்பாதையின் குறுக்காக எறியப்பட்டது.

உலகைக் குலுக்கும் அந்த விபத்து நிகழ்ந்துவிட்டது.

உலகின் மிகப் பெரும் செய்தி ஒன்று அந்தச் சுரங்கப் பாதைக்குள் நிகழ்ந்துவிட்டது.

கார் மோதிய வேகத்திலேயே டோடியும், ஹென்றி போலும் உயிர் இழந்தனர்.

பாதுகாவலரான றீஸ்-ஜோன்ஸ் உயிருடன் இருந்தார். அவர் மயக்கமடையவில்லை.

அவருக்கு எல்லாமே தெரிகிறது. ஆனால் அசைய முடியவில்லை. அவரது முகம்மீது எதுவோ மோதியதுபோல் இருந்தது. முகத்தில்



டோடி

## இறுதிக் கட்டம்



விபத்தில் அப்பளமாய் நொறுங்கிய கார்.

இருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. உடலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன.

டயானா பாதி மயக்கத்தில் ஏதோ புலம்புகிறார்.

உலக மக்களது இதயம் கவர்ந்த அந்த இளவரசி கடைசி நேரத்தில் ஏதோ சொல்லத் துடிக்கிறார்.

அவர் கண்கள் எதையோ தேடுகின்றன.

வலியால் முனகியபடி அவர் தன் முகத்தை திருப்பி எதையோ அல்லது எவரையோ தேடுகிறாரே?

டோடி... அவரது அன்புக்குரிய காதலரைத்தான் டயானா தேடியிருக்க வேண்டும். அவரைத்தான் அவர் உதடுகள் அழைத்திருக்க வேண்டும்.

ஆனால் றீஸ்-ஜோன்சுக்கு டயானா என்ன கூறினார் என்பது செவியில் விழவில்லை.

டயானா மட்டுமல்ல தானும் சாகப்போவதாக றீஸ்-ஜோன்ஸ் எண்ணினார்.

முகத்தில் இருந்தும் உடலில் இருந்தும் இரத்தம் விரய மானதால் அவருக்கும் கண்கள் இருண்டு தலை சுற்றியது.

அதே நேரம் படப்பிடிப்பாளர்கள் விபத்துக்குள்ளான காரைச் சூழ்ந்து கொண்டனர்.

சிலர் காருக்குள் எட்டிப் பார்த்தனர். அந்த நேரத்தில் தமது கமராவினால் விபத்துக்குள்ளான காரை சிலர் படம்பிடித்தனர்.

டயானா அப்போதும் பாதிக் கண்கள் திறந்த நிலையில்தான் இருந்தார். உடம்பெல்லாம் இரத்தத்தால் நனைந்திருந்தது.

ஒரு ரோஜாவாக டயானாவை வர்ணிப்பார்கள். அந்த ரோஜா இரத்தத்தில் ஊறிக்கொண்டிருந்தது.

மெல்ல மெல்ல கண்களை மூடிக்கொண்டிருந்தது.

'மக்களின் இளவரசி' தன் இறுதிப் பயணத்துக்கான பாதையில் நுழைந்து கொண்டிருந்தார்.

அப்போது சில சந்தேகத்துக்கிடமான நடவடிக்கைகள் நடந்தன. அவை டயானா மரணத்தில் சந்தேகங்களை எழுப்புகின்றன.

**(அடுத்த வாரமும் வரும்)**


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**திகனரஜவெல்ல வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**செல்வி. பிரகாஷினி,**
"ராணி மகால்", திகனைரஜவெல்ல.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்

### வைர மோதிரப் போட்டி

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.


அம்மன்-முரசு கி வைர மோதிரப் போட்டி




படிப்பகம்

www.padippakam.com





சக்தி தனக்கே கருவியாக்கு-சிவ
சக்திதருந் திறனதி வேறும்-மெய்யைச்
சக்தி தனக்கே கருவியாக்கு-அது
சாதலற்ற வழியினைத் தேறும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## தாத்தாவும் பேரனும்



ஓர் ஊரில் ஒரு தாத்தாவும் பேரனும் இருந்தனர். அவர்களுக்குச் சொந்தமான கழுதையை விற்பதற்காக வெகுதூரத்தில் இருக்கும் சந்தைக்குப் புறப்பட்டனர்.

தாத்தாவும் பேரனும் கழுதையை நடத்திக்கொண்டு சென்றனர். இதைக் கண்ட ஒருவன் அவர்களைப் பார்த்து,

"கழுதை இருப்பதே பொதி சுமக்கத் தானே? இருவரும் நடந்து போகிறீர்களே. கழுதை மேல் ஏறிப்போகலாமே!" என்று சொன்னான்.

அதைக் கேட்ட தாத்தாவும் பேரனும் கழுதைமேல் உட்கார்ந்து சென்றனர்.

கொஞ்ச தூரம் இவர்கள் சென்றதும் இன்னொருவன் எதிர்ப்பட்டான். அவன் அவர்களைப் பார்த்து,

"ஐயா! பாவம் இந்தக் கழுதை. உங்கள் இருவரது பாரத்தையும் தாங்குமா? அவன்தான் சிறுவன். நடக்க முடியாது. நீங்கள் பெரியவர்தானே! இறங்கி நடந்து போகலாமே?" என்றான்.

உடனே தாத்தா இறங்கிக்கொண்டார். பேரன் மட்டும் கழுதைமீது இருந்தான்.

இன்னும் சிறிது தூரம் சென்றதும், வழிப்போக்கன் ஒருவன் எதிர்ப்பட்டான். அவன் அவர்களைப் பார்த்து,

"என்ன தம்பி! வயதான உன் தாத்தாவை நடக்க வைத்துவிட்டு, நீ சுகமாக கழுதைமேல் சவாரி செய்து வருகிறாயே! ஒடித்திரிய வேண்டிய வயதில் இப்படிச் சோம்பேறித்தனமாக இருக்கக் கூடாது!" என்று சொன்னான்.

உடனே பேரனும் கழுதையில் இருந்து இறங்கி தாத்தாவுடன் நடந்து சென்றான்.

அப்போது வழியில் ஒரு வியாபாரி எதிர்ப்பட்டார். அவர் தாத்தாவும் பேரனும் நடந்து செல்வதைப் பார்த்து,

"ஐயா! கழுதை மேல் ஒரு பொதிகூட இல்லை. நீங்கள் இருவரும் அதில் ஏறி வந்திருக்கலாம் அல்லவா?" என்று சொன்னார்.

ஆனால் தாத்தா ஒன்றும் பேசாமல் பேரனைக் கூட்டிக்கொண்டு நடந்தார். அப்போது பேரன்,

"ஏன் தாத்தா இப்போ அவர் சொன்ன மாதிரி கழுதை மீது ஏறிச்செல்லவில்லை?" என்று கேட்டான்.

"மனிதர்கள் என்று இருந்தால் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்வார்கள். அவர்கள் எல்லாரும் சொல்வதை நாம் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. நமக்கு எது சரி என்று தெரிகிறதோ அதைத்தான் செய்யவேண்டும்.

அதை நான் இப்போதுதான் விளங்கிக் கொண்டேன். அதனால் இனி இப்படியே சந்தைக்குப் போகலாம்!" என்று சொன்னார் தாத்தா.

## அதிசயம் - ஆனால் உண்மை!



← பாதுஷா ஔரங்கசீப்பின் அரசவைப் புலவரான 'தஜ்ஹிர்' என்ற அராபியக் கவிஞர்தான் வரலாற்றிலேயே மிக அதிக பரிசு பெற்ற கவிஞர். இவர் ஔரங்கசீப்பின் கஜானாவில் இருந்து வருடத்திற்கு 2 பிடி வைரங்களைத் தொடர்ந்து 10 ஆண்டுகள் பெற்று வந்தார்.



↑ ஃபிரான்ஸ் நாட்டில் கொள்ளைக்கூட்டத்தில், இருவர் மேடை ஒன்றின் மீது ஏறிச் சண்டை போட்டனர். இவர்களின் சண்டையை நிறுத்த அந்த மேடையைத் தனது தோள்களில் தூக்கிக் கொண்டு 20 அடி தூரம் நடந்தான் அந்தக் கொள்ளைக் கூட்டத் தலைவன்.



← பட்டர்ஃபிளை பிளென்னி என்னும் மீன் எப்போதும் வெறுமையாக இருக்கும் சங்குகளில்தான் முட்டையிடும்.

## மிகப் பெரிய மைதானம்

உலகிலேயே, பொதுமக்கள் கூடும் மிகப் பெரிய மைதானம் சீனாவின் தலைநகரான பெய்ஜிங்கில் உள்ள டைனன்மன் சதுக்கம் என்ற மைதானம்தான். இங்கு ஒரே சமயத்தில் 10 இலட்சம் மக்கள் கலந்து கொள்ள முடியும்.

இந்தச் சதுக்கத்திற்கு ஒரு சரித்திரப் பின்னணியும் உண்டு. 1849ம் ஆண்டு அக்டோபர் 1ம் திகதி சீனத் தலைவர் மா-சே-துங் மக்கள் குடியரசுக் கட்சியை இந்த மைதானத்தில் தான் ஆரம்பித்தார்.

1989ல் நடந்த உள்நாட்டு புரட்சியின் போது நூற்றுக்கணக்கானவர்கள் இராணுவத்தினரால் அடித்து நொறுக்கப்பட்டனர். இதனால் ஏராளமானவர்கள் இறந்தும் போனார்கள்.



சீன அரசு சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் இன்றும் இங்குதான் நடைபெற்று வருகின்றன.

## மழைநீர் சுத்தமானதா?

ஆகாயத்தில் இருந்து விழுகின்ற காரணத்தால் மழைத்துளிகள் வடிவிலான




மழைநீர் மிகச் சுத்தகமானவை என்று பலர் கருதுவதுண்டு. இது தவறான கருத்து.

மழைத்துளிகள் காற்று மண்டலத்தைத் தாண்டித்தான் தரையை நோக்கி இறங்குகின்றன. காற்றில் அசுத்தப் பொருட்களும் நச்சுக் கிருமிகளும் இருக்கின்றன. அவை மழைத்துளிகளுடன் கலக்க நிறைய வாய்ப்புள்ளது.

தொழிற்சாலை மற்றும் வாகனங்களில் இருந்து வெளியாகும் புகை காற்றில் தான் கலக்கின்றது. சில தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் ஒரு வகை வாயுக்கள் அமிலத்தன்மை கொண்ட மழை பெய்வதற்குக் காரணமாகின்றது.

இவற்றைத் தவிர காற்றின் மூலம் பரவும் நோய்களின் நச்சுக் கிருமிகளும் காற்றில் உள்ளன. எனவே மழைநீர் தூய்மையானது என்று கூறமுடியாது. ஆள் நடமாட்டமே இல்லாத மலைப்பகுதிகளில் விழும் மழைநீர் ஓரளவுக்குத் தூய்மையானதாக இருக்கும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **11.07.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **303**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 301

**பரிசுக்குரியவர்:**
ஆர். கமலினி,
தமிழ் மஹா வித்தியாலயம், வெலிமடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எச்.எம். ஆபித், அல்/ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | ச. குணதீபன், நு/ நட்போர்ன் த.வி., டயகம. |
| ச. ஜனார்த்தன், விபுலானந்த மகா வித்தியாலயம், வவுனியா. | கே. ஸ்ஃப்றின் மொஹமட், மஹாவெல முல்ல முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. |
| சிவநேசன் பிரஷாந்தன், சம்பூர் மகாவித்தியாலயம், மூதூர், திருகோணமலை. | க. அனூஷா சிவப்பிரியா, த.ம.மஹா வித்தியாலயம், பண்டாரவளை. |
| நவரட்ணம் சிவபாலன், பலாங்கொட தமிழ் வித்தியாலயம், பலாங்கொட. | அப்துல் சமது ரஸீனா, அல் ஹிரா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், கிண்ணியா-03. |
| எம். சாஜிதா, அல்-ஹிக்மா முஸ்லிம் ம.வி., நுரைச்சோலை. | எம். தமயந்தி, மமா/அம்ப/சென்ஜோசப் த.ம.வி.,மஸ்கெலியா. |

## 'இல்லாத' செய்திகள்

- பறவைகளுக்குப் பற்கள் இல்லை.
- காண்டாமிருகத்தின் கொம்பில் எலும்புகள் இல்லை.
- குயில்கள் குளிர்காலத்தில் கூவுவது இல்லை.
- சுண்டெலிக்கு வியர்ப்பது இல்லை.
- பல்லிகள் தண்ணீர் அருந்துவது இல்லை.
- கங்காரு மற்ற விலங்குகளைப்போல் நான்கு கால்களில் நிற்பது இல்லை.
- கழுகு எதையும் கொன்று தின்பது இல்லை.
- எலிகள் இல்லாத நாடே உலகில் இல்லை.
- ஒட்டகத்திற்கு பித்தப்பை இல்லை.
- குளிர்காலத்தில் அண்டார்டிகாவில் ஒரு உயிரினமும் இருப்பது இல்லை.

## 'நோய்' செய்திகள்

- நெதர்லாந்து நாட்டில் அதிக அளவிலான மக்கள் புற்றுநோயால் மரணமடைகின்றனர்.
- ஆர்மீனியா நாட்டில் பெரும்பாலானோர் மாரடைப்பால் பலியாகின்றனர்.
- கௌதமாலா நாட்டில் அதிகமானோர் தொற்று நோய்களால் மரணமாகின்றனர்.
- குவைத் நாட்டில் அதிகளவிலான மக்கள் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர்.
- உக்ரெய்ன் நாட்டவர்களைத்தான் அதிக அளவில் வாதநோய் தாக்குகின்றது.
- ரஷ்ய நாட்டவர்கள்தான் அதிகம் பேர் விஷத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

## 'தெரியாத' செய்திகள்

- படுத்து உறங்கத் தெரியாத மிருகம் குதிரை.
- கீழ்த்தாடையை அசைக்கத் தெரியாத விலங்கு முதலை.
- நிற வேறுபாடு தெரியாத மிருகம் நாய்.
- குதித்தோடத் தெரியாத மிருகம் யானை.
- பறக்கத் தெரியாத பறவை பெங்குவின்.
- எழுதப் படிக்கத் தெரியாத ஸ்கொட்லாந்து கவிஞர் டங்கன் மார்க்.
- பார்வை தெரியாத புகழ்பெற்ற கவிஞர் மில்டன்.
- ஆங்கிலம் தெரியாத இங்கிலாந்து மன்னர் முதலாவது ஜோர்ஜ்.

## முற்கால அளவு முறைகள்

→ 'ஃபாதம்' என்ற ஆங்கில வார்த்தையின் அர்த்தம் இருகைகளால் தழுவுதலைக் குறிக்கும்.



இதேபோன்று இருகைகளையும் விரித்து மார்போடு சேர்த்து அளந்தால் உத்தேசமாக 6 அடி என்று கணக்கிட்டனர். இதனால் 6 அடி என்பது ஒரு ஃபாதம் என்று முற்காலத்தில் கணக்கிடப்பட்டது.



← 'ஃபெர்லாங்' என்ற வார்த்தை வயல்களின் உழவுக்காலைக் குறிப்பிடப் பயன் படுத்தப்படுகின்றது. ஒரு ஜோடி எருதுகள் ஒருநாளில் உழக்கூடிய தூரத்தை ஒரு ஃபெர்லாங் என்று முற்காலத்தில் கணக்கிட்டனர்.

## ஏன் தெரியுமா?

கடுங்குளிரின்போது உடலில் நடுக்கம் ஏற்படும். இது ஏன் ஏற்படுகின்றது என்று தெரியுமா?

கடுமையான குளிரின்போது உடலின் வெப்பநிலை குறைந்துவிடும். நமது உடல் சீராக இயங்குவதற்கு உடல் வெப்பம் ஒரே அளவில் இருக்க வேண்டும். இந்த உடல் நடுக்கம் உடலில் உள்ள தசைகளின் அனிச்சைச் செயலால் ஏற்படுகின்றது.



தசைகள் துரிதமாக இயங்கும்போது நடுக்கம் ஏற்படாது. தசைகள் துரிதமாக இயங்க உடலில் அதிகமான உணவுப் பொருள் எரிக்கப்பட வேண்டும். இதனால் உடல் வெப்பம் அதிகரித்து, நடுக்கம் நின்று விடுகின்றது.

கடுங்குளிரின்போது உடற்பயிற்சி செய்தால் குளிரின் கடுமை தெரியாது.



படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை**

பாக்கியத்தின் மகள்
வர்ணாவின் நாய் பிங்கிக்கு
'டிஸ்டெம்பர்' எனப்படும்
கொடிய நோய் வருகிறது.
அதனை காப்பாற்றவே முடியாது
என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர்.
ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது.
இதேவேளை, சொர்ணம், நீலமேகம்
தம்பதியின்
மகள் பூவிழி கொலையாகிறாள்.
போலீஸ் விசாரிக்கிறது.

**இனி...**

பிங்கியின் இரத்தம் ஊதா நிறத்தில் இருப்பதைப் பார்த்ததும் டாக்டர்கள் ரத்னவேலும், ஈஸ்வரும் திகைப்படித்த முகங்களோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். வர்ணாவும் தன் கண்களை வியப்பில் விரித்திருந்தாள்.

"என்ன டாக்டர்... பிங்கிக்கு இரத்தம் இந்த நிறத்தில் இருக்கு...?"

ரத்னவேல் ஸிரிஞ்சில் நிரம்பியிருந்த ஊதாநிற இரத்தத்தை உயர்த்திப் பிடித்துப் பார்த்தார். பின் ஒரு பெருமூச்சோடு தோள்களைக் குலுக்கிக்கொண்டு வர்ணாவிடம் திரும்பினார். "உன்னோட நாய் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுமே விசித்திரமாத்தான் இருக்கு டிஸ்டெம்பர் நோய் கண்ட எந்த நாயும் உயிர் பிழைச்சதே கிடையாது. ஆனா இந்த நாய் உயிர் பிழைச்சதோடு மட்டுமல்லாமல், இவ்வளவு ஆக்டிவ்வா வேற இருக்கு...? இந்த விஷயத்தையே தூக்கிச் சாப்பிடற மாதிரி இப்போ ஊதா நிற இரத்தம்..."

"டாக்டர் நேத்து ராத்திரி பிங்கிக்கு வலிப்பு வந்த போது அதனோட வாயிலிருந்து வந்த இரத்தம் சிவப்பாத்தான் இருந்தது. இப்படி ஊதா நிறமாக இல்லை..."

டாக்டர் ஈஸ்வர் சொன்னார். "ரத்னவேல்! இந்த ஊதா நிற பிளட்டை டெஸ்ட் பண்ணிப் பார்த்துடுங்களேன். டெஸ்ட்ல ஏதாவது அப்நார்மல்டி தெரியலாம்."

டாக்டர் ரத்னவேல் தலையசைத்துவிட்டு ஊதா இரத்தம் நிரம்பிய ஸிரிஞ்சை எடுத்துக்கொண்டு உள்ளே போனார். ஈஸ்வர் பின் தொடர்ந்தார்.

● ● ●

இன்ஸ்பெக்டர் பலராமன் ராஜா அண்ணாமலை புரத்துக்குள் தன் பைக்கை நுழைத்து, அந்த முற்பகல் வேளையில் சம்பந்தம் தெருவைக் கண்டுபிடித்து, 32ஞ. எண்ணிட்ட காம்பௌண்ட் கேட்டுக்கு முன்பாய் நிறுத்தி கீழே இறங்கினார்.

போர்டிகோ தூணுக்கு கட்டிப் போடப்பட்டிருந்த அல்சேஷன் குரைத்தது. அந்தக் குரைப்பை லட்சியம் செய்யாமல் பலராமன் மெதுவாய் நடந்து போய் காம்பௌண்ட் கேட்மேல் கையை வைத்தார். நாயின் குரைப்பு அதிகமாக போர்டிகோவில் ஒரு அழகான இளம் பெண் உதித்தாள். கறுப்பு நிற மேக்ஸியில் சூரிய காந்திப் பூக்கள் சிரித்தன. தலையை நேர்த்தியாகச் சீவி சின்னதாய் ஒரு கொண்டை போட்டிருந்தாள். நெற்றியில் ஸ்நேக் ஸ்டிக்கர். போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும் மைதீட்டிய கண்களில் லேசாய் ஒரு கலக்கம். குரைக்கிற அல்சேஷனை, "சீஸர்...கீப் கொய்ட்" என்று அதட்டிவிட்டு கேட்டை நோக்கிப் போனாள்.

"எஸ்..."

பலராமன் கேட்டார்.

"சீதாராம் வீடு இதுதானே..?"

"ஆமா..?"

"அவர் இருக்காரா...?"

"ஆபீஸ் போயிருக்கார். என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்...?"

"முழு-2000, மாருதி ஜென் உங்க வீட்டு கார் தானே...?"

"ஆமா..."

"அது சம்பந்தமா ஒரு என்கொய்ரி..."

"ப்ளீஸ்...கம்..."

கேட்டைத் திறந்துவிட்டு அவ உள்ளே போக பலர தொடர்ந்தார். படிச போது கேட்டார்.

"சீதாராம் . என்ன உறவு?"

"அப்பா..."

"உங்க நேம்..."

"வத்சலா..."

வரவேற்பறைக்குள் நுழைந்தார்கள். அந்த வத்சலா சோபாவைக் காட்டிவிட்டு எதிரே இருந்த கூடை நாற்காலிக்குச் சாய்ந்தாள்.

"சொல்லுங்க இன்ஸ்பெக்டர்... எங்க காரைப் பத்தி என்ன என்கொய்ரி...?"

"அந்த விஷயத்துக்கு வர்றதுக்கு முந்தி உங்ககிட்ட சில கேள்விகள்..."

"ப்ளீஸ்..."

"வீட்ல இப்ப வேற யார் யாரெல்லாம் இருக்காங்க...?"

"இப்போ நான் மட்டும்தான். வேலைக்காரி கடைக்குப் போயிருக்கா. அப்பா ஆபீஸுக்குப் போயிருக்கார். அண்ணன் ஒரு வேலை விஷயமா இண்டர்வியூ அட்டெண்ட் பண்ணப் போயிருக்கார்..."

"அம்மா..?"

"ஷி...ஈஸ்...நோ...மோர்..."

"ஸாரி..." என்று சொல்லி ஒரு விநாடி அந்தக் கேள்விக்காக வருந்தியவர் சில விநாடிகள் மௌனித்து விட்டுக் கேட்டார். "உங்க ப்ரதர் ஒரு வேலை விஷயமா இண்டர்வியூ அட்டெண்ட் பண்ணப் போயிருக்கிறதா சொன்னீங்களே?"

"ஆமா..."

"அவர் பேர் என்ன...?"

"விஷால்..."

"விஷால்...."

"எஸ்..."

"பிரதாப்ங்கிற பேர்ல உங்களுக்கு யாரையாவது தெரியுமா...?"

"தெரியாத..."



# கையில் சிக்கிய மின்னல்

10

"உங்க பிரதர் விஷாலுக்கு அந்த பேர்ல யாராவது ஃப்ரண்ட்ஸ் இருக்கலாமே..."

"இதை விஷால் கிட்டத்தான் கேட்கணும்..."

"சரி... பூவிழிங்கிற பேர்ல எந்தப் பெண்ணையாவது உங்களுக்குத் தெரியுமா...?"

"ஸாரி... இன்ஸ்பெக்டர்... நீங்க கேட்கிற கேள்வியெல்லாம் புதுசா இருக்கு...! யார் இந்த பிரதாப், பூவிழி...? இவங்களுக்கும் எங்க காருக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இருக்கப்போகத்தானே ஆர்.டி.ஓ. ஆபீஸுக்குப் போய் கார் நெம்பரைச் சொல்லி உங்க அட்ரஸை வாங்கிட்டு வந்திருக்கேன்..."

வத்சலாவின் பிறை நெற்றி பல சுருக்கங்களுக்கு உட்பட்டது.

"ஆர்.டி.ஓ. ஆபீஸுக்குப் போய் எங்க கார் நெம்பர் சொல்லி அட்ரஸ் கேட்டு வாங்கற அளவுக்கு என்ன நடந்தது இன்ஸ்பெக்டர்...?"

பலராமன் குரலைத் தாழ்த்திக்கொண்டு மெல்லிய குரலில் சொன்னார்:

"கன்ஸல்டன்ஸி க்யூப் என்கிற கம்பெனியில் வேலை பார்க்கிற பூவிழி என்கிற பெண் மர்மமான முறையில் நேற்றுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொலை சம்பந்தமாய் விசாரணை மேற் கொண்டபோது பூவிழியின் அப்பா ஒரு தகவலைச் சொன்னார். அதாவது போன மாதத்தில் ஒருநாள் பூவிழியும்,

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

அவளுடைய அப்பாவும் சில பர்னிச்சர் சாமான்களை வாங்கறதுக்காக பஜாருக்குப் போனபோது அவங்க பயணம் செய்த ஆட்டோவை முழு 2000 ரிஜிஸ்ட்ரேஷன் எண் கொண்ட மாருதி ஜென் ஃபாலோ பண்ணியிருக்கு. அந்த காரை ஓட்டிப் போனது ஒரு இளைஞன்."

"காரை ஓட்டியது இளைஞனா...?"

"எஸ்...! அதை பூவிழியோட அப்பா பார்த்திருக்கார்...!"

"மாருதி ஜென்னா... இல்லை மாருதி தௌஸண்டா?"

"ஜென்னுன்னுதான் அவர் சொன்னார். உங்க ப்ரதர் விஷால் காரை எடுத்துக்கிட்டு வெளியே போறது உண்டா...?"

"உண்டு..."

"அப்படின்னா அன்னிக்கு பூவிழியை ஃபாலோ பண்ணினது உங்க ப்ரதராக இருக்கலாமோ...?"

"நோ... இன்ஸ்பெக்டர்... சர்ட்டன்லி நாட்! என்னோட ப்ரதர் விஷால் அப்படிப்பட்டவர் கிடையாது. ஒரு பொண்ணை ஃபாலோ பண்ணிட்டு போற அளவுக்கு அவர் ஒண்ணும் லோபர் கிடையாது."

பலராமன் புன்னகைத்தார். "உங்க ப்ரதரைப் பற்றி உங்களுக்கு அப்படி ஒரு உயர்ந்த எண்ணம் இருக்கலாம். பட் வீட்டுக்கு வெளியே அவரோட ஆக்டிவிடிஸ் எப்படி யிருக்கும்னு உங்களுக்குத் தெரியாதே..."

"இன்ஸ்பெக்டர்.. அயாம் ஷ்யூர் அபௌட் இட்...! விஷால் நீங்க சொல்ற பூவிழிக்குப் பின்னாடி போயிருக்க மாட்டார். ஏன்னா அவர் ஏற்கனவே ஒரு பொண்ணை விரும்பிட்டிருக்கார். அந்தப் பெண் வேற யாரும் கிடையாது. எங்க அத்தை பெண்தான். அவமேலதான் அவர் உயிரையே வெச்சிட்டிருக்கார். விஷால் கண்ட கண்ட பெண்களுக்குப் பின்னால் சுத்தற ரோமியோ கிடையாது..."

"அத்தை பொண்ணோட பேர் என்ன?"

"மைதிலி..."

"இதே ஊரா...?"

"இல்லை... கோயமுத்தூர்..." வத்சலா சொல்லிக் கொண்டிருக்கும்போதே உள்ளே டெலிஃபோன் அடித்தது, "எக்ஸ்க்யூஸ்மி..." வத்சலா சொல்லி உள்ளே எழுந்து போனாள். ஹாலி சுவரோடு டீபாயில் சம்மணம் போட்டு உட்கார்ந்து கத்திக்கொண்டிருந்த டெலிஃபோனை நோக்கிப்போய் ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"வத்சலா..." மறுமுனையில் விஷாலின் குரலைக் கேட்டதும் மலர்ந்தாள்.

"அண்ணா..."

"இண்டர்வியூவில் பின்னிட்டேன். அப்பாய்ன்ட்மெண்ட் ஆர்டரை உடனே டைப் பண்ணிக் கையில் கொடுத்துட்டாங்க."

"அப்படியா?"

"என்ன அப்படியான்னு சர்வ சாதாரணமா கேட்கிறே? வேலை கிடைச்சிருக்கிற கம்பெனி எவ்வளவு பெரிய கம்பெனி தெரியுமா...? ஸ்டார்ட்டிங்கே ஃபைவ் டிஜிட்ஸ் சாலரி..."

"அ...அண்ணா..."

"என்ன..! குரலே ஒரு மாதிரியா இருக்கு. வத்சலா வாட் ஈஸ் ராங்க் வித் யூ...?"

"அண்ணா! உனக்கு பூவிழிங்கிற பேர்ல எந்தப் பொண்ணையாவது தெரியுமா...?"

"பூவிழி..?"

"ம்..."

"தெரியும்..."

(தொடர்ந்து வரும்)

---

**இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருக்கிறது அஜ்மீர். அங்கு இருந்து ஆட்சி புரிந்த மகாராஜாக்களது அந்தப்புர கதைகள் சுவாரசியமானவை. அவைதான் இந்த வாரம் முதல் இங்கு அரங்கேறுகின்றன.**



# அஜ்மீர் அரண்மனை இரகசியங்கள்

இப்போதெல்லாம் அந்தப்புரம் என்று எந்தப்புறமும் இல்லை. மகாராஜாக்கள் இந்தியாவை ஆண்டு வந்த காலத்தில் ஒரொரு ராஜாவுக்கும் நிறைய ராணிகள் இருந்தனர். பட்டத்து ராணி என்ற அந்தஸ்து ஒரே ஒரு ராணிக்குத்தான் உண்டு. மற்றவர்களெல்லாரும் ராஜாவின் இதய ராணிகள்.

எல்லா ராணிகளையும் மகாராஜா ஒரு மாதிரி நடத்த இயலாது. எந்த ராணியாவது போர்க்கொடி உயர்த்தினால் மகாராஜா அந்த ராணிக்குச் சீட்டுக் கிழித்து விடுவார். அதனால் இப்போதைய அரசியலில் 'தலைவருக்கு அடி பணிந்து போவதே தங்கள் எதிர்காலத் துக்கு நல்லது' என்று பலர் சாமர்த்தியமாக இருப்பது போல அந்தக் காலத்து ராணிகள் பலர் உள்ளுக்குள் பொருமிக்கொண்டு, மகாராஜாவுக் குத் தெரியாமல் தங்கள் அந்தரங்க வாழ்க்கையை அமைத்துக்கொண்டு உல்லாசமாக வாழ்ந்து வந்தனர்.

சில மகாராஜாக்கள் 'கண்டுக்காம' இருந்துவிடுவார்கள். எவ்வளவு பேருக்கு அவரால் தீனி போட முடியும்? சில ராஜாக்கள் 'வாழு, வாழவிடு' கொள்கையில் 'நானும் இஷ்டத்துக்கு அனுபவிக்கிறேன். நீயும் உன் இச்சைப்படி யாருடன் வேண்டுமானாலும் மகிழ்ச்சியோடு இரு. ஆனால் ராஜ குடும்பத்துக்கு அவப்பெயர் ஏற்படுத்தாத வண்ணம் உன் நடவடிக்கைகள் இருக்கட்டும்' என்று 'தண்ணி தெளித்து' விட்டு விடுவார்கள். ஆஜ்மீர் சமஸ்தான மகாராஜாக்களில் ஒருத்தரான சுபோதயசிங் சுவாரசியமான மனிதர்.



அவருக்கு ஏகப்பட்ட மனைவிகள், ஒருத்தர்தான் மகாராணி. அப்புறம் சில பேருக்கு ராணி அந்தஸ்து உண்டு.

மூவகையினரும் மகாராஜாவுக்கு ஒரே வகையான சுகம் கொடுப்பவர்களாயினும் மூன்று தாத்தினருக்கும் அவர் ஒரே அந்தஸ்து தரமாட்டார்.

மகாராணிக்கு தங்கத் தட்டில் சாப்பாடு. ராணிகளுக்கு வெள்ளித் தட்டில் உணவு. வைப்பாட்டிகளுக்கு ஈயம் பூசிய பித்தளைத் தாம்பாளங்கள். மகாராணியின் சாப்பாட்டு மெனுவில் தினமும் 75 வகை உணவு தினுசுகள் இடம்பெறும்.

சாதா ராணிகளுக்கு ஐம்பதும் வைப்பாட்டி வகையறாவுக்கு இருபத்தைந்து தினுசுகளும் இருக்கும்.

அதேபோல இருப்பிடமும், அரண்மனை, பங்களா, சின்ன வீடு என்று மாறுபடும்.

அவரவருக்கு வேலை செய்யச் சிப்பந்திகளும் மூவகை. மகாராணிக்கு ஐம்பது சிப்பந்திகள். ராணிக்கு முப்பது. வைப்பாட்டிகளுக்கு ஐந்து அல்லது பத்து.

மகாராஜா சுபோதய சிங்கிடம் ஒரு விசித் திர பழக்கம் இருந்தது. வயிறு முட்டக்குடித்து விட்டுத் திடீரென்று பிச்சைக்காரன் மாதிரி அழுக்கும் கிழிசலும் கந்தையுமான உடைகளை அணிந்து கொள்வார். காலில் அறுந்த பழைய செருப்பு. கையில் ஒரு தகர டப்பா.

அதைக் குலுக்கிக்கொண்டு அரண்மனை பூராவும் சுற்றி வருவார். அமைச்சர்கள், பிரபுக்கள், சேனைத் தலைவர்கள், ராணிகள், பணிப் பெண்கள் என்று எல்லாரிடமும் தகரக் குவளையைச் சத்தம் போட்டுக் குலுக்கி 'பிச்சை போடுங்க', 'பிச்சை போடுங்க' என்று நச்சரிப்பார். எல்லாரும் சில்லறை கட்டாயம் போட்டாக வேண்டும்.

மகாராஜா எந்த நிமிடத்தில் பிச்சைக்கார வேடத்தில் வருவாரோ என்பதற்காக, அரண்மனையி லுள்ள அனைவரும் எப்போதும் தயாராக சில்லறைக் காசுகள் தங்கள் இடுப்புக் கச்சையில் வைத்திருப்பார்கள்.

மகாராஜாவுக்கு இந்திய ராணிகள் சலித்துவிட்டது.

எந்த வெள்ளைக்காரியைப் பிடிக்கலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

ஊட்டியில் பிரமாத அழகியான ஒரு வெள்ளைக்காரப் பெண்மணியைப் பார்த்தார். அவள் மிக அற்புதமாகக் குதிரைச் சவாரி செய்வாள்.

மகாராஜாவும் குதிரைச் சவாரிக்குப் போகிற சாக்கில் அவளோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்தார். வைர மோதிரமோ, பட்டுடைகளோ, காசோ பணமோ எவற்றினாலும் அவளை அவரால் கவர முடியவில்லை.

அவளை நிதானமாக கவனித்து வந்தார். அவளுக்குச் சொந்தத்தில் விலை உயர்ந்த குதிரை வாங்கும் ஆசை இருப்பதைப் புரிந்து கொண்டார்.

அற்புதமான ஆறு குதிரைகளை அவளுக்கு இனாமாக வழங்கினார். எத்தனையோ இலட்சம் பெறுமான குதிரைகள்.

குதிரைகள் கிடைத்ததும் அவள் அவருக்குப் படிந்து விட்டாள். அவரது ஆசை நாயகியாக இருக்க உடன்பட்டாள். மகாராஜா ஊட்டிக்கு வருடத்தில் மூன்று மாசம் விஜயம் செய்வார். அப்போதெல்லாம் அவளுடன் ஆனந்தமான லூட்டிதான்.

மகாராஜா சுபோதயசிங்கின் அரண்மனை ஆஜ்மீரில் மகா அற்புதமாக விளங்கியது. முத்தும் பவளமும் பொன்னும் இழைத்து உருவாக்கப் பட்டிருந்தது.

ஆனால் ஒரே ஒரு குறை.

அவ்வளவு பெரிய அரண்மனையில் டாய்லெட் அறையே கிடையாது. காலையில் அரசர் தனது இயற்கைக் கடனை எங்கே கழிக்கிறார் என்பது தான் அரண்மனை இரகசியம்.

பக்கத்து ராஜ்யத்திலிருந்து அரண்மனைக்கு விஜயம் செய்த ஓர் அமைச்சருக்கு இந்த ரகசியத்தை எப்படியாவது தெரிந்கொண்டுவிட வேண்டும் என்ற ஆவல்.

அரண்மனை அதிகாரிகளிடம் நைஸாக விசாரித்துப் பார்த்தார்.

ஊஹும். 'இது அரண்மனை ரகசியம். சொல்வதற்கில்லை' என்று உறுதியாக மறுத்துவிட்டனர்.

ஆனால் அயல் ராஜ்ய மந்திரி கையூட்டு கொடுத்து ஒரு தளபதியிடம் உண்மையை வரவழைத்துவிட்டார்.

(இரகசியம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

## ஜெயகாந்தன்

**09**

தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.

**மு.கீ.சுருக்கம்**

அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கு இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை. அவனது சந்தேகங்களால் கோகிலா வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

இனி....



தனது உள்ளத்து வெறுமையை ஒரு பெருமூச்சாய் ஊதினான். தொண்டையை ஒரு முறை பலக்கச் செருமிக் கண்ணாடியிலிருந்து பார்வையை மாற்றினான்; அர்த்தமற்று ஒரு முறை சிரித்துக் கொண்டான்.

மீண்டும் அவனது கைகள் அந்தப் போட்டோ பிரேமை எடுத்தன. அதைப் பார்த்துக்கொண்டே இருக்கையில் ஏனோ அவனுக்குத் திடீரெனக் கோபம் வந்தது. பற்களை நறநறவென்று கடித்தான்.

அந்த இரண்டு படங்களும் அந்தப் பிரேமில் சேர்ந்திருக்க அவன் விரும்பவில்லை என்றால் சுலபமாக அதன் பின்புறம் உள்ள கிளிப்பை விலக்கி அதை எடுத்து எறிந்துவிட முடியும் என்பதைக்கூட மறந்து தனது பலத்தையெல்லாம் பிரயோகித்து அதை மேலும் கீழும் மறுக்கி அந்த இணைப்பை அறுத்து இரண்டாக்கினான். அப்போது அதிலிருந்த உலோகத் தகடு சுண்டு விரலுக்குக் கீழே ரத்தம் கசியக் கீறியதைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை.

இந்தக் குழப்பத்தில் கைநழுவிக் கீழே விழுந்த அந்தக் கடிதத்தைத் தேடிக் கட்டிலுக்கடியில் குனிந்து அதனைக் கண்டெடுத்தான். சன்னல் வழியே தெரியும் வெளிச்சத்திற்கு நேரே அந்தக் கவரை உயர்த்திப் பார்த்தான். கவரின் உள்ளே ஒரு சிறு கடிதம்-இரண்டாகவோ நாலாகவோ எட்டாகவோ மடிக்கப்பட்ட ஒரு காகிதத் துண்டு-இருப்பது ஒரு நிழல் போல் தெரிந்தது.

'நான் ஏன் இதைப் பிரித்துப் படிக்க வேண்டும். கோகிலா என்னை விட்டுப் போயே விட்டாள் என்கிற செய்தியை இந்தக் கடிதத்தின் மூலம்தானா நான் தெரிந்து கொள்ள வேண்டும். என்னை விட்டுப் போனவள் எங்கே போயிருக்கிறாள் என்று இது சொல்லுமோ? என்னை விட்டுப் போனவள் எங்கே போயிருந்தால்தான் எனக்கு என்ன?' என்று எண்ணியவாறு அந்தக் கடிதத்தின் உறையை மட்டும் வெறித்துப் பார்த்தான்.

"மிஸ்டர் அனந்தராமன்" என்று ஒருவரி மட்டுமே இருந்தது.

"மிஸ்டர் அனந்தராமன்"- ஒரு முறை துருவேறிக் கரகரக்கும் குரலில், வாய்விட்டுத் தனது பெயரைத்தானே ஒரு முறை உச்சரித்தவாறு அந்தக் கடிதத்தை வீசி எறிந்தான். அது எங்கேபோய் விழுந்தது என்று கூடத் திரும்பிப் பார்க்காமல் அதே வேகத்தில் சட்டையைக் கழட்டி ஸ்டாண்டின் மீது விட்டெறிந்தான்.

தனது இந்தக் கோபமும் பதைப்பும் அவள் தன்னைக் கைவிட்டுப் போனதனால் ஏற்பட்ட பாதிப்போ என்று அஞ்சி, இல்லை என்று தனக்குத் தானே நிரூபித்துக் கொள்வதற்காகத் தனது உணர்ச்சிகளை ஒரு சமநிலைக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஒரு பொய்யான மனோ நிலையை உருவகித்துக்கொண்டு, சீட்டியடித்தவாறே பின் கட்டுக்குப் போனான்.

போகும்போது, எந்தவிதமான சந்தோஷத்திற்காகவும் தான் சீட்டி அடிப்பதில்லையே என்பதை உணர்ந்து திடீரென்று நிறுத்திக் கொண்டான்....

சமையலறை ஷெல்பிலிருந்த பிளாஸ்கை எடுத்துத் திறந்து பார்த்தான். அது காலியாக இருந்தது. பிளாஸ்டிக் மூடியில் குழாயைத் திறந்து தண்ணீர் பிடித்துக் குடித்தான். கம்பி வலை போட்ட அலமாரியைத் திறந்து அதனுள் இருந்த பிஸ்கட் டின்னை எடுத்துக் கொண்டு மீண்டும் டிரெஸிங் டேபிள் இருந்த அறைக்கே திரும்பிவந்தான்.

பிஸ்கட் டின்னை அதன்மீது வைத்து, திடீரென அதை மறந்து விட்டுப் பக்கத்திலிருந்த ரேடியோவின் அருகில் மண்டியிட்டு உட்கார்ந்து ஏதோ ஒரு ஸ்டேஷனுக்காக வெகு நேரமாய் ரேடியோ முள்ளை அலையவிட்டு மெனக்கெட்டுக் கொண்டிருந்தான். சங்கீதத்திற்குப் பதிலாக இரைச்சலே மிகுந்ததால் எரிச்சலுற்று ரேடியோவை நிறுத்திவிட்டு எழுந்தான். என்ன செய்வதென்று தெரியாமல் கட்டிலின்மீது ஏறிச் சம்மணமிட்டு அமர்ந்துகொண்டு அந்தவீட்டை, அந்த அறையைச் சுற்றிச் சுற்றி அர்த்தமற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். பின்பு ஒரு முறை பெருமூச்செறிந்து கொண்டான். திடீரென்று புதிதாக ஞானம் பிறந்தது போன்று ஒரு சிரிப்பு: 'ஆ! கடைசியில் எல்லாம் இப்படி ஆகிவிட்டது!' என்று ஆங்கிலத்தில் முனகியவாறு இரு கைகளாலும் முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டான்.

ஏதோ நடந்தேறிவிட்ட இந்த விஷயத்தைப் பற்றி அவனுக்கு நஷ்டமோ வருத்தமோ இல்லாதது போலவும் இதிலுள்ள சந்தோஷத்தை மட்டுமே தான் அனுபவித்துக் கொண்டிருப்பதாகவும் நம்புவதற்கு அவன் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டான்.

'முடிந்துபோன வழக்குதான்-எனினும் இதை அமைதியாகவும் பற்றில்லாமலும் ஒருமுறை நான் பரிசீலனை செய்தாக வேண்டும். எனக்கு நானே பரிசீலனை செய்து கொள்ள வேண்டும்.' என்ற தீர்மானத்தோடு கட்டிலின் மேல் மல்லாந்து படுத்து கழுத்துக்குக் கீழே இரண்டுகைகளையும் கோர்த்தவாறு தன் பத்து வருஷ தாம்பத்ய வாழ்க்கையின் அனுபவங்களை, விழுந்து உறுத்திய முடிச்சுகளை,உரசி நைந்த பிசிறுகளைத் தொடர்பற்றும் முன்பின் கிரமமில்லாமலும் தனது உணர்ச்சிகளின் குழப்பத்தினூடே சிக்கறுத்துப் பார்க்க அவன் முனைந்தான்.

அதற்கு இடையூறாகச் சற்று முன் தான் விட்டெறிந்த அந்தக் கவரின் நினைவு அவனுக்கு வந்தது.

தன்னைப் போலவே இவ்விதமெல்லாம் யோசித்துக் குழம்பி ஒரு தீர்மானத்துக்கு வந்து அந்த முடிவைத்தானே அவளும் அதில் எழுதியிருப்பாள் என்று சிந்தனை வந்ததனாலேயே அந்தக் கடிதத்தைப்பற்றி அவன் நினைக்க நேர்ந்தது. எனினும் அந்தக் கடிதத்தை ஒரு பொருட்டாக்கி அதைத் தேடி எடுத்துப் பார்க்கும் அளவுக்கு இனியும் அவளை மதிக்க அவன் தயாராக இல்லை.

எனவே அந்தக் கடிதத்தில் அவள் என்னதான் எழுதியிருப்பாள் என்று ஊகிக்கத் தலைப்பட்டான்.

'தான் என்ன முடிவோடு இங்கிருந்து வெளியேறி இருக்கிறாள் என்பது பற்றி விரிவாக எதையேனும் அந்தக் கடிதத்தில் அவள் எழுதியிருக்கலாம்...

உங்களுக்குத்தான் என்னை உதறத் தைரியமில்லை; அந்தத் தைரியம் எனக்காவது வந்தது பற்றி நீங்கள் சந்தோஷப் படுங்கள்' என்று அவளுக்கே உரிய சமத்காரத்தோடு பழியை என் தலையில் சுமத்தி இருக்கலாம்..

'ஒரு வேளை இப்படியெல்லாம் எதுவுமே இல்லாமல் 'அதோ அந்த பீரோவில் அதை வைத்திருக்கிறேன்; இதோ இந்தப் பெட்டியில் இது இருக்கிறது' என்று இந்தப் பத்து வருஷ காலமாக அவள்மீது நான் ஏற்றி வைத்த விரும்பத்தகாத சுமைகளை, பொறுப்புக்களை ஒப்படைக்கும் வெறும் பட்டியலாகவும் அந்தக் கடிதம் இருக்கலாம்.

'இல்லாவிட்டால் எனது உணர்ச்சிகளைச் சிலுப்பிவிட்டு எரிச்சலும் வேதனையும் தரத்தக்க விஷயம் எதையாவது பற்றி-ஒரு வேளை 'அவனை'ப் பற்றிய, தனது எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய கனவின் விஸ்தாரமாக அந்தக் கடிதம் விவஸ்தைகெட்டு விவரிப்பதாக இருந்தால்...

அவன் எது எது பற்றியெல்லாம் யோசித்தாலும் அந்தக் கடிதம் அவன் கடைசியாக ஊகித்தானே அது பற்றியதாகத் தான் இருக்குமென்று ஒரு அரை நம்பிக்கை கொண்டான்.

தனது குடும்ப வாழ்க்கை என்னென்ன விதமாய்க் கோலம் காட்டிக் கடைசியில் இப்படிக் குடை சாய்ந்து விட்டது என்று எண்ணியபோது அவனது இரண்டு கண்களும் குளமாகிப் படுத்திருந்த நிலையில் இரண்டு காதோரங்களிலும் கண்ணீர் வழிந்தது. தாங்க முடியாத வேதனை உணர்ச்சியில் ஒரு முறை விம்மிக் குலுங்கிப் படுக்கையில் கவிழ்ந்து தலையணையின் மீது நெற்றியை இடமும் வலமும் தேய்த்தவாறு அவன் அழலானான். தலையணை நனைய நனைய அழும்போது அவனுக்கு ஒரு சுகம் இருந்தது. அந்தப் பத்து வருஷத் தாம்பத்ய வாழ்க்கையில் கிட்டாத சுகம் இருந்தது. இப்போது தான் அழுவது அவளுக்காகவோ அவளது பிரிவுக்காகவோ அல்ல என்ற நம்பிக்கையில் அவன் தனக்காகவே சுதந்திரமாக அழுதான்.

வீணாகிப் போன தனது வாழ்க்கையின் மிக உன்னதமான பத்து வருஷங்களுக்காக அவன் அழுதான். அந்தப் பாழுக்காக, அந்தப் பத்து வருஷப் பொய்மைக்காகத்தான் அவன் அழுதான். அழுது கொண்டே அவன் தூங்கிப்போனான்.

திடீரென அவன் கண் விழித்தபோது அறை முழுதும் இருண்டு கிடந்தது. மணி என்ன இருக்கும் என்று எண்ணியபோது சுவர்க் கடிகாரம் ஏழு முறை அடித்தது. அவன் எழுந்து விளக்கைப் பொருத்தினான். அவனுக்கு அகோரமாய்ப் பசித்தது. அந்தப் பசியைத் தாங்கிக் கொண்டு பட்டினியாகப் படுத்து விடலாமா? வெளியில் போய் ஏதாவது சாப்பிட்டுவிட்டு வரலாமா என்ற சாதாரண விஷயம் அவனைப் பெரும் பிரச்சனைக்கு ஆளாக்கிக் குழப்பிற்று.

(கோகிலா.... தொடரும்)

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். **18**

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

-கண்ணதாசன்-

ஓடிப்போன பெண்ணை, பெற்றெடுத்த தாய்கூட, இறந்து விட்ட பெண்ணாகவே நினைப்பாள்.

'காதல்' என்ற வார்த்தையே கிராமத்துக்குத் தெரியாது.

தெருக் கூத்துக்களிலேகூட காதல் காட்சி, இலக்கிய நாகரிகத்தோடுதான் வரும்.

தப்பான முறையில் ஜெயிலுக்குப் போய் வந்தவளைச் சமூகத்தில் சேர்க்க மாட்டார்கள்.

'கள்ளத் தொடர்பு' உடைய பெண்களோடு யாரும் முகம் கொடுத்துப் பேச மாட்டார்கள்.

ஏன்? ஐந்து வயதுக்குமேல், ஒரு பெண் குழந்தை, தகப்பன் மடியில்கூட உட்காரச் சம்மதிக்காது.

-பழமை; அது தெய்வீகமானது, புனிதமானது; குடும்பத்தைக் கோவிலாக்கியது; தேசத்தைச் சொர்க்கமாக்கியது.

என்றைக்கு அந்தப் பழமையிலிருந்து நாடு விடுதலைபெறத் தொடங்கியதோ, அன்றைக்கே அது ஒரு நரகத்துக்கு அடிக்கல் நாட்டிவிட்டது.

'எங்கேயும் வாழலாம், எப்படியும் வாழலாம்' என்ற எண்ணம் நல்ல குடும்பத்துப் பெண்களுக்கேகூட ஏற்பட்டுவிட்டது.

'கல்வி பெண்ணைக் கெடுத்து விட்டது' என்று நான் கூறமாட்டேன்; கற்று விட்ட பெண் பழகுகிற சூழ்நிலையே அவளைப் பாழாக்கிவிட்டது.

நிர்வாணப் படங்கள் நிறைந்த ஆங்கிலப் பத்திரிகைகள், முத்தமிடும் படக் காட்சிகள், சினிமாவில் காதலனோடு 'டூயட்' பாடும் கதாநாயகி, அவளோடு உருண்டு புரளும் கதாநாயகன்-காம ரசனை என்னும் கொடிய நஞ்சு மெது மெதுவாக உடம்பில் ஏறிப் பல பெண்களை விஷக் கன்னிகளாக ஆக்கி விட்டது.

சுவடு தெரியாமல் தலைகீழாக நடக்கும் நாகரிகம் கட்டுப்பாட்டை வேரறுத்துவிட்டது.

ஒருவன் உண்மையில் இந்த தேசத்தின் நலனை நாடுபவனாக இருந்தால், அவன் பழமைக்காகவே ஏங்க வேண்டும்.

போலித்தனமான புதுமையில் இருந்து, பெண்மையை வணங்காமல் இருக்க முடியாது.

ஆயினும் புதுமை முற்றிலும் கேலிக்குரிய விஷயமல்ல.

பொருத்தமான இடங்களில் பொருத்தமான விஷயங்களில் அது பழமையை மிஞ்சுகிறது என்பது உண்மையே.

குடும்ப வாழ்வைப் பொறுத்த வரையில், பழமையே நமது நிரந்தர நாகரிகத்தின் சின்னம்.

இந்தப் பழைமையை முற்றிலும் புறக்கணித்து, மாபெரிய பகுத்தறிவாளி-நாத்திகத்தையே உயிர் கொள்கையாகக் கொண்டவர் தலைவர் தங்கசாமி!

தன் மனைவி கோவிலுக்குப் போவதைக் கூட அவர் அனுமதிப்பதில்லை. 'சகஜமாகப் பேச வேண்டும், பழக வேண்டும்' என்று வேறு தன் மனைவிக்குப் போதிப்பார்.

அந்தப் போதனை அவர் மனைவியைக் கெடுக்க வில்லையே தவிர, மைத்துனியைக் கெடுத்துவிட்டது.



அதனால்தான் அவரது மைத்துனி லலிதா, தொழிலதிபர் நாராயணசாமியின் தம்பி குமாரசாமியோடு பெங்களூருக்கு ஓடினாள்.

அவர்கள் இருவரும் காதலித்ததே ஒரு அதிசயம். தலைவரைப் பார்க்க அதிபர் வருவார்; அதிபரோடு அவர் தம்பியும் வருவார்.

அப்போது விஜயா வேதாசலம் அங்கே இல்லாவிட்டால் காப்பி கொடுத்து கவனிப்பது லலிதாவின் வேலை.

குமாரசாமி இளங்காளை. வளரும் போதே நாராயணசாமி, பலருக்குப் பெண் தேடுவதைப் பார்த்துப் பார்த்து வளர்ந்தவன்.

ஆகவே 'காம உணர்வு' என்பது அவனுடைய இரத்தத்தில் ஊறிய ஒன்று.

லலிதா இளம் பெண். தன் அக்காள் இருக்கும்போதே, பல பெண்களோடு அத்தான் தொடர்பு கொள்வதையும், பணக்காரப் பெண்கள் பலரோடு தொடர்பு கொள்வதையும் பார்த்து வளர்ந்தவள்.

ஆகவே 'கட்டுப்பாடு' என்று ஒன்று இருப்பதே இருவருக்கும் தெரியாது.

ஒருநாள் தலைவர் தங்கசாமியைப் பார்க்க நாராயணசாமி வந்தார்; கூடவே குமாரசாமியும் வந்தான்.

அப்போது இரவு மணி ஒன்பது.

வந்திருப்பவர் தொழிலதிபர் அல்லவா? தனது மைத்துனியையே மதுவகைகள் பரிமாறச் சொன்னார் தங்கசாமி. அவளோ குமாரசாமியை ரசித்தபடியே நாராயணசாமிக்குப் பரிமாறினாள்.

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே, 'தான் பாத்ரூமுக்குப் போக விரும்புவதாக' குமாரசாமி சொன்னான்.

பாத்ரூம் படுக்கையறைக்குள்ளேதான் இருந்தது.

"வாருங்கள்" என்று அவரை அழைத்துக் கொண்டு லலிதா படுக்கையறைக்குள் நுழைந்த போது மின்சாரம் அணைந்து போய் விட்டது.

சென்னை நகரில் மின்சாரம் அணைவது ஒன்றும் அபூர்வமான விஷயம் அல்லவே?

"ஐயையோ! மெழுகுவர்த்தியை ஏற்றி வருகிறேன்" என்றாள் லலிதா.

அவள் இடுப்பில் குமாரசாமியின் கை விழுந்தது.

"ஐயையோ! என்ன இது?" என்றாள் லலிதா.

பல படங்களிலும், பத்திரிகைகளிலும் முத்தக் காட்சியை பார்த்த அவளுக்கு அப்போது, முதல் முத்தம் கிடைத்தது.

அவள், மெழுகுவர்த்தியை ஏற்றினாளோ, இல்லையோ, அவளது உள்ளமெனும் மெழுகுவர்த்தி இளகத் தொடங்கிற்று.

அந்தக் கதகதப்பில் இருந்து அவள் விலக முயல்வது போலக் காட்டிக் கொண்டாளே தவிர, உண்மையில் அவளால் விலக முடியவில்லை.

அந்த இருட்டிலும், "வாழ்ந்தால் உன்னோடுதான் வாழ்வேன்." என்று அவன் சத்தியம் செய்தான்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# கனவு

## ஜெ.சூரியன்

மதியம் கயிற்றுக் கட்டிலில் விட்டத்தை வெறித்த வண்ணம் கிடந்த வரதனை அன்னையின் அங்கலாய்ப்பு அசைய வைத்தது. அருகாமையில் நிற்கும் அம்மாவை பார்த்தான். பார்வையில் கனவு நிறைய இருந்தது.

"ஏன் வரதா! இப்பிடியே இருந்தா எப்படி? மாமா கேட்டுக் கேட்டு மனசொடிந்து போகிறார். வருகிற தையிலையென்றாலும் முடித்துவிட வேணும்ங்கிறார். நோய்வேறு அவரைப் படுத்துகிறது!" என்று தன் அண்ணனது விருப்பத்தை- அதன வசியத்தை மெல்லக் கூறினாள், அவனிடம்.

"அம்மா! மாமாவின் விருப்பத்துக்காக உன் ஆசைக்காகவென்று என் கனவுகளைக் கலைக்க முடியுமா? முடியாதம்மா. நான் நினைத்திருக்கிற மாதிரியில்லை சாந்தி!" என்றான் வரதன். 'இவன் என்னமாதிரித்தான் கற்பனை பண்ணி வைச்சிருக்கிறான். கேட்கும்போதெல்லாம் இதேதான் சொல்லுறான். அவள் சாந்திக்கு என்ன குறைச்சல்?' மறுக்கும்போதெல்லாம் கேட்கவேணும் என்று நாவரை வரும் வார்த்தைகளை கேட்க முடியாமல் அவனெழுந்து போய்விடுவதுபோல் அப்போது போய்விடவில்லை! கண்ணைமுடிக் கிடந்தான். இனி எதுவும் கேட்காதே என்பது அதன் அர்த்தம். கேட்டால் எரிஞ்சு விழுவான். நாள் முழுக்க சினிமா தியேட்டரில் வேலை செய்து அலுத்து வந்து படுப்பவனை தொந்தரவு செய்ய அவளுக்கும் முடியாமல் போய்விடுகிறது.

அம்மா போய்விட்டதையுணர்ந்த வரதன் தன் மனதை ஒருமுகப்படுத்தியவனாக நினைவுகளில் சஞ்சரிக்கத் தொடங்கினான்.

அவளை முதன் முதலில் பார்த்தது ஞாபகம் வந்தது. அந்த மலைப்பகுதியிலிருந்த சின்ன ரவுனில் அமைந்திருந்தது அவன் வேலைபார்க்கும் சினிமா தியேட்டர். புதிய படம் ரிலீஸாகினால் கூட்டம் அலைமோதும்.

அந்த மலைவாழ் மக்களின் கடின உழைப்புக்கும், மன உளைச்சலுக்கும் வடிகாலாக அந்த இரண்டரை மணித்தியாலங்கள் இருப்பதென்பதற்கு அப்போது ஏற்படும் நெரிசலே சான்றாகுவதாக அவன் எண்ணுவான்!

அப்படியொரு புதுப்பட ரிலீசின்போது அவள் வந்தாள். தன் சிநேகிதிகளுடன், ரிக்கட்டுக்காக நிற்கும் கியூவைப் பார்த்து மலைத்தவர்களாக ஒதுங்கி நின்றார்கள்.

என்ன அழகு! இங்கே, இந்த மலைப் பகுதியில் இப்படியொரு சௌந்தர்யம் விளைந்து கிடக்கிறதா? அத்தனை ஒயிலாக,



சிலையோவென தெரிந்தாள். பாந்தமாக அவள் மேனியில் பதிந்துகிடந்த சேலை. அது ஓடி நிமிர்த்திய, நெளிவு சுழிவுகள் அவனை மேலும் பைத்தியமாக்கியது.

ரிக்கட்டுக்காக அவர்கள் தடுமாறுகிறார்களென்பதை உணர்ந்த அவன் நெருங்கினான் அவர்களை. வேலை செய்யும் சலுகையை வைத்து சுலபமாக ரிக்கட் எடுத்து தந்தான்.

அழகாக மலர்ந்து சிரிப்பை நன்றியாக தந்துவிட்டு தங்களது செக்ஷனை நாடி போனார்கள். அவள் பின்னழகை இரசித்த வண்ணம் கிறங்கிப்போய் நின்றிருந்தான். போனவள் போவதுதானே-பேசாமல். வாசலில் போய் நின்று திரும்பிப் பார்த்தாள்.

ஒரு விநாடி பார்வை! ஓ! அதில்தான் எத்தனை வர்ணங்கள். காந்தம் போல மனசைக் கௌவியது. அதே மலர்ந்த புன்னகையுடன் மறைந்துவிட்டாள்.

ஆனால் அவனது நிம்மதி குலைந்து போனது. எப்போ புதுப்படம் வந்தாலும் அவளையவன் எதிர்பார்த்தான. ரிக்கட்டுடன். சில வார்த்தைகள். பரிச்சயமான புன்முறுவல்கள். நிச்சயம் அவளும் இவன் போலத்தான் எண்ண அலைகளுடன் நேரத்தை தேடுகிறாளோ என நினைக்க வைத்த பொழுதுகள் ஏராளம். ஏராளம்.

காத்திருந்தால் அம்மாவின் நச்சரிப்புக்கும் மாமாவின் கட்டாயத்துக்கும் கழுத்தை கொடுக்கவேண்டி வந்துவிடலாம். நாளை புதுப்படம் ரிலீஸாக இருக்கிறது நிச்சயம் வருவாள். ரிக்கட்டுடன் காத்திருக்கிறதை இந்த தடவையோடு நிறுத்திக் கொள்ள வேணும். முடிவை அவளிடம் தெரியப்படுத்தி விடவேணும். நினைத்தவனாக கலர், கலரான கனவுகள் மனத்திரையில் தெரிய கண் மூடிப்போனான்.

மறுநாள் பகல் வேளை அதுதான் அவளைச் சந்திக்க அநுகூலமான பொழுது. அழகாக, ரிம்மாக, டிரஸ் பண்ணியவன் உற்சாகமாக அம்மாவிடம் கூறிவிட்டுப் போனான். மனசு துள்ள சீட்டியடித்த வண்ணம் போகும் மகனை புரியாமல் பார்த்தாள் அவன்தாய்.

இயல்பிலேயே வாட்டசாட்டமாய் எடுப்பாயிருக்கும் வரதன், தியேட்டரில் வேலையாட்களுக்கான ரூமிலுள்ள பெரிய கண்ணாடியில் மீண்டுமொரு தடவை தன்னைப் பார்த்து, சீர் செய்தவனாக நேரத்தைப் பார்த்தான். முதல் காட்சி முடிந்து, மறுகாட்சிக்கு உள்ளேவிட ஐந்து நிமிடங்களிருந்தன, அவன் வெளியே வந்தான். கேட் திறந்து வெளியேறும் வழி கசங்கிப்போக, உட்புகும் வழி சலசலப்பு காட்டியது. அவன் கூர்ந்து பார்த்தான். 'இதோ, அதோ, ம்...ஆ..அதோ. அதோ வர்றாள். என்ன. என்ன தனியாகவா? ரொம்ப வசதியாகப் போச்சு' எண்ணங்களின் வண்ணத்தில் தோய்ந்து நின்றவனை அந்தக் குரல் சுயமாக்கியது.

"வரதன் டிக்கட் ப்ளீஸ்?" பார்த்தான் முன்பைவிட அழகாக புதுப்பொலிவும், வெட்கமும் இழையோட பக்கத்தில், பக்கத்தில் யார், யார் கழுத்தைப் பார்த்தான். புதுத்தாலி மின்னியது. ஓ! கனவு கலைந்து தெளிவுக்கு வர சிலகணங்கள் பிடித்தன அவனுக்கு.

'என்னடா இவன் போனதுபோல திரும்பிவிட்டான். சில நாட்களாகவே இவனதுபோக்கு சரியாக இல்லை. கேட்கவும் முடியவில்லை. கேட்டா சொல்லவா போகிறான்? என மகனை கேள்வியாக பார்த்து நின்றாள் அவனம்மா.

"என்னம்மா அப்பிடிப் பார்க்கிறீர்கள்? நீங்க நேத்து கேட்டதுக்கு நான்பதில்தரலை. அதான் சொல்லிவிட்டுப்போக வந்தன், மாமாவுக்கு சொல்லிவிடம்மா தையிலை கல்யாணத்தை வைக்கச்சொல்லி." கூறிவிட்டுப்போகும் மகனை புரியாமல் பார்த்தாள் அவள்.

'க்கும் எப்பவுமே எங்களைப் போன்றவர்களுக்கு புரியாது இவர்களது கனவுகள், கற்பனைகள் என்னவென்று.' அந்த தாய் மனசு நினைத்துக் கொண்டது.

# ஒவ்வொரு நாளும் துயரம்!



## செ.குணரத்தினம்

முகத்துவாரம் உடைப்பெடுத்திருந்தது. வருடாவருடம் நடைபெறுகின்ற நிகழ்வு இது.

மார்கழி மாதத்தில் பெய்கின்ற மழையினால் ஊரெல்லாம் வெள்ளம் போடும். வயல் வரம்புகள் எல்லாமே வெள்ளநீரில் அமிழ்ந்து போகும். பள்ளவளவுகள், தெருக்கள்யாவும் ஆறாகக் காட்சி தரும். ஏரி, குளம் குட்டையெல்லாம் வயிறு நிரம்பிப் போய்க் கிடக்கும்.

வெள்ள நிவாரணம் அது இது என்ற கதைகளும் ஊருக்குள் அடிபடும். மழையும் பாட்டம் பாட்டமாக இரைத்துக் கொட்டும். "தொழிலுக்குப் போக முடியவில்லையே!" என்று மீனவர்களெல்லாம் குடிசையினுள்ளேயிருந்து கண்ணீர் வடிப்பார்கள். உழவர்களெல்லாம் "ஐயோ எங்கள் வேளாண்மையெல்லாம் அழிந்து போய்விட்டதே!" என்று தலைகளில் கை வைப்பார்கள்.

இந்த நெருக்கடியான வேளையில்தான் மட்டக்களப்பு முகத்துவாரம் உடைப்பெடுக்கும், அப்படி உடைப்பெடுக்கத் தவறினால் எல்லோருமாகச் சேர்ந்து அரசாங்க அதிபரிடம் முறையிட்டு முகத்துவாரத்தைத் திறந்து, வெள்ளநீரைக் கடலுக்குள் பாய்ந்து செல்ல வைப்பார்கள்.

அந்த வருடம் ஆற்றுவாய் தானாகவே திறந்து கொண்டது. என்றாலும் மழை ஓய்ந்தபாடாகத் தெரியவில்லை. இதனால் மீனவர்களால் தொழில் செய்யவும் முடியவில்லை.

எப்போது இனப்பிரச்சனை ஏற்பட்டதோ அன்றிலிருந்து மீனவர்களுக்கும் கடல், ஆற்றுக்குள் இறங்கி முறையாகத் தொழில் செய்ய வாய்ப்பில்லாமலேயே இருந்து வருகிறது. ஆழ்கடலில் குறிப்பிட்ட எல்லைக்கப்பால் போய் மீன் பிடிக்க முடியாது. ஆற்றுக்குள்ளும் இரவில்போக முடியாது.

இரவு வேளைகளில்தான் மீன், இறால் அதிகமாக வரும். அதுவும் முகத்துவாரம் உடைப்பெடுத்தால் மீன், இறாலுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நிறையப் பிடிபடும். சட்டம் ஒருபக்கம். இயற்கை அனர்த்தம் மறுபக்கம் மீனவர்களைச் சூழ்ந்து, அவர்களை பஞ்சம் பட்டினி என்று சாகடித்துக் கொண்டிருந்தது.

முத்தனும், முரளியும் நண்பர்கள், இளங் குடும்பம். வருவது சித்திரை வருடப்பிறப்பு, அன்றாடம் காய்ச்சவே வழியில்லை.

முத்தன் முரளியைத் தேடிக் கொண்டு வந்தான். "மச்சான் சட்டத்தையும், மழை காற்றையும் பார்த்துக் கொண்டிருந்தால் பட்டினி நம்மைக் கொன்றுவிடும். முகத்துவாரம் உடைப்பெடுத்து ஓடுகிறது. போனால் நிறைய மீன் பிடிக்கலாம். இன்றிரவு இருவரும் போகலாம் வருகிறாயா?" என்று கேட்டான் முத்தன். மீன்கறி சமைத்தே ஒரு மாதத்திற்கும் மேலாகிவிட்டது. துணிவை வரவழைத்துக்கொண்டு, "சரி வா போகலாம்!" என்றான் முரளி.

இரவல் வலை, தோணி, தள்ளிக் கொண்டு இருவரும் ஆற்றில் வலை கட்டச் சென்றார்கள்.

நேரம் பத்துமணிக்கும் மேலாகிவிட்டது. இரவில் அந்தக் கிராமம் தூங்கிக் கொண்டிருந்தது.

எவருக்கும் தெரியாமல் முத்தனும், முரளியும் முகத்துவாரத்திலிருந்து வெகு தொலைவில் கல்லடிப்பாலத்தை நெருங்கி வலையை ஆற்றுக்குள் இறக்கிவிட்டு, தோணியில் இருந்து கொண்டார்கள்.

நீரோட்டம் மின்வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. வலையோடு சேர்ந்து தோணியும் ஆற்றுவாயை நோக்கி இழுபட்டுக் கொண்டிருந்தது.

கண்ணிமை வெட்டித்திறப்பதற்கிடையில் கடலலைகளின் பேரிரைச்சல் கேட்டது.

"மச்சான் முத்தா; ஆற்றுவாய்க்குள் வந்துவிட்டோம்! கெதி பண்ணி வலையை இழுத்து, தோணியில் ஏற்று!" என்று கத்தினான் முரளி.

இருவருமாக வலையை இழுத்து ஏற்றுவதற்கிடையில் வலையும், தோணியும் ஆற்றுவாய்க்குள் வந்துவிட்டது. வலையை முற்று முழுதாக அவர்களால் இழுத்து தோணியில் ஏற்றமுடியவில்லை.

"மச்சான் முரளி! இனிமேல் நம்மால் எதுவும் செய்ய முடியாது! தோணியும், வலையும் கடலோடு போனால் போகட்டும்! இருவரும் எப்படியாவது நீந்திக் கரையேறுவோம்!" என்றான் முத்தன்.

முரளியால் அப்படிச் செய்ய முடியவில்லை.

தோணியும் இரவல், வலையும் இரவல்.

"இல்லமச்சான் நம்ம இருவருக்கும் நன்றாக நீந்தத் தெரியும்தானே! எப்படியும் வலையை இழுத்து, தோணியில் ஏற்றிவிட்டு, கடல்பக்கமே நீரோடு நீராகத் தோணியை வலித்துச் சென்று புன்னக்குடாப் பக்கம் போனால் நீர் ஆறிவிடும். அதன்பிறகு கரையில் தோணியை இழுத்து வைத்துவிட்டு, காலையில் வரலாம். நம்மை நம்பி வலையையும், தோணியையும் தொழில் செய்யத் தந்தவனுக்கு அநியாயம் செய்யலாமா?" என்றபடி முரளி வலையை இழுப்பதிலேயே கருத்தாகவிருந்தான்.

அவ்வளவுதான் தெரியும். தென்னைமர உயரத்தில் எழுந்து வந்த கடலலை அப்படியே தோணியைப் புரட்டிக் கவிழ்த்துவிட்டது.

முகத்துவாரக் கரையில் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சில மீனவர்கள் கடல்லாம்பு வெளிச்சத்தைத் தூக்கிப் பிடித்து, "இந்தப் பக்கம் நீந்திவாருங்கள்." என்று பலமாகக் கத்திக் கொண்டே நின்றார்கள். அவர்கள் நின்ற இடம், முத்தனும் முரளியும் தோணியில் கிடந்து அவதிப்பட்ட இடமும் அவ்வளவு தூரமில்லை.

கையில் எறிகயிறு இருந்தால் தூக்கியெறிந்து, அவர்களை பிடிக்க வைத்து இழுத்து எடுத்திருக்கலாம். ஆனால் அந்த நேரம் அவர்களிடம் கயிறு இருக்கவில்லை. துள்ளிப் பாய்ந்து நீந்திச் சென்று அவர்களைக் காப்பாற்றவும் முடியவில்லை.

நீரில் விரலை வைத்துப்பிடித்தால் இரண்டு துண்டுகளாக வெட்டிவிடும் வேகத்தில் ஆற்று நீர் பாய்ந்து கொண்டிருந்தது. இறுதியில் முத்தனும், முரளியும் தோணி கவிழ்ந்துபோக வலையால் மூடப்பட்டு மாண்டுபோனார்கள். எவ்வளவோ நீச்சல் தெரிந்தவர்களாக அவர்கள் இருந்தும் காலன் அவர்களைக் கவர்ந்து கொண்டான். விடிந்தது.

மனைவி, பிள்ளைகளெல்லாம் கடற்கரையில் கிடந்து மாரடிக்க, ஊரவர்களெல்லாம் இயந்திரப்படகுகளை எடுத்துக் கொண்டு தேடினார்கள். பிரேதங்கள் அகப்படவேயில்லை.

நாட்களை எண்ணி, மாதங்களை எண்ணி, வருடங்களையும் எண்ணியாயிற்று, இன்னும்தான் அவர்களது எலும்பைக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கண்ணதாசன் எழுதிய அந்தச் சினிமாப்பாடலை இன்று கேட்டாலும் முத்தன் முரளி குடும்ப உறவினர்களுக்கு இன்றும்தான் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுக்கிறது.

"கரைமேல் பிறக்க வைத்தான் எங்களை கடல் மேல் பிழைக்க வைத்தான். தரைமேல் இருக்கவைத்தான் பெண்களை கண்ணீரில் குளிக்க வைத்தான். ஒருநாள் போவார் ஒரு நாள் வருவார் ஒவ்வொரு நாளும் துயரம்!"

எவ்வளவு அனுபவம் பொதிந்த பாடல், உண்மைதான். மீன்களைப் பற்றித் தெரிந்த பிறருக்கு மீனவர்களின் துயரங்களைப் பற்றி இன்னும்தான் தெரியவில்லையே. நெருப்பும் சோறும்தான் அவர்கள் வாழ்வு.

# சுமை

## மு.கலை

முருகேசுவுக்கும் மங்களத்திற்கும் இறுதியாகக் கிடைத்த வாரிசு நிரோஷா. அவள் உயர்தரம் படித்ததுடன் படிப்புக்கு நிறுத்தற்குறியை வைத்துவிட்டு வீட்டிலேயே தாய்க்குத் துணையாய் இருந்துவிட்டாள்.

நிரோஷா கல்யாண வயதெல்லையைத் தொட்டதிலிருந்து வரன் தேடும் படலம் ஆரம்பமானது. சாதகப் பொருத்தமும் சீதனப் பொருத்தமும் ஒத்து வராது பல சம்பந்தங்கள் தவறிப்போய்க் கொண்டிருக்கையிலேயே இன்று பெண்பார்க்க வருபவர்களின் சம்பந்தம் கிடைத்தது.

காய்ச்சல் தலையிடியென்றால் வருபவர்களிடம் சொல்லிக் கொள்ளமுடியும். தொய்வு வருத்தம் சுவாசத்துடன் சம்பந்தப்பட்டது சில வேளை ஆயுசுவரை ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு வியாதி. இதனால் இதனை ஒரு குறையாகவே கருதிக் கொள்வார்கள் என்பதனால்தான் முருகேசுவும் மங்களமும் பயந்து கொண்டிருந்தார்கள்.



"பிள்ளை! பிள்ளை..!" என தூக்கத்தை அணைத்துக் கொண்டிருந்த நிரோஷாவை மெதுவாக மங்களம் எழுப்பினாள்.

அவள் மெது மெதுவாக கண்களைத் திறந்து பார்த்தாள். "எப்படியிருக்கு?" என்ற தாயின் கேள்விக்குப் "பரவாயில்லை" என தலையசைப்பின் மூலமே பதில் சொன்னாள்.

"அவங்க வாற நேரமாகுது. எழும்ப முடிஞ்சா எழும்பி வெளியிலை வா பிள்ளை!" என்றாள் தாய்.

"என்னாலை முடியுதில்லையம்மா. தலை சுத்துது!" என நிரோஷா சொன்னது மங்களத்தின் காதுக்குள் தெளிவாகக் கேட்காததிலிருந்து அவளது உடல்நிலையை உணர்ந்த தாய், தொடர்ந்தும் அவளை படுக்கவிட்டு வெளியே வர ரகுவும் தாயும் புன்னகை பூத்த முகத்துடன் உள்ளே வந்து கொண்டிருந்தனர்.

முகத்தில் வலிந்து வரவழைத்துக் கொண்ட சந்தோசத்துடன் அவர்களை முருகேசுவும் மங்களமும் வரவேற்றனர். உபசரித்தனர்.

வந்தவர்களுடன் முருகேசு உரையாடிக் கொண்டிருக்க மங்களம் அவர்களுக்கு பல காரங்களைப் பரிமாறிவிட்டு அவர்கள் பருகுவதற்கு குளிர் பானத்தை எடுத்துவந்தாள்.

ரகுவின் தாய் குளிர் பானத்தை எடுத்தவாறே "எங்கை மருமகளைக் காணோம்?" என்றாள்.

கணவனை ஒரு தடவை நோக்கிவிட்டு. "பிள்ளைக்கு உடல் நிலை சரியில்லை. அதுதான் படுத்திருக்கிறாள். இந்த நல்ல நேரத்திலை இதை எப்படி உங்களுக்கு சொல்லுறதெண்டு யோசிச்சுக்கொண்டிருந்தம்!" என தயங்கியவாறே சொன்னாள்.

"இதிலை என்ன இருக்கு? எல்லாருக்கும் வருத்தம் வாறதுதானே? இப்ப எங்கை பிள்ளை?" என்றவாறே எழுந்து நிரோஷாவின் படுக்கையை நோக்கி நடந்த தாயைத் தொடர்ந்து ரகுவும் சென்றான்.

ரகுவின் தாயினது பதில் முருகேசுவிற்கும் மங்களத்திற்கும் இனிப்பைக் கொடுத்தது. அவர்களும் உள்ளே வந்தார்கள். ரகுவின் தாய் ஆதரவுடன் நிரோஷாவின் நெற்றியில் கைவைத்தாள் அவளது தொடுகையால் நிரோஷா மெல்லக் கண்விழித்துக் கொண்டாள்.

"இப்ப எப்படி இருக்கு?" என்று ரகுவின் தாயினது கவனத்தை அங்கிருந்த மருந்து வில்லைகள் தொட்டன.

"இது தொய்வுக்குப் பாவிக்கிற குளிசையல்லோ? பிள்ளைக்குத் தொய்வு வருத்தம் இருக்குதெண்டு இவ்வளவு நாளைக்கு ஒருநாளாவது எங்களுக்குச் சொன்னீங்களா?" என்றவாறே எழுந்த ரகுவின் தாயினது முகத்தில் கோபத்தின் கோடுகள் தெரிந்தன.

"சின்னவயதிலை அவளுக்குத் தொய்வு இருந்ததுதான். எங்கடை பராமரிப்பிலை பிறகு அது இல்லாமப் போனது. பல வருடங்களுக்குப் பிறகு இண்டைக்குத்தான் முதன் முதலா வந்திருக்கு. சின்ன வயதிலை இல்லாமல்போன இந்த வருத்தம் திரும்ப வருமென்று எதிர்பார்க்கவேயில்லை. சம்பந்தம் பேசேக்குள்ளை இந்த வருத்தம் இருந்தால் நாங்கள் சொல்லாமல் விட்டிருப்பமா?" என பணிவாகவும் நிதானமாகவும் சொல்லி முடிக்க எவருமே எதிர்பாராத வார்த்தைகள் ரகுவின் தாயின் வாயிலிருந்து வெளிப்பட்டன.

"நீங்க சொல்லுறது உண்மையோ பொய்யோ எண்டு நான் விசாரிக்க விரும்பேல்லை. இந்தவருத்தம் வந்தால் அதுவும் ஆயுசு வரைக்கும் அதுவுமே கூட வரும். அதனாலை உங்க மகள் மட்டுமல்ல. உங்கடை மகளோடை சேர்ந்து என்ரை மகனும் காலம் பூராவும் கஷ்டப்படவேணும். உங்கடை மகளைக் கல்யாணஞ் செய்து ஏன் வீணா ரகுவும் கஷ்டப்படவேணும்? எங்களை மன்னிச்சுக் கொள்ளுங்க. உங்கடை பிள்ளைக்கு நீங்க வேறை இடத்திலை மாப்பிளை பாருங்க" என்று ரகுவின் தாய் "வா போவம்!" என்று விட்டு வாசலை நோக்கி நடந்தாள். அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல்,

முருகேசுவும் மங்களமும் செய்வதறியாது சிலையாகி நின்றனர்.

"கொஞ்சம் நில்லுங்கம்மா" என்று ரகுவின் வார்த்தை தாயின் கால்களின் இயக்கத்திற்கு தடைபோட்டு நிறுத்தியது.

"அம்மா! கணவன் மனைவி ஒருவருக்கொருவர் அன்புடனும் ஒருவருடைய கஷ்டத்திலை மற்றவர் பங்கெடுத்தும் வாழ்ந்தால்தான் அந்த வாழ்க்கையிலை எமக்கு ஆத்ம திருப்தி கிட்டும். வருத்தம் ஒரு மனிதனை எப்பவந்து ஒட்டிக் கொள்ளும்? எப்ப விலகிச் செல்லும், என்பது எங்கடை கையிலை இல்லை. நாளைக்கு எனக்கு ஒரு கடுமையான வருத்தம் வந்து நான் கஷ்டப்படமாட்டன் என்பது என்ன நிச்சயம்? அந்த நேரம் எனக்கு உதவியா இருக்கப்போறது எனக்கு மனைவியா வாறவதான். அந்த மனைவி நிரோஷாவாத்தான் இருக்க வேணும் என்ற என் முடிவில் மாற்றமில்லை. என்னுடைய வாழ்க்கையில் உங்கடை சொல்லை முதல் தடவையா தட்டுறதுக்காக என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கம்மா!" என்ன ரகு தனது பார்வையை நிரோஷாவின் முகத்தில் பதித்தான்.

நிரோஷாவின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர்த்துளிகள் அவளது வருங்கால கணவருக்கு நன்றி சொல்லும் ஆனந்தக் கண்ணீராய் வீழ்ந்து கொண்டிருந்தன...

இல்லறத்தில் ஒருவர் கஷ்டத்தில் மற்றவர் பங்கெடுப்பது சுமையல்ல. சுகமே!


படிப்பகம்

www.padippakam.com

# மலரே ஓ மலரே

## இலக்கிய நயம்

### தருவது ரசிகன்



களத்து மேட்டில்
போர் ஓய்வு!

இனி விடிந்த பின்தான்
போர் மூளும்!

கண்களை மூடினான்
கலியன்!

தூக்கம் வரவில்லை
ஏக்கம் வந்தது!

கண்ணயர நினைக்க
கனவு வந்தது!

நூல் கொண்ட இடை-இரு
கால் கொண்ட படை!
பால் பொங்கும் நகை! இரு
தேன் சிந்தும் சுளை!

அவள் தான்-அது
அவள் தான்!

இரவு ஓயும்வரை
வாயை சுவைத்திருந்தும்,
தாகம் தீரவில்லை என்று,
தேகம் துடிப்பெடுக்க
பாயை விட்டகல மறுத்து-பிடி
வாதம் பண்ணியதை நினைத்தான்!

மாதம் பலவாயும் அந்த
மாயம் தீரவில்லை என வியந்தான்!

இரு குடங்கள் தழுவி
பெரு வேள்வியில் மூழ்கி
உருக்கொண்டாடியதை
கருக்கல் பொழுதினில் நினைத்தான்!

தேன் மொய்க்கும் இதழ்;
சுவைத்திட்டால்-
மனதை மயக்கும் சுழல்!

காண்கின்ற வயிற்றுச்சுழி;
கைதொட்டால் மனதில் களி!

கொய்யாத கனிகள் தனி
மொய்யாது விட்டால்;
மனதில் வரும் பிணி!

இடையாலே சுமக்கும்
கனி!
சுமையாலே சரியும்
இடை!

படைபோல அவள்
வருவாளே!
தடைபோட முடியாது
விழிகளுக்கு!

நெருங்கி நின்றேன்-அவள்
மருளவில்லை!
நிமிர்ந்து நின்றாள்-நான்
மிரண்டு விட்டேன்!

நெஞ்சினில் இரு படை
கொண்டவளே!
வெஞ்சமர் படைகளை
விடக் கொடியவளே!

மெல்லத் தழுவ நழுவிடுவாள்
கொல்லத் துடிக்கும் விழியாலே
கொத்தி என்னை எடுத்திடுவாள்!

மரம் அவள் கொடி நான்!
தழுவிடும் போதும் அதுதான்!

பற்றிப் படரும் கொடியை
பற்றுடன் ஏற்கும் மரம் அவளே!

மரத்தை தழுவி படருகையில்
மதத்தை ஊட்டும் கனியிரண்டு!
வரத்தை அவளிடம் கேட்டாலோ
முகத்தை மூடி சிரிப்பாளே!

ஈர இதழில் தேன் உண்ண
ஓர விழிகளால் அவள் நாண
தீர காவியம் படைப்பதுபோல
பூரா இரவும் நாம் மூழ்வோம்!

முகக் கண் இரண்டு
அகக் கண் ஒன்று
முக் கண் இருந்தும்
முழுவதும் அறியேன்!

கற்றது பாதி
கல்லாதது மீதி!

கண்டது பாதி
காணாதது மீதி!

உணர்ந்தது கையளவு
உணராதது கடலளவு!

சுவைத்தேன் ஒரு துளி
சுவைக்காதது பெருமளவு!

மகிழ்ந்தேன், மலைத்தேன்,
விழுந்தேன், வியந்தேன்,
கலந்தேன், களித்தேன்,
அணைத்தேன், நனைந்தேன்,
தொலைந்தேன், தொலைத்தேன்,
மறந்தேன் நான்
எனையே மறந்தேன்!

கடலா? சமுத்திரமா?
காமம்
கடலா? சமுத்திரமா?

எண்ணி எண்ணி
வியந்தான்
கலியன்
எண்ணி எண்ணி
வியந்தான்!

காமக் கடலில்
துடுப்பும் நாமே!

காமக் கடலில்
தோணியும் நாமே!

காமம் இனிது
காதலில் ஊறிடும்
காமம் இனிது!

பூவினில் ஊறிடும்
தேனினைப் போல
காதலில் ஊறும்
தேனே காமம்!

மலரிலும் இனியது
வண்ணத்திச் சிறகிலும்
மெல்லியது காமம்!

காமத்தை நன்கு
உணர்ந்தவர்
தறிகெட்டு அலையார்!
காதலில்லாத இடத்தில்
காமத்தை தேடார்!

காதலுடன் காமத்தை
நுகர்ந்தவர்கள்
காவியுடன் சந்நியாசம்
தேடியதில்லை!

பெண்ணை காதலுடன்
அடைந்து களிப்பவர்கள்
பேய் என்று பிணங்கி
நாய்போல அலைவதில்லை!
அதனை ஞானம் என்று
சொல்லி ஏய்ப்பதில்லை!

கலியனுக்கு
பெண் எதிரியல்ல!

கலியனுக்கு
காதல் கசப்புமில்லை!

அதனால் காமமும்
திகட்டவில்லை!

ஆட முடியாதவள்
மேடை சரியில்லை
என்று ஒட நினைத்தாளாம்!

பெண்ணை ஆணும்
ஆணைப் பெண்ணும்
ஒருவருக்கொருவர்
ஆள முடியாதபோது
காமம் திகட்டுகிறது!

ஆசை அறுபது நாள்
மோகம் முப்பது நாள்
என்று பொய்மில்
புகலிடம் தேடுகிறது!

காதல் மிகுந்தவரின்
ஆயுள் முழுவதும்
மோகம் முடிவதில்லை!
அவர்கள் வாழும் வரையும்
ஆசைகள் அழிவதில்லை!

காமத்தை முள்ளாக
நினைப்பவர்
காயம் அடைவதுண்டு!

காமத்தை மலராய்
கையாளத் தெரிந்தவர்
மாயம் புரிவதுண்டு;
வாழும் வரை அவர்கள்
வாழ்வை இரசிப்பதுண்டு!

கலியனும் அப்படித்தான்;
களத்திலும் அவனுக்கு
காதல் துணைவியின்
நினைப்புத்தான்
வீர முனைப்புக்கும்
தூண்டிக் கொண்டிருந்தது!

**"மலரினும் மெல்லியது காமம் சிலர் அதன்**
**செவ்வி தலைப்படு வார்."**

அதிகாரம்: 129, குறள்: 1289

## ஸ்போர்ட்ஸ்

# முதலிடத்தில் ட்ராவிட்

சியட் உலக கிரிக்கெட் வீரர்கள் தர வரிசையில் இந்திய வீரர் ராகுல் ட்ராவிட் முதலிடத்தில் இருக்கிறார். உலகக் கோப்பை கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடிய ட்ராவிட் 22 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



உலகக் கோப்பைப் போட்டியில் சிறப்பாக விளையாடிய ஸிம்பாப்வே வீரர் நீல் ஜோன்சன் 21 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இருக்கிறார். உலகக் கோப்பைத் தொடரில் ஆட்ட நாயகனான தென்னாபிரிக்காவின் லான்ஸ் குளூஸ்னர் 19 புள்ளிகளுடன் 3வது இடத்தில் உள்ளார்.

சியட் தரவரிசையில் முதல் 10 இடங்களைப் பெற்ற வீரர்களும் அவர்கள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரங்களும் வருமாறு:

| வீரர் | | புள்ளிகள் |
|---|---|---|
| 1. ராகுல் ட்ராவிட் | (இந்தியா) | 22 |
| 2. நீல் ஜோன்சன் | (ஸிம்பாப்வே) | 21 |
| 3. லான்ஸ் குளூஸ்னர் | (தென்னாபிரிக்கா) | 19 |
| 4. ஸ்டீவ் வோ | (அவுஸ்ரேலியா) | 16 |
| 4. சௌரவ் கங்குலி | (இந்தியா) | 16 |
| 6. மார்க் வோ | (அவுஸ்திரேலியா) | 15 |
| 6. சயிட் அன்வர் | (பாகிஸ்தான்) | 15 |
| 8. ஜக் கலிஸ் | (தென்னாபிரிக்கா) | 14 |
| 9. ரொபின் சிங் | (இந்தியா) | 13 |
| 9. ஹெர்ஷல் கிப்ஸ் | (தென்னாபிரிக்கா) | 13 |

# மறுபடி கிடைத்தன

உலகக்கோப்பை வெற்றிக்குப் பின் அவுஸ்திரேலியா திரும்பிய மைக்கல் பெவனின் உடமைகள் (கிரிக்கெட் கிட்) காணாமல் போயின. பின் அவை கிடைத்து விட்டன.

சிட்னி நகரத்தில் உள்ள அவரது வீட்டில் பொருட்களை வைத்திருந்த பையை வைத்து விட்டு வெளியே சென்று, மீண்டும் அவர் வீட்டிற்குத் திரும்பும்போது அவை காணாமல் போய்விட்டன.

அந்தப் பையில் அவுஸ்திரேலிய அணியினர் கையெழுத்திட்ட உலகக் கோப்பைப் போட்டியில் விளையாடிய உடைகள், கிரிக்கெட் பேட்கள், மற்றும் தலைக்கவசங்கள், தொப்பிகள், கையுறை, சப்பாத்துக்கள் இருந்தன.

காணாமற்போன பொருட்களை ஒப்படைத்தால் 5 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் (சுமார் 2 இலட்சத்து 30 ஆயிரம்) சன்மானம் தரப்படும் என்று அறிவித்தார் பெவன். அவர் அறிவித்த 24 மணி நேரத்திற்குள் காணாமற்போன உடமைகள் கிடைத்து விட்டன.

உலகக் கோப்பை போட்டியில் பெற்ற-நினைவு கூரத்தக்க வெற்றிச் சின்னங்கள் மறுபடி கிடைத்ததில் மகிழ்ச்சியடைந்தார் பெவன்.

# 3 நாடுகள் போட்டி

வருகின்ற ஒக்டோபர் மாதம் 13ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை 3 நாடுகள் கலந்துகொள்ளும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் ஷார்ஜாவில் நடைபெறவுள்ளன.

இதில் இலங்கை, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய 3 அணிகள் பங்கு பற்றுகின்றன என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தப் போட்டிக்கு முன்னர் இலங்கை இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய 3 நாடுகள் கலந்துகொள்ளும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் வருகின்ற ஒகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளன.

# சிறந்த நடுவர்

இங்கிலாந்தில் நடந்து முடிந்த 7வது உலகக் கோப்பைப் போட்டியில் சிறந்த நடுவர் இந்தியாவின் வெங்கட்ராகவன் என ஐ.சி.சி. சபை தீர்மானித்துள்ளது.

அவுஸ்திரேலியா-பாகிஸ்தான் விளையாடிய இறுதிப்போட்டியில் இங்கிலாந்தின் டேவிட் ஷெப்பேர்ட்டும், மேற்கிந்தியத் தீவுகளின் ஸ்டீவ் பக்னரும் நடுவர்களாக இருந்தனர்.

ஆனால், முதலில் வெங்கட்ராகவனின் பெயர்தான் பரிசீலிக்கப்பட்டது. பாகிஸ்தான் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியதால் வெங்கட்ராகவனுக்கு அந்த வாய்ப்புக் கிட்டவில்லை.

# சிந்தியா பதில்கள்

◆ **பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்புக்கு தெரியாமல் பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவுக்குள் ஊடுருவ திட்டம் வகுத்தது உண்மையா?**

கே.திவாகரன், கொழும்பு-15.

ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அப்படி கூறியிருக்கிறார். ஆனால் அது சாத்தியமில்லை. ஆயிரக்கணக்கானோர் ஊடுருவியுள்ளனர். எனவே நீண்டகாலமாக முகாம்கள், பயிற்சிகள் என்பன பாகிஸ்தானில் இருந்துள்ளன. இவையெல்லாம் ஏன்? எதற்கு என்றுகூட தெரியாதளவுக்கு பாகிஸ்தான் பிரதமர் இருந்திருப்பார் என்பது சிறுபிள்ளைத்தனம். நவாஸ் ஷெரிப்போடு வாஜ்பேய் கைகுலுக்கியதையும், பஸ் பயணத்தையும் பாரதிய ஜனதா பெரிதாக பிரசாரம் செய்தது அல்லவா? அதனால் வாஜ்பேய் ஏமாந்து போனார் என்று பிரசாரம் எழாது தடுக்க பெர்னாண்டஸ் அப்படிக் கூறியிருக்கலாம். ஆனால் போர் முனைகளுக்கு விஜயம் செய்து, கடும் கருத்துக்களைக் கூறிய நவாஸ் ஷெரிப்- பெர்னாண்டஸ் கருத்தை முறித்துப் போட்டுவிட்டார்!

★★★

◆ **புலிகள் மீதான தடையை அமெரிக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளதே?**

கோ.அல்போன்சா, கல்கிசை.

உறுதிப்படுத்தவில்லை. அமெரிக்க சட்ட வரம்புகளுக்குள் அதுபற்றித் தீர்ப்புக்கூற முடியவில்லை என்றுதான் தெரிவித்திருக்கிறது! தடுத்தது சரிதான் என்றால் அதனைக் கூறியிருக்க முடியும்.

அமெரிக்காவின் நீதிபற்றி பெரிதாகப் பேச ஒன்றுமில்லை. அமெரிக்க நலன்களுக்கு மாறுபடாத நீதிதான் நிலவுகிறது என்பதற்கு தீர்ப்பு வாசகங்கள் உதாரணம்.

★★★

◆ **டாக்டர்களது வேலை நிறுத்தம் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

க.சிவரஞ்சனி, திருமலை.

நியாயமற்றது! அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் போராட்டத்தை எப்படி ஆதரிக்க முடியும்? டாக்டர்கள் நியமனங்கள் மற்றும் விடயங்களில் அரசியல் தலையீடுகளை எதிர்த்துப் போராடினால் அது நியாயம்! ஆதரிக்கலாம்!

★★★

◆ **பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இலஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்படுகிறதே? உண்மை இருக்குமா?**

எ.ப். அன்வர், புத்தளம்.

இருக்காது! இலஞ்சம் என்பது சிலருக்கு மட்டும்தான் கொடுக்கப்படலாம்! அணியை மொத்தமாக விலைக்கு வாங்க முடியாது! அது பரகசியமாகிவிடும்! இறுதி ஆட்டத்தில் சகலருமே சொதப்பிவிட்டனர். ஆடு கள நிலவரம், அவுஸ்திரேலிய அணியின் அபாரமான பந்துவீச்சு என்பனவும் காரணம் எனலாம்! தவிர, வாசிம் அக்ரம் நன்றாகத்தானே பந்து போட்டார்! அக்ரம்தான் அணியை இறுதிப் போட்டிவரை கொண்டு சென்றவர் என்பதையும் மறந்துவிட்டு கொடும்பாவி கொளுத்தி இருப்பது கொடுமையப்பா!

★★★

◆ **கொழும்பு திரையரங்குகளில் படம் பார்க்க முடியாது போலிருக்கிறதே? (கண்றாவி)**

எஸ்.ஜெயஸ்ரீ, கொழும்பு-09.

திரையில் மட்டும் கண்களையும், காதுகளையும் எறிந்துவிட்டு புலனடக்கத்துடன் இருந்தால் பயமில்லை! திரையரங்க குட்டிக் கதை ஒன்று:

ஒருவன் தன் மனைவியுடன் படம் பார்க்கப் போனான். படம் ஆரம்பித்தது. தன் மனைவியோடு வளவளவென்று பேசிக் கொண்டிருந்தான். அதனால் படத்தில் பேசும் வசனங்கள் அருகிலிருந்தவர்களுக்கு புரியவில்லை.

பின்னால் இருந்த ஆள் எழுந்து, "யோவ்! ஆரம்பித்ததில் இருந்தே பேசிக்கொண்டு இருக்கிறீர்களே. ஒரு வார்த்தைகூட புரியவில்லை!" என்று கத்தினான்.

உடனே கணவன் எழுந்து: "மடையா! புருஷன் பொண்டாட்டிக்குள்ளே ஆயிரம் இருக்கும். உனக்குப் புரிவது மாதிரி சத்தமாகவா பேசமுடியும்?" என்று அவனைவிட பலமாகக் கத்தினான்.

★★★

◆ **சரியாக தமிழை உச்சரிக்கத் தெரியாதவர்கள் அறிவிப்பாளர்களாகிறார்களே?**

வே.விஜயகுமார், நீர்கொழும்பு.

உண்மைதான்! உச்சரிக்க மட்டுமல்ல, சரியாக எழுதக்கூடத்தான் தெரியவில்லை! 'நில்மா' என்பதை 'நிள்மா' என்று 'சக்தி' விளம்பரத்தில் எழுதிக் காண்பிக்கிறார்கள். பல வாரங்களாகியும்கூட பளிச்சென்று தெரியும் அந்தத் தவறு உறுத்தவில்லையா? ஒரு சிலர் தவிர பொதுவாகவே புது அறிவிப்பாளர்கள் பலர் அவசரத் தெரிவாக இருப்பதால் தமிழ் உச்சரிப்பு தடுமாறுகிறது.

சமீபத்தில் படித்து வியந்த ஒரு விடயம்:

"தமிழ் மொழியில் உள்ள சொற்களை அர்த்தத்துடன் அறிந்துதான் அமைத்துள்ளார்கள். 'பழம்' என்ற வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்களேன். 'ப' என்று சொல்லும்போது வாயைத் திறக்கிறோம். 'ழ' என்று சொல்லும்போது நாக்கு உள்ளே மடிகிறது. 'ம்' என்று சொல்லும்போது பழம் உள்ளே போய்விடுகிறது!"

★★★



'கண்ணு படப் போகுதய்யா' படத்தில் விஜயகாந்த்–சிம்ரான்

◆ **அரியாலைப் புதைகுழி பற்றி அரசு மட்டுமல்ல, மனித உரிமை அமைப்புக்களும் ஏன் மௌனம் சாதிக்கின்றன?**

சி.தர்மலிங்கம், யாழ்ப்பாணம்.

மருந்துக்கு வலியோ, புண்ணுக்கு வலியோ? நம்மவர்கள் உரத்துக் குரல் கொடுத்தால்தானே அயலவர்கள் எட்டிப் பார்ப்பார்கள்? செம்மணி புதைகுழி விவகாரத்திலும் அப்படித்தானே நடந்தது!

★★★

◆ **உங்களைக் கவர்ந்த வில்லன் யார்?**

கி.ரம்லத், கொழும்பு-13.

கொசு!

★★★

◆ **'முரசு' வியாபார ரீதியில் வெற்றி பெற்றதைக் கூறி வயிறு எரியும் சில பத்திரிகைகள் பற்றி?**

கே.உதயகுமார், கனடா

பாவம், முயன்று தோற்றவர்கள் முனகத்தான் செய்வார்கள்! அதுதான் 'முரசு' பற்றி வசைபாடி வயிற்றெரிச்சலுக்கு மருந்து தேடிக்கொள்ளட்டுமேன்! தாம் ஏதோ சமபளம் இல்லாது பொதுசன சேவை செய்வது போன்றும் மற்றவர்கள் எல்லாம் சுயநலவாதிகள் என்றும் கருதிக்கொள்ளும் உரிமை கூடவா அவர்களுக்கு இல்லை?!

★★★

◆ **பெண்களை பலவீனமானவர்கள் போல கிண்டல் செய்யும் ஜோக்குகளைப் போல ஆண்களைக் கிண்டல் செய்யும் ஜோக்குகள் இல்லையா?**

ஏ.நித்யகலா, வெள்ளவத்தை

உண்டு! பத்திரிகை, மற்றும் தொடர்பு சாதனங்களில் ஆண்களே கூடுதலாக ஆதிக்கம் வகிப்பதாலும், அந்த ஆண்கள் பலருக்கு 'பெண்விடுதலை' என்பதும், பெண்களை சக மனுஷியாக மதித்தல் என்பதும் கேலியாக தெரிவதாலும் பெண்களைக் கிண்டல் செய்யும் ஜோக்குகள், கருத்துக்கள் என்பவற்றுக்கு முன்னுரிமை தருகிறார்கள்.

இதோ ஆண்களைக் கிண்டல் செய்யும் ஒரு 'ஜோக்':

ஒரு கம்பனியின் கம்பியூட்டர் பிரிவு. கம்பியூட்டரில் புள்ளி விபரங்களை இறக்கி நிகழ்ச்சி செய்யும் ஒரு பெண்மணி, தன் கம்பியூட்டரில் கொஞ்சிக் கொண்டே வேலை செய்வார்.

"டேய் ராஜா. இந்தப் புள்ளி விபரங்களை வாங்கிக்கோடா. நல்லா பாதுகாப்பியா கண்ணா?" என்பார்.

இதைக் கவனித்த மேலதிகாரி, "ஏனம்மா! ஆணைக் கொஞ்சுவது போல் கொஞ்சுகிறாயே! கம்பியூட்டர் ஆண் ஆகத்தான் இருக்க வேண்டும் என்று எப்படி முடிவு செய்தாய்?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண் கூறினாள்: "இந்தக் கம்பியூட்டருக்கு எந்த ஒரு விஷயத்திலும் ஒவ்வொன்றையும் நாம் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. சொந்தமாக ஏதாவது செய்கிறதா? நாம் சொன்னால்தான் செய்கிறது! அப்படியானால் இது ஆண் தானே!"

★★★

◆ **விஜயகாந்த் வயதானவர் போல படங்களில் தெரிகிறாரே? மேக்-அப்பில் கவனம் செலுத்துவதில்லையோ?**

பூ.கர்ணன், கொழும்பு-10.

55 வயதிலும் துள்ளிப் பாய்ந்து நடித்த எம்.ஜி.ஆரின் இளமை தற்போதைய நாயகர்களிடம் இல்லை என்பதே என் கருத்து!

★★★

◆ **இலங்கை அணிக்கு சனத் கப்டனாக வந்தால் மாற்றம் இருக்குமா?**

பி.சுரேஸ் கண்ணா, மட்டக்குளி.

அவர் கப்டனாவதே மாற்றம் தானே! அது தவிர பெரிய மாற்றம் எதுவும் உடன் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. இலங்கை அணிக்கு மறுபடி பயிற்சியாளராக வட்மோர் நியமிக்கப்பட்டிருப்பது அணிக்கு ஊக்கமளிக்கும்!

★★★

◆ **பழைய படங்கள்போல புதிய படங்கள் இல்லையே?**

கே.என்.கிருஷ்ணகுமார், சுவிஸ்

ஒட்டுமொத்தமாக அப்படிக் கூறிவிட முடியாது! 'காதல் கோட்டை', 'காதலுக்கு மரியாதை' என்று உதாரணங்களே பல உண்டு!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 07

ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரான் எண்ணற்ற உபதேசங்களை மக்களுக்கு அருட்பிரசாதமாக வழங்கினார். பரலோக இராச்சியம் பூமியிலேயும் நிலை பெறுவதற்கேற்ற வகையில் மக்களை



வழிநடத்திச் சென்றார். இதனால் ஆண்டவரால், தமது மக்கள் என்ற உரிமை பாராட்டப்பட்ட இஸ்ரயேல், யூத மக்களில் பலரைத் தவிர வேற்று நாட்டவர்கள், வேற்று இனத்தவர்கள் பலரும் இயேசுவின் போதனைகளை ஏற்று மனம் திரும்பி, நல்வழி நடக்கலாயினர்.

இத்தகைய நன்னெறிகளை ஏற்க முடியாத மக்கள், இயேசுவின் பால் மக்கள் கொண்டுள்ள விசுவாசத்தையும் ஈடுபாட்டையும் கண்டு பொறாமை கொள்ளத் தலைப்பட்டனர். இயேசுவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் குறை கூறுபவர்களாகவும் கிண்டல் செய்பவர்களாகவுமே இருந்தனர்.

"யூதா மக்கள் ஏற்கனவே கடைப்பிடித்து வந்த நடவடிக்கைகளுக்கு விரோதமாக இந்த மனிதர், தனது சொந்தக் கருத்துக்களையே கூறிவருகிறாரே!" என்று மனம் புழுங்கினர். யூதர்களை எகிப்திலிருந்து மீட்டு வந்த மோசேயிடம் கடவுளால் கொடுக்கப்பட்ட நெறிமுறைகளை அடியொற்றியே தாம் மக்களிடம் கருத்துக்களைக் கூறிவருவதாக இயேசுபிரான் எவ்வளவோ தடவைகள் எடுத்துக்கூறியும் அவர்கள் நம்புவதாகயில்லை. இதனால் திருச்சட்ட ஆசிரியர்கள் எனத் தங்களைக் கூறிக் கொள்வோரும் பரிசேயர்களும், இயேசுபிரான் செல்லும் இடங்களுக்கெல்லாம் தமது ஒற்றர்களையும் அனுப்பி வைத்தார்கள் அவர்களுள் பலர் இயேசுபிரானின் திருவாயிலிருந்து வெளி வரும் வார்த்தைகளின் உண்மையினை உணர்ந்து தமது போக்கினை மாற்றிக் கொண்டார்கள். வேறு சிலர் இயேசுபிரான்மீது அவதூறுகளைக் கூறியதுடன், இல்லாதவை பொல்லாதவை எல்லாவற்றையும்- தம்மை இப்பணிக்கு ஏவிவிட்டவர்களிடம் கூறி வந்தனர்.

### கப்பர்நாகும் கடற்கரையில்

கடலில் படகுகளில் சென்ற இயேசுவின் சீடர்கள், கடும் காற்றினாலும் எழுந்து மோதிய அலைகளினாலும் பயந்தவண்ணம் பயணத்தைத் தொடர்ந்தனர். அப்போதுதான், தம்மைப் படகுகளில் செல்லுமாறு பணித்த இயேசுபிரானுக்கு என்ன நடந்திருக்குமோ என்று கிலி கொள்ளலாயினர். அப்போது தான் கடற்கரையிலிருந்து ஓர் ஒளிச்சுடர் தங்களை நோக்கிக் கடலில் வந்து கொண்டிருப்பதை அவதானித்தனர்.

ஏற்கனவே கடும் காற்றாலும் கடல் அலைகளினாலும் அச்சமடைந்திருந்த சீடர்களுக்கு கடலின்மீது தம்மை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்த ஒளிக்கீற்று மேலும் பயத்தை ஏற்படுத்தியது. இவ்வேளையில் அந்த ஒளி உருவில் வந்தவர் இயேசு பிரான்தான் என்பதனைக் கண்டனர். அவர்களுள் சிலர் பயம் நீங்கப்பெற்ற போதும் வேறு சிலர் பயம் நீங்கப்பெறாதவர்களாகவே காணப்பட்டனர். இதற்கிடையில் இயேசுபிரான் படகுகளுக்கு மிக அண்மையில் வந்து விட்டார். பயமடைந்திருந்தவர்களைப் பார்த்து, "அஞ்சாதீர்கள்! நானே தான்!" என்றார். தங்களுடன் ஏதாவது ஒரு படகில் வந்து ஏறிக் கொள்ளுமாறு இயேசுவிடம் கேட்டனர். ஆனால் அதற்கு அவகாசமே இருக்கவில்லை. மிக வேகமாக எல்லாப் படகுகளும் கப்பர்நாகும் கடற்கரையை வந்தடைந்து விட்டன.

கடற்கரையை வந்தடைந்த சீடர்களுக்கு வியப்புக்கு மேல் வியப்பு ஏற்பட்டது. அங்கும் பெருந்திரளான மக்கள் காணப்பட்டனர். இயேசுபிரானைத் தரிசிக்கவும் அவர் தம் போதனைகளைச் செவி மடுக்கவுமே அங்கு மக்கள் திரண்டிருந்தனர். இயேசுவின் வருகைக்காக அவர்கள் நெடுநேரமாகக் காத்துக் களைப்படைந்திருந்தனர் என்பதும் தெரிய வந்தது. இயேசுபிரான் கடல் மீது ஒளிக்கீற்றாக நடந்து வந்ததையும் அம்மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். இயேசுவைக் கண்டதும் அவர்களுடைய பசி, தாகம், களைப்பு எல்லாமே அவர்களைவிட்டு அகன்றுவிட்டன.

இருப்பினும் சீடர்களில் சிலருக்கு, மக்கள் கூட்டத்தைக் கண்டதும் வேறொரு கவலை

## வாழ்வு தரும் உணவு



இராஜகுமாரன்

தோன்றலாயிற்று. இத்தனை மனிதர்களின் பசியையும் தாகத்தையும் போக்க உணவு தேடியாக வேண்டுமே என்ற கவலை அவர்களை வாட்டியது. முதல் நாளன்று இயேசுபிரானின் அருளுரையைக் கேட்பதற்குக் கூடியிருந்த ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்களுடைய பசியைத் தீர்க்க இயேசுபிரான் நிகழ்த்திய அற்புதச் செயலை அவர்கள் ஏனோ எண்ணிப் பார்க்க முடியாதிருந்தனர்.

### திருவார்த்தைகள் பற்றி ஒரு வார்த்தை

*வாசகர்களுடைய கவனத்திற்குச் சில வார்த்தைகள்: தேவகுமாரனருளிய திருவாக்கியங்கள், திருவிவிலியம் எனும் வேதாகம நூலில் மொழிபெயர்க்கப்பட்டுத் தரப்பட்டுள்ளன. யாவரும் விளங்கிக் கொள்ளத்தக்கதாகத் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மாற்றங்களைச் செய்யாமல், நூலில் உள்ளபடியே தருவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதனால், அவற்றை அப்படியே தருகிறோம்.*

உணவைப் பற்றிய கவலையில் மூழ்கியிருந்தவர்களைப் பார்த்து இயேசுபிரான்:

**அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலையான உணவு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிட மகன் உங்களுக்காகக் கொடுப்பார். ஏனெனில் தந்தையாகிய கடவுள் அவருக்கே தமது அதிகாரத்தை அளித்துள்ளார்! கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கேற்ற செயலாகும்!"**

இவ்வாறு இயேசுபிரான் தெரிவித்தார்.

இவ்வார்த்தைகள் அங்கு குழுமியிருந்த மக்களுள்-குறை காண்பதற்காகவே வட்டமிட்டுத் திரிந்தவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. எகிப்தில் அடிமை வாழ்விலிருந்து மோசேயால் விடுவிக்கப்பட்டு வரும் வழியில் பாலை நிலத்தில்- பசியால் வாடிய தம் முதாதையருக்கு மன்னாவை அளித்தார் என்று மறை நூல் கூறிய கூற்றைச் சுட்டிக்காட்டி இயேசுபிரானிடம் அவர்கள் வாதித்தனர்.

இதற்குப் பதிலளிக்குமுகமாக இயேசுபிரான்,

**"வானிலிருந்து உங்களுடைய மூதாதையர்களுக்கு உணவளித்தவர் மோசே அல்ல; வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவினை அருளியவர் என் தந்தையே! கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது.**

இயேசு இவ்வாறு கூறியதும் சீடர்களில் ஒருவர், "இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்!" என்று கேட்டார். இயேசு அப்போது இப்படிக் கூறினார்,

**"வாழ்வு தரும் உணவு நானே! என்னிடம் வருபவருக்குப் பசியே வராது, என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இருக்காது. ஆனால் நான் உங்களுக்குச் சொன்னவாறே நீங்கள் என்னைக் கண்டிருந்தும் நம்பவில்லை. தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் என்னிடம் வந்து சேருவர். என்னிடம் வந்து சேருபவரை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன். ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல; என்னை உங்களிடம் அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்.**

**அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல், இறுதி நாளில் அனைவரையும் உயிர்த் தெழச் செய்தல் வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுள்ளம். மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலையான வாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுள்ளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த் தெழச் செய்வேன்!"**

இவ்வாறு இயேசுபிரான் கடவுளைத் தனது தந்தை என்றும் கடவுளாலேயே அனுப்பி வைக்கப்பட்டவர்தான் என்றும் கூறிய வார்த்தைகள், எதனையும் நம்பாமல், எல்லாவற்றையும் எதிர்த்துப் பழகிப் போன யூதா மக்களுக்கு 'எரியும் தீயிலே எண்ணை ஊற்றியது' போலாயிற்று. அவர்கள் தங்களைப் போலவே யூத தம்பதியினரான யோசேப்புக்கும் மரியாளுக்கும் தாங்களறியப் பிறந்து, தங்களைப் போலவே வாழ்ந்தவர் தானே! அவ்வாறிருக்கும் போது "விண்ணகத்திலே இருந்து இறங்கி வந்தவர்," என்று கூறுகிறாரே! என்று முணுமுணுத்தனர்.

இவர்களுடைய சந்தேகத்தைப் போக்குதற்கேற்ற வகையில் இயேசுபிரான் மேலும் சில வார்த்தைகளைக் கூறினார்.

### என் சதையும் இரத்தமும்

**"என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது. என்னிடம் வருபவரை நானும் இறுதி நாளில் உயிர்த் தேழச் செய்வேன்! தந்தைக்குச் செவி சாய்த்து அவரிடமிருந்து கற்றுக் கொண்ட அனைவரும் என்னிடம் வருவர். வாழ்வு தரும் உணவு நானே! இந்த உணவை எவராவது உண்டால், அவர் என்றுமே வாழ்வர்.**

**எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். எனது இரத்தத்தைப்பானபாகப்பருகத் தருகிறேன எனது சதையை உண்டு, எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு என்றும் இணைந்திருப்பர்!"**

இயேசுபிரான் கப்பர்நாகுமில் இவ்வாறு அன்றைய தினம் கூறியவார்த்தைகளின் உட்பொருளைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் மேலும் குழப்பமடைந்தனர். அவர்களால் இயேசு பிரானுடன் சேர்ந்து கொண்டிருக்கவும் முடியவில்லை. ஆகவே இயேசு அனைவருக்கும் பொதுவாகச் சில வார்த்தைகளைக் கூறினார்.

**"வாழ்வு தருவது தூய ஆவியே நான் கூறும் வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன. அவ்வாறிருந்தும் உங்களில் சிலர் என்னை நம்பவில்லை!"** என்று கூறினார். இவ்வாறு கூறியதும் இயேசுவால் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு சீடர்களைத் தவிர ஏனையோர் அவரைவிட்டு விலகிச் சென்றனர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு-ஆ] 04 விடை: சீமோனும் அந்திரேயாவும்.**

**பரிசு பெறுவோர்:**

1. **இ.ஜோக்கிம்ராஜ்,** ரொசிட்டா தோட்டம், கொட்டகலை.
2. **பொ.வினாயகமூர்த்தி,** 93,'தேசிகர் வீதி', காரைதீவு-10.
3. **செல்வன் ரி.விஜயகுமார்,** 05,கெமுனு மாவத்தை, நுவரெலியா.
4. **ஏ.எச்.எம்.:.பரீஸ்,** இல.285R/7, முள்ளிப்பொத்தானை.
5. **சி.ம.செஞ்சுடர்,** 157/6, சிறிகதிரேசன் வீதி, கொழும்பு-13.

**திருமறை [பு.ஆ] 07** வினா :- இயேசு தனது தந்தை என்று யாரைக் குறிப்பிடுகிறார்?

ஜூலை.10 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.07—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# இரகசிய மடல்



மாண்புமிகு....

செம்மணிப் புதைகுழியைத் தோண்டும் முடிவை பகிரங்கமாக வரவேற்கும் அதே நேரம் இரகசியமாக வன்மையாக கண்டிக்கிறோம்.

மக்கள் எதனையும் மறந்துவிடும் பழக்கமுள்ளவர்கள். மேலும் ஒரு ஆறுமாதம் தாக்குப் பிடித்திருந்தால், வேறொரு பெரிய பிரச்சனை வராமலா போயிருக்கும்? அப்போது செம்மணியை யாழ் மக்கள் மறந்து தொலைத்திருப்பார்கள்! இப்போது குழியைத் தோண்டி எப்போதும் மறக்க முடியாமல் பண்ணிவிட்டீர்களே!

போதாக்குறைக்கு அந்தப் பாவி ராஜபக்ஷ புதிது புதிதாக புதைகுழிகள் இருப்பதாக புட்டுப் புட்டு வைக்கிறான்! நீங்களும், நாமும் காதில் விழாதது போல இருந்தாலும், இந்தப் பத்திரிகைகள் மக்களை விழிப்பூட்டும் கெட்ட காரியத்தை செய்து கொண்டிருக்கின்றன.

ராஜபக்ஷவை விரைவில் தூக்கில் போட முடியாதா? அவன் தூக்கில் தொங்க முன்னர் மக்கள் நம்மை தூக்கியெறிய வைத்துவிடுவான் போலிருக்கிறது!

தங்களுக்கு என்ன? வடக்கு-கிழக்கு வாக்குகளையா நம்பியிருக்கிறீர்கள்? ஆனால் நாம்..? வடக்கு-கிழக்கு மக்கள் ராஜபக்ஷ செய்த கொடுமைகளைக்கூட மன்னிக்க தயாராக உள்ளனர். உண்மைகளை கூறிவிட்டானாம்! ஆனால் எங்களை?

புதைகுழிகளை தோண்டுமாறு நீங்களும்தானே கோரிக்கை விட்டீர்கள் என்று தாங்கள் கேட்கக்கூடும்.

நாம் தோண்டுமாறு கேட்டுக் கொண்டேதான் இருப்போம். நாங்கள் என்ன வெளியுலகத்திடமோ கேட்டோம். மன்னிப்புச் சபையிடமா கோரினோம்? உங்களிடம்தானே கோரினோம்! நாம் கேட்பதுபோல கேட்க, நீங்கள் 'விரைவில் நடக்கும்' என்று சொன்னாலும், சொல்லாவிட்டாலும், நீங்கள் சொன்னதாக நாங்கள் பத்திரிகைகளுக்கு புளுக, அது செய்தியாகி மக்கள் காதுகளுக்கு பூக்களாக சென்றடைய, கால வெள்ளம் செம்மணி பிரச்சனையை கரைந்து போகச் செய்திருக்கும்.

தயவு செய்து அரியாலை, கொட்டடி புதைகுழிகளையும் தோண்டி எங்களுக்கு மிஞ்சியிருக்கும் செல்வாக்கையும் நோண்டி விடாதீர்கள்!

நாங்கள் 'தோண்டுங்கள்' என்று கேட்பதை, வேண்டுதல் என்று நினைத்து நிறைவேற்றிவிடாதீர்கள்.

தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் குழிகள் தோண்டுவது, தங்களை சற்றும் தளராது ஆதரிக்கும் எமக்கும் குழி தோண்டுவதைப் போன்றது.

எங்கள் எதிர்க்காலத்தை பற்றி தாங்கள் கவலை கொள்ளாதுவிட்டாலும் நாங்கள் தங்களைப் பாதுகாக்க தலையால் நடக்கிறோம்.

குழி தோண்டப்பட்ட பின்பும் தங்கள் மீது ஒரு சிறு குறைகூட தெரிவிக்காமலும், நாங்கள் இதற்கு பொறுப்பேற்குமாறு கோராமலும் அமைதிகாத்தோம் என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளோம்.

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தி எங்களைப் பதவியில் அமர்த்தியிருந்தாலாவது பிறவிப் பயனை அடைந்திருப்போம்.

அதனையும் செய்யாது எங்கள் வாக்குகளில் புதைகுழி மண்ணை அள்ளிப் போட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் கீழ்ப்படிவுள்ள
-சமரசவாதிகள்-




## சொற்களுக்கு ஏற்றபடி எழுதிப் பார்த்தால் இப்படித்தான் இருக்கும்!





காதிலலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)


பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331




# நாயகன்

← தென்னாபிரிக்க அணியின் 'நாயகன்' என்று அழைக்கப்பட்டவர் டரில் கலினன். 32 வயது.

டெஸ்ட் போட்டியில் 275 ஓட்டங்களை குவித்தவர். டெஸ்ட் போட்டிகளில் தென்னாபிரிக்க வீரர் ஒருவர் குவித்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை அதுதான். நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் அது பெறப்பட்டது.

நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியிலும் 56 பந்துகளில் 94 ஓட்டங்களை குவித்து தூள் கிளப்பினார். அதில் 7 சிக்ஸர்களும், 5 பவுண்டரிகளும் அடக்கம். இத்தனை அசத்தலான ஆட்ட நாயகன் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் ஏமாற்றிவிட்டார்.

தென்னாபிரிக்க அணி உகிண்ணத்தை தவறவிட்டதற்கு கலினன் நன்கு பிரகாசிக்காததும் ஒரு காரணம் எனலாம்.

அரைவிறுதிப் போட்டியில் ஒரே ஒரு ஓட்டத்தால் வெற்றியை கோட்டை விட்டது தென்னாபிரிக்கா. குளுஸ்னர் தவிர வேறு யாரும் நம்பிக்கையாக ஆடவில்லை.

அரைவிறுதியில் கலினன் நன்கு ஆடியிருந்தால் அணி வெற்றியை பெற்றிருக்கும்.






SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


# சாதனை



← உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு வில்லன் ஷேன் வோர்ன் தான். இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை சரியச் செய்த வில்லனும் இவர்தான். அரையிறுதி, இறுதிப் போட்டி இரண்டிலும் நாயகனாக தெரிவாகி தன் மதிப்பை உயர்த்திக் கொண்டார். இரண்டிலும் தலா 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். ✫







→ ஏழாவது உலகக் கோப்பை கிரிக்கெட் கிண்ணம் தகுதியான அணியிடமே சென்றுள்ளது.

அவுஸ்திரேலிய அணி சூப்பர் சிக்ஸ் போட்டிகளுக்குப் பின்னர் தன் வலிமையை சற்றும் ஊசலாட்டமின்றி நிரூபிக்கத் தொடங்கியது.

பந்துவீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் அவுஸ்திரேலிய அணி சிறப்புற்று திகழ்ந்தது. ஸ்டீவ் வோவ் தான் சிறந்த கப்டன் என்று நிரூபித்துவிட்டார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் ஸ்டீவ்வோவ் சதம்போட்டார். அந்த 120 மறக்க முடியாத அதிரடி ஆட்டம்.

ஸ்டீவ்வோவ்வின் சகோதரர் மாக் வோவ் என்ன சளைத்தவரா? அவரும் இம் முறை சதம் போட்டார். அவுஸ்திரேலிய அணியில் இம்முறை சதம் போட்டவர்களும் இந்த இரட்டையர்கள்தான். இவர்களுக்கு 34 வயது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் மொத்தம் நான்கு சதங்கள் போட்டவர் என்ற உலக சாதனையையும் மாக்வோவ் படைத்திருக்கிறார்.

ஸ்டீவ்வோவ் கிரிக்கெட் வீரர் என்று தான் நாம் அறிவோம். அவருக்கு இன்னொரு பக்கமும் இருக்கிறது. ஸ்டீவ்வோவ் சிறந்த மனிதாபிமானி. இந்தியாவிலுள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கும் ஏராளமான உதவிகள் செய்துள்ளார். உலகக் கோப்பையில் வெற்றி பெற்றதும் இந்தியாவில் கல்கத்தா அநாதை சிறார் இல்லத்தில் இருந்து இரண்டு பெண் குழந்தைகளை தத்து எடுத்துள்ளார் ஸ்டீவ் வோவ். ✫

↑ இம்முறை உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அதிரடி ஆட்டம் ஆடியவர் அடம் கில்கிறிஸ்ட்.

28 வயதான இந்த அதிரடி ஆட்டக்காரர்மீது கப்டன் ஸ்டீவ்வோவுக்கு அபார நம்பிக்கை. கப்டனின் நம்பிக்கையை காப்பாற்றும் விதமாக 36 பந்துகளை சந்தித்து 54 ஓட்டங்களை குவித்தார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் நடைபெறும் போட்டிகளில் இவரது ஆட்டத்தைக் காணலாம்.

இதுவரை 60ற்கு மேற்பட்ட போட்டிகளில் விளையாடி இரண்டாயிரம் ஓட்டங்களை நெருங்கி வருகிறார். இவற்றில் 3 சதங்களும், 7 அரைச் சதங்களும் அடங்கும்.

சிறந்த விக்கெட் காப்பாளர். தற்போது விளையாடி வரும் விக்கெட் காப்பாளர்களில் அதிக சதங்கள் குவித்தவர் இவர்தான்.

ஆசிய மைதானங்களில் இவரது மட்டை சுழன்று வீசும்.

அவுஸ்திரேலிய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான போட்டிகள் பரபரப்பாக எதிர்பார்க்கப் படுகின்றன.

சென்ற உலகக் கோப்பை சாம்பியனும், நடப்பு சாம்பியனும் மோதும்போது எதிர்பார்ப்பு இருக்கத் தானே செய்யும். வெற்றி தோல்வியை தீர்மானிப்பதில் அடம் கில்கிறிஸ்ட்டின் பங்கும் இருக்கும். ○

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

(06.07.99)

செல்வன் சஷ்டி பிரகாஸ் விஜயபாலன்



யாழ் நல்லூரைச் சேர்ந்த விஜயபாலன் சுபாஷினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் **சஷ்டி பிரகாஸ்** தனது முதலாவது பிறந்த நாளை 17.07.99 அன்று சனிக்கிழமை சுவிஸ் தூன் நகரிலுள்ள Kirchgemeindehaus Markus Schurstrasse 45 B, 3604 THUN. மண்டபத்தில் மாலை 6 மணியளவில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்கா, நல்லூர் அப்பப்பா, அப்பம்மா, கொக்குவில் பாலன் மாமா, ராணிமாமி, சாமிலன் மச்சான், சாமிலி, சுனித்தா, மச்சாள்மார், நல்லூர் ஈசன் மாமா, கௌரிமாமி, கார்த்தி, கவி மச்சான்மார், மச்சான், சுவிஸ் AARAU சசி சித்தப்பா, வதனி சித்தி, சுவிஸ் தூன் தயாமாமா, வதனி மாமி, சமிக்கா, உமாசிகா, மச்சாள்மார், நல்லூர் நந்தன் சித்தப்பா, சித்தி, தம்பிமார், தங்கச்சி, சண்டிலிப்பாய் அம்மப்பா, அம்மம்மா, சிவப்பிரகாஷ், அப்பம்மா, சசிமாமா, ரமீனா அத்தை, பிரியாந்தி, பிரதுஷ்சா, மச்சாள்மார், சாமிபிரகாஷ் மச்சான், ஆனந்தன் சித்தப்பா, சுகந்தி சித்தி, தம்பி சிந்துஜன், குட்டி மாமா, சந்திரன் LONDON ஆசைமாமா (செந்தில்), ஜேர்மனி ரதீன் குடும்பம், நோர்வே மகேஷ் குடும்பம், பூட்டி, பூட்டன்மார், மாமன்மார், சித்திமார், அப்பம்மாமார், மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் சஷ்டி குட்டியை நல்லை கந்தன் சீரணி நாகம்மை அருள்பெற்று பல்கலைகளும் கற்று சீரும் சிறப்புடனும் நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: G. செந்தில்நாதன் (LONDON) T.P. 01816604821 விஜயபாலன் (சுவிஸ்) T.P. 033 2220901




↑ உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் தவறவிட்டாலும், வாசிம் அக்ரம் சாதனை படைத்திருக்கிறார். உலகக் கிண்ணப் போட்டிகளில் இதுவரை அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் அக்ரம்தான். மொத்தம் 41 விக்கெட்டுக்கள்.

இதேபோல உலகக் கிண்ண போட்டிகளில் இதுவரை அதிக ஓட்டங்களை குவித்தவரும் பாகிஸ்தான் வீரர் ஜாவித் மியான்டாட்தான். 33 போட்டிகளில் மொத்தம் 1083 ஓட்டங்களை குவித்துள்ளார். ○


அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில்

'கார்த்திகன் கோல் டெலிபோன் காட்'

இலங்கைக்கு 18 நிமிடம் பேசுவதற்கு, 10 கனேடியன் டொலர் மட்டுமே!




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாற, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூலை 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.